REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஏப்ரல் 18 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 90 | Tuesday 18, April, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## நுவரெலியாவில் மலர்க் கண்காட்சி



வசந்த காலத்தை முன்னிட்டு வருடந்தோறும் நுவரெலியா மாநகரசபை ஏற்பாடு செய்யும் மலர்க் கண்காட்சி இவ்வருடமும் விக்டோரியா பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று (17) திங்கட்கிழமை இம்மலர்க் கண்காட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நுவரெலியாவில் தற்போது வசந்த காலத்தை முன்னிட்டு நடைபெறும் களியாட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் வருவது அதிகரித்துள்ளது. இதன் ஒரு கட்டமாகவே வருடந்தோறும் மலர் கண்காட்சி நடைபெறுகிறது. இம்முறை விக்டோரியா

06

### 2,50,000 அமெ.டொலர் முதலீடு செய்யும்

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிக்கு 05 அல்லது 10 வருட Golden Visa

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலுள்ள உள்ளூர் வங்கியொன்றில் 2,50,000 அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும் சுற்றுலாப் பயணிக்கு ஐந்து அல்லது பத்து வருட காலங்களுக்கான கோல்டன் விசாவை விநியோகிப்பதுடன் குடியுரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் புதிய வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

அதிகரித்த வருமானம் கொண்ட சுற்றுலாப்

06

## பங்களாதேஷின் கடனை மீளச்செலுத்த மேலும் ஆறு மாத கால அவகாசம்

### மத்திய வங்கி ஆளுநர்கள் கலந்துரையாடல்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பங்களாதேஷிடமிருந்து நிதி பரிமாற்ற வசதி திட்டத்தின் கீழ் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள 200 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை மீளச் செலுத்துவதற்கான காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. பெற்றுக் கொண்டுள்ள மேற்படி கடனின் முதலாவது தவணையை கடந்த மார்ச் மாதத்தில் மீள செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது. இந்நிலையில், இதுவரை கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாத காரணத்தால் முதலாவது தவணையை செலுத்த அரசாங்கத்தினால் முடியாது போயுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய பின்னணியில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள

06

### சுமார் 3,593 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான

# 179 Kg ஹெரோயினுடன் ஆறு பேர் அதிரடி கைது



### தென்பகுதி ஆழ்கடல் மீன்பிடி படகொன்றில் பயணிக்கையில் மடக்கிப் பிடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

3,593 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 179 கிலோ போதைப் பொருளுடன் 06 சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஆழ்கடல் மீன்பிடிப் படகொன்றில் இலங்கை கடற்பரப்பில் வைத்து சந்தேக நபர்கள் 06 பேரையும் போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர், அரச புலனாய்வு பிரிவினரின் தகவல்களை

06



### கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குடா இராவணா பிரதேசத்திலிருந்து 132 கடல்மைல் தூரத்தில் வைத்து படகுடன் அறுவர் கைது

## இலங்கையின் அபிவிருத்திக்கு சீன அரசு தொடர்ந்தும் ஆதரவு



சீனாவின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதித் தலைவர் டெங் போசிங் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கிடையிலான விசேட

06



### 5,000 ரூபா போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது

02

## 23 சுற்றுலா இலக்குகளில் இலங்கையும் உள்ளீர்ப்பு

இவ்வாண்டில், 2023 இல் பயணிக்க வேண்டிய சிறந்த 23 இடங்களில் இலங்கையும் உள்ளடங்கியுள்ளது. இப்புதிய பட்டியல் போர்ப்ஸ் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா நிறுவனம் தெரிவித்துள்ளது.

விருது பெற்ற பயணத் திரைப்படத் தயாரிப்பாளரும் சர்வதேச சுற்றுலாத் துறையின் முக்கிய உறுப்பினருமான Juliana Broste இத்தகவலை வெளியிட்டுள்ளார். சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்கு சிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையை அறிவித்துள்ளார். அவரது வழிகாட்டுதலிலே, இலங்கை போர்ப்ஸ்

06

## சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுமதி; குழுவின் முடிவைப் பொறுத்தே தீர்மானம்



இலங்கையிலிருந்து 1,00,000 குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் தீர்மானம் விவசாய அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு எடுக்கும் முடிவைப் பொறுத்தே எடுக்கப்படுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, சீனாவிலுள்ள விலங்கியல் பூங்காவுக்கு இலங்கை குரங்குகளை வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழுவொன்று விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களின் எழுத்து மூலமான கோரிக்கையின் படி, சீனாவில் உள்ள 1,000 விலங்கியல் பூங்காக்களுக்கான குரங்குகளின்

06

## பதுளை சிறைச்சாலையிலிருந்து தப்பிய ஒன்பது பேரில் இருவர் கைது

### சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பதுளை, தல்தெனவிலுள்ள இளம் குற்றவாளிகளுக்கான திறந்தவெளி சிறைச்சாலையிலிருந்து ஒன்பது கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்களில் இருவரை மீண்டும் கைது செய்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். நோன்பு நோற்றிருந்த கைதிகளே நேற்று அதிகாலை இவ்வாறு தப்பிச் சென்றனர். இதையடுத்து அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து கைது செய்யும் நடவடிக்கைகளில் சிறைச்சாலை அதிகாரிகள் ஈடுபட்டனர். இதற்கிணங்க அவர்களில் இருவர் நேற்று மதியம் கைது செய்யப்பட்டனர்.

போதைப் பொருள் குற்றச்சாட்டுகளின் பேரிலேயே இவர்கள் திறந்தவெளி சிறைச்சாலையில்

06

### தொழில்நுட்பக் கோளாறு, முப்பது மணிநேரம் தாமதமான விமானம்



அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் தொழில்நுட்பக் கோளாறுக்குள்ளான ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானம், சுமார் 30 மணி நேரம் தாமதமாக நேற்று (17) காலை கட்டுநாயக்கா

06

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில்

## 26 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி பாரிய விபத்து!



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 26 வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளாகின. தொடங்கொட நுழைவாயிலுக்கருகில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் சுமார் 26 வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதியுள்ளன.

06

## புனித ஹஜ் யாத்திரைக்காக 105 ஹஜ் முகவர்கள் சட்ட ரீதியாக தெரிவு


**மொரட்டுவை மத்திய விசேட நிருபர்**



2023 ஆம் ஆண்டுக்கான புனித ஹஜ் யாத்திரிகளை அழைத்துச் செல்ல முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இலங்கை ஹஜ் குழுவும் 105 ஹஜ் முகவர்களை சட்ட ரீதியாக தெரிவு செய்துள்ளதாக திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம்.பைஸல் தெரிவித்தார்.

இவ்வருட ஹஜ் கடமையை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஹஜ் முகவர்களினூடாகவே, புனித ஹஜ் செல்லவுள்ளோர்

06



அரசியலுக்காக போராடுவோர்

### வினாத்தாள்களை திருத்த போராட்டம் நடத்த வேண்டும்

02



### உள்ளூர் முட்டை விலையை குறைக்க தீர்மானம்!

02

அதிவேக நெடுஞ்சாலைகளில்

## 48 மணி நேரத்தில் ரூ.07 கோடி வருமானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிவேக நெடுஞ்சாலைகளில் நேற்று அதிகாலை 06 மணிவரையிலான 48 மணி நேரத்தில் 07 கோடியே 55 இலட்சத்து 8,100 ரூபா வருமானமாக பெறப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின்

06

## கார் விபத்தில் வெளிநாட்டுப் பெண் பலி, இருவர் காயம்



கம்பளையிலிருந்து ஹெம்மாதகம நோக்கிச் சென்ற கார், வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில்

06

## சீ.வி. விக்கினேஸ்வரன் எம்.பி தமிழ் அரங்கத்திற்கு ஆதரவு

### மனோ எம்.பி. தெரிவிப்பு



"பாராளுமன்ற தமிழ் அரங்கம்" என்ற முன்மொழிவுக்கு, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர், சீ. வி. விக்கினேஸ்வரன் எம்.பி தனது ஆதரவை மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார். இதன்படி டெலோ, டிபிஎல்எப்,ரிஎம்கே ஆகிய கட்சிகள் தமது அதிகாரபூர்வ ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முரளிதரனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும்

## '800' திரைப் படத்தின் முதற்பார்வை நேற்று

### தமிழ், ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் விரைவில்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர், சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும்

06


## இவ்வருடத்தின் முதலாவது அரிய சூரிய கிரகணம் 20 இல்

### அவுஸ்திரேலியாவில் தெளிவாக தென்படும்



முதலாவது சூரிய கிரகணமாக இவ்வருடம் 2023 ஏப்ரல் 20இல், அரிய வகை சூரிய கிரகணமொன்று ஏற்படவுள்ளதாக நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் தலைவர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார். இது அரிய கலப்பின சூரிய கிரகணமென அழைக்கப்படுகிறது. ஏனெனில், உலகின் சில பகுதிகளில் இது வளைய கிரகணமாக தோன்றும் முன், முழு கிரகணமாக மாறும் என்று கூறப்படுகிறது.

06



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஏப்ரல் 18 செவ்வாய்க்கிழமை

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.12
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் சித்திரை 05
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

### தேர்தலுக்காக போராட்டம் நடத்துபவர்கள்

# வினாத்தாள்களை திருத்த போராட்டம் நடத்த வேண்டும்



க.பொ.த உயர்தர மாணவர்களின் வினாத்தாள்கள் இன்னும் திருத்தப்படவில்லை. அதனால், வழக்கமான தேர்வை குறிப்பிட்ட நேரத்தில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தலைக் கோரி வீதிக்கு வந்து போராட்டம் நடத்துபவர்கள் தங்கள் பிள்ளைகளின் வினாத்தாளைத் திருத்த முன்வர வேண்டுமென்று கோரி எவரும் கிளர்ச்சி செய்யவில்லையென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை குறுக்கு வழிகளை கடைப்பிடித்து கோஷங்களிலும் வாக்குறுதிகளிலும் மாட்டிக்கொள்வதன் மூலம் தீர்க்க முடியாதென்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். எனவே, வலி நிவாரணிகள் நோயாளியை தற்காலிகமாக குணப்படுத்தும் அதேவேளை, அடிப்படை நோய்க்கு சிகிச்சையளிப்பதும் அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரான்சில், இலங்கையர்கள் குழுவொன்று ஏற்பாடு செய்திருந்த சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பின்வருமாறு கூறினார்.

சில அரசியல் கட்சிகள் ஜனரஞ்சக கருத்துகளை தெரிவிக்கின்றன. அவை மிகவும் கவர்ச்சிகரமானவை. எல்லோரும் கேட்க விரும்புகிறார்கள். ஆனால் அந்த யோசனைகளையும் பரிந்துரைகளையும் இந்த தளத்தில் செயல்படுத்த முயன்றால் சிக்கல்கள் ஏற்படும். எனவே, இத்தருணத்தில் நாம் செய்ய வேண்டியது, கோஷங்களிலும், வாக்குறுதிகளிலும் சிக்கிக் கொள்ளாமல், அடுத்த தேர்தலுக்காக உழைப்பதே! தேர்தலுக்கு நாங்கள் பயப்படவில்லை. ஆனால் அதற்கு முன், மக்கள் பெறும் சம்பளத்தில் மூன்று வேளை சாப்பிடும் பொருளாதாரத்தை உருவாக்கி, தேர்தலுக்கு செல்வோம். எந்த முடிவையும் ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நீங்கள் தேர்தலுக்காக காத்திருந்து, உங்கள் அமைச்சுக்களை அரவணைத்து அரசியல் செய்தால், இந்த நாடு காணாமல் போய்விடும். இதைப் புரிந்து கொண்டு, நாட்டின் மீது அக்கறை கொண்ட, படித்த, புத்திசாலித்தனமான எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசின் திட்டத்திற்கு பல்வேறு வகையில் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். IMF, இந்தியா, சீனா மற்றும் பிற நாடுகள் இன்று நமக்கு உதவுகின்றன. ஆனால் நம் நாட்டில் 06




## ஸகாத்துல் பித்ரை நிறைவேற்றுவோம்

ஸகாத்துல் பித்ர் எனப்படுவது அனைத்து முஸ்லிம்களும் ரமழான் பிறை கண்டது முதல் பெருநாள் தொழுகைக்கு செல்ல முன்னர் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாய தர்மமாகும். இத்தர்மம் சமூகத்திலுள்ள பொருளாதார வசதியற்ற ஏழை, எளிய மக்களுக்காக வழங்கப்படக்கூடியதாகும்.

அதாவது நோன்பு காலத்தில் நோன்பாளி விடும் தவறுகள், குற்றங்கள், தேவையற்ற வீண் பேச்சுக்கள், ஆபாச வார்த்தைகள் போன்றவற்றிலிருந்து நோன்பாளியை தூய்மைப்படுத்தவும் ஏழைகளுக்கு உணவாகவும் அல்லாஹ் ஸகாத்துல் பித்ரை விதியாக்கினான். யார் அதனை நோன்பு பெருநாள் தொழுகைக்கு முன்னர் நிறைவேற்றுகிறாரோ அது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஸகாத்தாக நிறைவேறும். தொழுகையின் பின்னால் அதனை நிறைவேற்றினால் அது ஒரு தர்மமாக அமையும். (ஆதாரம் அபூ தாவூத்)

'பெருநாள் தினத்திலே அவர்கள் வீடுகளை சுற்றிவந்து யாசகம் கேட்காத அளவுக்கு அவர்களது தேவைகளை போதுமாக்கிக் கொடுங்கள்' (ஆதாரம் தாரகுத்னி)

மேற்படி இரண்டு ஹதீஸ்களும் ஸகாத்துல் பித்ரின் நோக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. அதன்படி பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய உணவு வகைகள் அல்லது அதன் பெறுமதியை ஸகாத்துல் பித்ராக வழங்க முடியும். இவ்வகையில் பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய அரிசியிலிருந்து ஒரு நபருக்கு 2.5 கிலோ கிராம் அளவு ஸகாத்துல் பித்ராக வழங்கப்படல் வேண்டும் அல்லது அதன் பெறுமதியைக் கொடுக்கப்படல் வேண்டுமெனக் கொள்ள முடியும்.

ஒரு குடும்பத்தின் பெருநாள் தினத்தின் பகல் மற்றும் இரவின் உணவுத்தேவைக்கு மேலதிகமாக இருந்தால் அவர் ஸகாத்துல் பித்ர் வழங்க வேண்டும். பக்கீர்கள் எனப்படும் ஏழைகளின் கைகளும் வருடத்தில் ஒருமுறையாவது கொடுக்கின்ற கரங்களாக இருக்க வேண்டும் என்று இதன்மூலம் நாடப்படுகின்றது.

ஆகவே நோன்பில் விடப்படுகின்ற தவறுகள் மற்றும் குறைகளுக்கு பரிகாரமாகவும் பெருநாள் தினத்தை ஏழைகளும் சந்தோஷமாகக் கழிப்பதற்கான ஏற்பாடாகவும் ஸகாத்துல் பித்ர் விளங்குகிறது. அதனை உரிய முறையில் நிறைவேற்றி இறையருளைப் பெற்றுக்கொள்வோம்.

அஷ் ஷெய்க்
**யூ.கே றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் வைத்தியசாலையில் அனுமதி

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானதில் அவர் காயமடைந்துள்ளார்.

விபத்தில் ஏற்பட்ட சிறு காயங்களுடன் சியம்பலாபிட்டிய வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கேகாலை – அவிசாவளை பிரதான வீதியின் ருவன்வெல்ல, கரவனெல்ல பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பயணித்த கார், கரவனெல்ல வீதிக்கருகிலிருந்த சுவரொன்றில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் சிறு காயங்களுக்குள்ளாகிய ரஞ்சித் சியம்பலாபிட்டிய, கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அமைச்சரின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஸ்ரீமாவோவின் கொள்கைகளை ஏற்றிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மறைந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால், நாடு வங்குரோத்து நிலை அடைவதிலிருந்து தவிர்க்கப்படுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 107ஆவது நினைவு தினத்தையொட்டி கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப சுற்றாடலில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அந்நிகழ்வையடுத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு இடமிருக்காது. அந்த வகையில் அவரது கொள்கைகள் கோடிக்கு துணை போகாதவை. அது நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடு முன்னேற்றம் அடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈச்சம் பழங்களை அன்பளிப்புச் செய்தமைக்கு அமைச்சர் நஸீர் அஹமட் நன்றி தெரிவிப்பு



இலங்கையருக்கு ஒரு தொகை ஈச்சம் பழங்களை வழங்கியமைக்காக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் சவூதிஅரேபியத் தூதுவருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சவூதி அரசாங்கத்தின் நேரடி அன்பளிப்பாக இலங்கைக்கு 50 தொன் பேரீச்சம் பழங்கள் கிடைத்தன. மற்றும் சவூதி தூதரகத்தினால் வழங்கப்பட்ட மேலும் 15 தொன்கள் பேரீச்சம்பழம் பெரும் உதவியாக இருந்தது. இவ்வாறு வழங்கப்பட்ட நன்கொடைகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குறைந்த வருமானம் பெறும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்து, புனித ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் சம்பிரதாய தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. இது மட்டுமன்றி இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எதிர்பாராத அழிவுகளின் போதும், சவூதி அரேபியா அரசா ங்கம் உதவி வருகின்றமை இரு தரப்பு உறவுகளையும் பலப்படுத்துவதாக அமைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### நாட்டின் பல பகுதிகளிலும் அதிகளவு உஷ்ணம்

## அவதானமாக செயற்படுமாறு மக்களுக்கு சுகாதாரத் துறை நிபுணர்கள் அறிவுறுத்து

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது கடும் உஷ்ணம் நிலவுவதாகவும் மக்கள் அது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் மருத்துவத்துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

திறந்த வெளியில் வேலை செய்தல் மற்றும் அதிகளவு கஷ்டப்பட்டு வேலை செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அவர்கள் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நேற்றைய தினம் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை, ஹம்பாந்தோட்டை உள்ளிட்ட சில 06

## பண்டிகைக் கால QR கோட்டா தொடர்ந்தும் நடைமுறை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**


பண்டிகைக் காலத்தையொட்டி அதிகரிக்கப்பட்ட எரிபொருள் கோட்டாவை, தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தையொட்டி கடந்த (04) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருளுக்கான கோட்டாவை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தது. அன்றைய தினம் முதல் இன்று (18) வரை நடைமுறைக்கு வரும் வகையிலேயே அந்த முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனினும், தொடர்ந்தும் அதனை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் முச்சக்கர 06

## 5,000 ரூபா போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது



ஐயாயிரம் ரூபா பெறுமதியான 27 போலி நாணயத் தாள்களுடன் கொழும்பு மோதர பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் (15) மோதர, பகுதியில் வைத்து சோதனையிட்ட போதே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரியை வசிப்பிடமாகக் கொண்ட இவர், மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத் தாள்களின் புழக்கத்தை சந்தையில் அறிமுகப்படுத்த முயற்சிக்கும் மோசடியாளர்கள் தொடர்பில், கவனமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

## உள்ளூர் முட்டை விலையை குறைக்க தீர்மானம்



உள்ளூர் முட்டை ஒன்றை 50 ரூபாவுக்கும் குறைவான விலையில் வழங்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தமது தொழிற்சங்க பிரதிநிதிகள் (16) சந்தித்து இந்த தீர்மானத்தை எடுத்ததாக அவர் கூறினார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின் தொகையை அதிகரித்து, அவற்றை நுகர்வோருக்கு விற்பனை செய்ய வேண்டுமென அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க தெரிவித்துள்ளார்.

### மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தில் இரசாயன கலவை

## இறந்து மிதக்கும் மீன்களை உண்ண வேண்டாம்!

**ஹற்றன் விசேட நிருபர்**

மேல் கொத்மலை ஆற்றில் இரசாயன கலவை காரணமாக மீன்கள் இறந்து மிதப்பதாகவும் இதனை பொது மக்கள் உணவாக உட்கொள்ள வேண்டாமென பொது சுகாதார பரிசோதகர் புஸ்பகாந்தன் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அம்பேவளை பகுதியிலிருந்து எல்ஜின் ஊடாக தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் சங்கமிக்கும் ஆற்றை எல்ஜின், மெராயா, தங்கலை, லிப்பகலை, தலவாக்கலை, கவுலினா உள்ளிட்ட பல தோட்டங்களை சேர்ந்த மக்களும், லிந்துலை, தலவாக்கலை, உள்ளிட்ட நகர் பகுதியை சேர்ந்த சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் குளிப்பதற்காகவும் விவசாயத்துக்காகவும், குடிப்பதற்காகவும் இந்த ஆற்றையே பயன்படுத்தி வந்தனர்.

ஆற்றில் அம்பேவளை பாற்பண்ணையில் கழிவுகளையும், இரசாயன கலவைகளையும் ஆற்றில் விடுவிப்பதாக பொது மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வந்ததுடன், இது குறித்து மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் முறைபாடுகள் செய்திருந்தனர்.

இந்நிலையில் தொடர்ந்து இந்த ஆற்றின் சாணம் கலந்து கறுப்பு நிறத்திலே நீர் ஓடிக்கொண்டிருந்தது.

இன்றைய தினம் கறுப்பு நீருடன் மீன்கள் இறந்து காணப்பட்டதனால் இது குறித்து பொது மக்கள் லிந்துலை சுகாதார பிரிவினருக்கு தெரிவித்ததையடுத்து இங்கு சென்ற சுகாதார 06

## ஏப்ரல் 22 ஆம் திகதி நாள் முழுவதும் காலிமுகத்திடலில் 'வசந்த சிரிய 2023' சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம்




ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், அனைத்து அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச துறை நிறுவனங்கள் பலவற்றின் ஊழியர் குழாம் உள்ளிட்ட அனைத்து இலங்கையர்களுக்குமான திறந்த போட்டிகள் மற்றும் வெளிநாட்டவர்ளுக்கான போட்டிகள் அடங்கிய "வசந்த சிரிய 2023" (வசந்தத்தின் வனப்பு 2023) தமிழ் சிங்களப் புத்தாண்டு கொண்டாட்டம் எதிர்வரும் ஏப்ரல் 22 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு காலிமுகத்திடல் மைதானத்தில் நடைபெறும்.

காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதோடு மாலை 6.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை இசைக்கச்சேரி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத் துறை, திறந்த பிரிவு மற்றும் விருந்தினர் பிரிவு என 03 பிரிவுகளின் கீழ் போட்டி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பணியாளர் குழாம், குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் சிறுவர்களுக்கென ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 18 போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் எந்தவொரு இலங்கையரும் 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 207.75 | 220.92 |
| கனடியன் டொலர் | 232.03 | 246.31 |
| யூரோ | 341.20 | 360.46 |
| ஜப்பான் யென் | 2.3243 | 2.4528 |
| சிங்கப்பூர் டொலர் | 233.07 | 246.80 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 385.35 | 406.80 |
| சுவிஸ் பிராங்க் | 346.54 | 368.59 |
| அமெரிக்க டொலர் | 312.07 | 327.02 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 847.61 | கட்டார் ரியால் | 87.24 |
| குவைத் டினார் | 1,043.90 | சவூதி ரியால் | 85.19 |
| ஓமான் ரியால் | 830.01 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.02 |

# இந்திய அரசின் தடயவியல் பல்கலைக்கழகம் உகண்டாவில்

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் திறந்து வைத்தார்

உகண்டாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ஜின்ஜா நகரில் நிறுவப்பட்டுள்ள இந்திய தேசிய தடயவியல் விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் கிளையை கடந்த புதனன்று திறந்து வைத்தார்.

இதுவே இந்திய அரசின் பல்கலைக்கழகமொன்று வெளிநாடொன்றில் கிளை பல்கலைக்கழகமொன்றை ஆரம்பித்திருக்கும் முதல் தருணமாகும்.

உகண்டா மக்கள் பாதுகாப்பு படையுடன் இணைந்த இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

குஜராத் அகமதாபாத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனையின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகமே தடயவியல் துறைக்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்ட உலகின் முதல் பல்கலைக்கழகம் என்று இங்கு உரையாற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சர், தடயவியல், நடத்தையியல், சைபர் பாதுகாப்பு, டிஜிட்டல் தடயவியல் மற்றும் தொடர்புடைய விஞ்ஞான கற்கைகள் என்பனவற்றில் உயர்கல்வியை மாணவர்கள் பெற முடியும் என்று தெரிவித்ததோடு இத்துறைக்கு பெரிய அளவில் மாணவர் மத்தியில் வரவேற்பு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்திய – உகண்டா நல்லுறவில் இத் திறப்பு விழா ஒரு மைல்கல்லாக கருதப்பட முடியும் என்று தன் உரையில் மேலும் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், ஆபிரிக்க மாணவர்கள் மத்தியில் இத்துறை மீதான அதிக ஆர்வமே உகண்டாவில் இப்பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கு காரணமானது என்றார்.

# பாஸ்மதி அரிசிக்கான புவிசார் குறியீடு இந்தியாவுக்கு வழங்கப்பட வேண்டும்

## இதில் அரசியல் வேண்டாம் என்கிறது இந்தியா

உலகின் மிகப்பெரிய பாஸ்மதி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடாக விளங்கும் இந்தியாவுக்கே பாஸ்மதிக்கான புவிசார் குறியீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா முன்வைத்துள்ளதோடு இவ்விடயத்தில் அரசியல் கண்ணோட்டம் வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது.

உலகெங்கும் உயர்தரமும், நறுமணமும், விசேட குணங்களும் கொண்ட அரிசியாகக் கவனிக்கப்படும் பாஸ்மதி, ஜம்மு – காஷ்மீர், இமாசல பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, டில்லி, உத்தரகாண்ட், மேற்கு உத்தர பிரதேசம் ஆகிய குளிர்சூழல் கொண்ட பிரதேசங்களில் மட்டுமே உயர்தரத்துடன் விளைவிக்கப்படுகிறது. பாஸ்மதி 217, பாஸ்மதி 370, தேராதூன் பாஸ்மதி, பஞ்சாப் பாஸ்மதி, கஸ்தூரி, பூஸா உட்பட்டதாக இந்தியாவில் 34 தனி பாஸ்மதி ரகங்கள் பயிராகின்றன.

இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் பாஸ்மதி, வருடமொன்றில் 7 இலட்சத்து 83 ஆயிரத்து 151 தடவைகளும், பாகிஸ்தான் 28,884 தடவைகளும், சீனா 5,278 தடவைகளும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் சராசரி இந்தியரின் வாழ்வில் பிறப்பு, இறப்பு, திருமணம், சமய விசேடங்கள் என எல்லா முக்கியமான தருணங்களிலும் பாஸ்மதி இடம்பெறுகிறது.

இவ்வாறு இந்தியாவுக்கும் பாஸ்மதிக்கும் இடையிலான நெருங்கிய உறவை குறிப்பிடும் பாஸ்மதி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள், புவிசார் குறியீட்டை வழங்கக்கூடிய அமைப்புகள் பாஸ்மதிக்கு அரசியல் சாயம் பூசாமல் பாஸ்மதிக்கு இயல்பாகவும் இயற்கையாகவும் இருக்கக் கூடிய சம்பந்தத்தை கருத்தில் கொண்டு புவிசார் குறியீட்டை இந்தியாவுக்கே வழங்க வேண்டுமென கேட்டுள்ளனர்.

# லண்டன் இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

## ரிஷிசுனக் உறுதி; இரு தலைவர்களும் தொலைபேசியில் உரையாடல்

லண்டனில் உள்ள இந்திய தூதரகமும் அங்கு பணியாற்றுபவர்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்று இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக் உறுதியளித்துள்ளார்.

கடந்த மாதம் 19ஆம் திகதி லண்டன் இந்திய தூதரகத்துக்கு எதிரே காலிஸ்தான் ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இந்திய தூதரகம் தாக்குதலுக்கு உள்ளானது. இதையடுத்து டில்லி பிரிட்டிஷ் தூதுவர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு தமது கண்டனத்தை இந்தியா தெரிவித்துக் கொண்டது. புதுடில்லி இங்கிலாந்து தூதரகத்துக்கு முன்பாக போடப்பட்டிருந்த தடைகளையும் டில்லி பொலிசார் அகற்றினர்.

இதையடுத்து இத் தாக்குதல் தொடர்பாக இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக்கை தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்ட பிரதமர் மோடி தன் கவலையை வெளியிட்டதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த இங்கிலாந்து பிரதமர், இத்தாக்குதல் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்றும் லண்டன் இந்தியத் தூதரகத்துக்கும் அங்கு பணிபுரிபவர்களுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் கூறியதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளது.

# பிரதமர் தலைமையில் சீத்தாஎலிய சீதையம்மன் ஆலய தியான மண்டப அடிக்கல் நாட்டு விழா

**நுவரெலியா தினகரன் நிருபர்**

நுவரெலியா சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் பிரதமர் தினேஸ் குணவர்தன் கலந்து கொள்ளவுள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபை தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்

நுவரெலியா சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்திய டெல்லி ரோட்டரிக் கழக டெல்லி சிட்டி கழகத்தினரின் அனுசரணையுடன் இந்திய நாட்டைச் சேர்ந்த திருமதி அனுஸ்ரீ ஜெயின் குப்தா குடும்பத்தவர்களின் ஞாபகார்த்தமாக இந்த தியான மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

அன்று ஸ்ரீ சீதை யம்மன் ஆலய வரலாற்றுச்சான்று முத்திரை வெளியீட்டு விழாவும் ஸ்ரீ சீதையம்மன் ஆலய தீர்த்தக்குளம் திறப்பு வைபவமும் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஸ் குணவர்தனவும் விஷேட அதிதியாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் சிறப்பு அதிதியாக உதவி இந்திய உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ். ஆதிரா உட்பட ஆலய நிர்வாக சபையினரும் பொது மக்களும் கலந்துக் கொள்வார்கள். இவ் வைபவத்தில் அனைவரையும் கலந்து கொள்ளும் படி ஆலைய பரிபாலன சபையினர் அழைக்கின்றனர்.







ஒருங்கிணைந்த சமூக அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் விசேட இப்தார் நிகழ்வு குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் ஆளுநர் கலாநிதி ஏ.எம்.எஸ்.எம். எம். ராயிஸ் மீரா தலைமையில் குருநாகல் டைன் ஹட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் பேர்ட்டல் பிரின்டோ ஜயவர்த்தன, சிரேஷ்ட தலைவர் லக்னி கஸ்தூரி ஆராய்ச்சி, ரியாஸ் மிஹ்லார், குருநாகல் வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.வி.எம். கியாஸ், ஒருங்கிணைந்த சமூக அறக்கட்டளை நிறுவனத்தின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட இளம் இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

(படங்கள்: இக்பால் அலி)

# சர்வதேச குத்ஸ் தின நிகழ்வு




**ருஸைக் பாரூக்,எ. எஸ். எம். ஜாவிட்**

நீதி மற்றும் அமைதிக்கான மன்றத்தின் ஏற்பாட்டில் "சர்வதேச குத்ஸ்" தின நிகழ்வு சட்டத்தரணி யு.எல்.அப்துல் மர்சூக் தலைமையில் புதன்கிழமை (12) கொழும்பு 07, லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்றது.

குறிப்பாக பாலஸ்தீனிய மக்களுக்காகவும் அடக்கி, ஒடுக்கப்பட்டு வருகின்ற ஏனைய மக்களுக்காகவும் அனைவரும் ஒன்றிணைந்து ஆதரவை வழங்கும் வகையில் இத்தினம் வருடாந்தம் நினைவு கூரப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வில் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் கலாநிதி ஹஷேம் அஷ்ஜசாதே, சட்டத்தரணி ரீ.கே. அஸூர், வண.விஜித் மொரகஸ்வெவ தேரர், பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் லக்ஸ்மன் குணசேகர ஆகியோர்கள் உரை நிகழ்த்தினர். இலங்கைக்கான இந்தோநேசியா மற்றும் மலேசிய தூதுவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி,ஈரான் கலாசார நிலையத்தின் கொன்சியூலர் கலாநிதி பஹ்மான் மொஅஸமில்,ஈரான் தூதரக உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 05ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாங் கேடு

*எள்ளின் பிளவுபோன்று சிறிதாக இருந்தாலும் உட்பகையால் பெருங்கேடு விளையும்.*

## சித்திரைப் புத்தாண்டையடுத்து மக்கள் முன்பாகவுள்ள பொறுப்பு

இலங்கையில் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் தற்போது நிறைவடைந்துள்ளன. இப்பண்டிகையை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்குச் சென்றிருந்த மக்கள் நேற்று முதல் தாம் தொழில் புரியும் இடங்களுக்கும் அலுவலகங்களுக்கும் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் மக்கள் இப்பண்டிகையை வெகுசிறப்பாகக் கொண்டாடுவது வழமையாகும். இது ஒரு தேசியப் பண்டிகையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

2019 ஆம் ஆண்டின் பின்னர் இப்புத்தாண்டை சிறப்பாகவும் விமர்சையாகவும் கொண்டாடக்கூடிய வாய்ப்பு இந்நாட்டு மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. 2020 ஆம், 2021 ஆம் ஆண்டிகளில் நிலவிய கொவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல், 2022 இல் நிலவிய தீவிர பொருளாதார நெருக்கடி என்பன அதற்கு பெரும் தடைகல்லாக அமைந்திருந்தன.

இவ்வாறான துரதிர்ஷ்டமான நிலைமைகளால் தமிழ், சிங்கள மக்களால் கடந்த மூன்று வருடங்களாக இப்பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடக் கூடிய வாய்ப்பு கிடைக்கப் பெறவில்லை. நாட்டினதும் உலகளாவிய நிலைவரங்களையும் கருத்தில் கொண்டு அமைதி காத்த இம்மக்களுக்கு இம்முறை இப்பண்டிகையைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெற்றது.

மூன்று வருடங்களின் பின்னர் மக்களுக்கு இவ்வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. அதேவேளை பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி வரும் நிலைமையில் மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இப்பண்டிகையை கொண்டாடுவதற்கான வாய்ப்பை நாட்டின் தற்போதைய சூழல் இந்நாட்டு பிரஜைகளுக்கு பெற்றுக் கொடுத்துள்ளது.

அதற்கேற்ப தம் குடும்ப உறவினர்களுடனும் நண்பர்களுடனும் பிரதேச மக்களுடனும் தமிழ், சிங்கள மக்கள் இப்பண்டிகையைக் கொண்டாடினர். வழமை போன்று பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும், கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இப்பண்டிகையின் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. சில பிரதேசங்களில் உல்லாசப் பயணிகளுக்கென விஷேட கலாசார நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. அந்நிகழ்ச்சிகளில் அவர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றியுள்ளமை உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களின் அதிக கவனத்தை ஈர்த்திருந்தது.

இவ்வாறு இப்பண்டிகை நிறைவுற்றதும் தம் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக மக்கள் நேற்று முதல் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இச்சூழலில் பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டிய பொறுப்பு அனைத்து பிரஜைகள் முன்பாகவும் உள்ளது.

தற்போது தமிழ், சிங்களப் புத்தாண்டு ஆரம்பமாகியுள்ளது. இப்புத்தாண்டில் நாட்டைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு பணியாற்றுவது அவசியம். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். பொருளாதார ரீதியில் வளமான தேசமாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களை நாட்டு மக்கள் அனுபவிக்க ஆரம்பித்து விட்டனர். பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாட்டில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் நீங்கி இருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

கடந்த வருடம் நாடு முகம்கொடுத்திருந்த தீவிர பொருளாதார நெருக்கடியின் பெரும்பாலான அசௌகரியங்கள் நீங்கி விட்டன. அன்றைய காலப்பகுதியில் முகம்கொடுத்த நெருக்கடிகள், அசௌகரியங்கள் இப்போது இல்லை. என்றாலும் அப்பொருளாதார நெருக்கடி தோற்றுவித்த தாக்கங்களும் அழுத்தங்களும் முற்றாக நீங்கியதாக இல்லை.

இவ்வருடத்தை விடவும் எதிர்வரும் வருடத்தில் இப்பண்டிகையை மேலும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். நாடும் மக்களும் வளம் பெற வேண்டும். அதற்காக நாட்டை கட்டியெழுப்ப உழைப்பது அவசியம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் தேசத்தை வளமான நாடாகக் கட்டியெழுப்புவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். இதற்கான பொறுப்பு இந்நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் உள்ளது.

ஆகவே தமிழ்_ சிங்களப் புத்தாண்டைத் தொடர்ந்து உருவாகியுள்ள சூழலில் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை ஒன்றுபட்டு கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும். அதுவே வளமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

## இந்திய ரூபாவை பயன்படுத்தும் ஆலோசனை;
# இலங்கை–இந்திய வர்த்தக பரிவர்த்தனையில் ஏற்படவிருக்கும் பொருளாதார அனுகூலங்கள்



இலங்கையின் பொருளாதார பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் இருநாடுகளும் தற்போது ஆராய்ந்து வருகின்றன. இவ்வாறு இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதன் மூலம் வர்த்தக பரிவர்த்தனை விடயத்தில் இருநாடுகளுமே பயனடைய முடியுமென பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதற்கான சாத்தியம் தொடர்பில் இலங்கை வங்கி, இந்திய அரச வங்கி மற்றும் இந்தியன் வங்கியின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்றை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சமீபத்தில் நடத்தியிருந்தார்.

இந்திய ரூபாவின் பயன்பாடு இரு நாடுகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்படுமானால் வர்த்தகம் மற்றும் முதலீடு சார்ந்த நடவடிக்கைகள் ஊடாக வலுவான மற்றும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியுமென நம்பப்படுகின்றது.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் பொருளாதாரப் பரிவர்த்தனைகளுக்காக இந்திய ரூபாவை பயன்படுத்தும் போது பல்வேறு அனுகூலங்கள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குறைவான பரிமாற்றச் செலவு, விரைவான சேவை, வர்த்தகக் கடன்களை எளிமையாக பெறுதல் போன்ற பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேசமயம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவில் வருமானம் அதிகரிப்பதற்கும் வாய்ப்புள்ளது. வர்த்தகத்துறையில் இலங்கை_ இந்திய நட்புறவு மேலும் நெருக்கமாகும் எனவும் நம்பப்படுகின்றது.

### இருதரப்பு வர்த்தகத்தை இலகுபடுத்த கதவு திறப்பு!

இந்திய ரூபாவை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பில் இலங்கையும் ஆராய்ந்து வருகின்றது. இலங்கை வங்கி, ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா, மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இவ்விடயத்தில் தமது அனுபவங்களை பரிமாறிக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குறுகிய காலக்கெடு, குறைந்த பரிமாற்ற கட்டணங்கள், இலகுவான வர்த்தக கடன் வசதிகள் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் இந்திய ரூபா மூலமாக மேற்கொள்ளப்படும்பரிவர்த்தனைகளின்பலனாக கிடைத்து வருகின்றன.

இந்திய ரூபாவில் வர்த்தக ரீதியிலான பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு வழியேற்படுத்துமாறு இலங்கை மற்றும் இந்திய வர்த்தக சமூகத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை முதன்மையாகக் கொண்ட செயற்பாடுகள் மூலமாக இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவானதும் நெருக்கமானதுமான பொருளாதார ஒத்துழைப்பினை கட்டி எழுப்புவதற்கான கூட்டு முயற்சிகளில் இந்த முன்னெடுப்பானது சாதகமான நன்மைகளை ஏற்படுத்துமென பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான டிஜிட்டல் முறையிலான கொடுப்பனவுகள், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார நட்புறவினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பம், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவை மேம்படுத்துவதற்கான நம்பிக்கைகளும் காணப்படுகின்றன.

அனைத்துலக வர்த்தகச் சந்தையில் அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாவின் மதிப்பு தொடர்ந்து சரிவடைந்து வந்த நிலையில், 'ரூபாவைக் கொண்டு வர்த்தகம்' என்ற புதிய அறிவிப்பை இந்திய அரசாங்கம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் இந்த அறிவிப்பையடுத்து இந்தியாவுடன் ஒத்துழைக்கும் நாடுகளின் பட்டியலும் வெளியாகி உள்ளது.

மொத்தம் 18 நாடுகள் இந்தியாவுடன் 'ரூபா' உதவியுடன் வர்த்தகம் மேற்கொள்ள முன்வந்துள்ளன. அவற்றுள் தென்கிழக்கு ஆசியாவில் முக்கிய பொருளாதார மையமாக விளங்கும் மலேசியாவும் ஒன்றாகும். இனிமேல் இவ்விரு நாடுகளும் வர்த்தகம் சார்ந்த பணப் பரிவர்த்தனைகளை இந்திய ரூபாயில் மேற்கொள்வதென்று உடன்பாடு கண்டுள்ளன.

இலங்கையும் இந்தியாவும் பொருளாதார பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவை பயன்படுத்தத் தொடங்கினால் இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக நடவடிக்கைகளில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வர முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை 18 நாடுகளுடன் இந்தியா கண்டுள்ள இந்தப் புதிய உடன்பாடானது அனைத்துலக வர்த்தகச் சந்தையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. இந்தியாவும் மலேசியாவும் இதுநாள் வரை அமெரிக்க டொலர் உள்ளிட்ட சில வெளிநாட்டு க ரன்சிகள் மூலம் வர்த்தகப் பணப் பரிமாற்றங்களை மேற்கொண்டு வந்த நிலையில், திடீரென இந்திய ரூபா மூலம் இந்த நடைமுறைகளைத் தொடர்வது அனுகூலங்களை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.





(12ஆம் பக்கம் பார்க்க)

**எஸ். சாரங்கன்...**

# லண்டன் துர்க்கை அம்மன் ஆலயத்தில் தியான மண்டபம் திறந்துவைப்பு

லண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் தியான மண்டபம் அண்மையில், திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழா நிகழ்வை நிர்வாகசபைச் செயலாளர் சொ.கருணைலிங்கம், அறங்காவலர் சபைத்தலைவர் தேவராஜன் ஆகியோர் தலைமைதாங்கி நெறிப்படுத்தினர்.

ஆலயத்தின் முதலாவது தலைவராயிருந்து பணிகளை முன்னெடுத்த சட்டத்தரணி நடராஜா கிருஷ்ணராசா, தியான மண்டபத் தோற்றுவாய், அதன் அவசியம் ஆகியன பற்றி உரையாற்றியதோடு, அதற்கு உறுதுணையாய் பாடுபட்ட அறங்காவலர்கள் தேவசகாயம், அமரர் கணேசராசா, கட்டடக்குழு உறுப்பினர்களான பொறியியலாளர் தட்சணாமூர்த்தி, சபாரத்தினம் ஆகியோரையும் பாராட்டினார்.

இவ்வாலயம் அமைந்துள்ள ஈலிங் நகர சபைத்தலைவியான மேயர் திருமதி மொகிந்தர்

மிதா வைபவரீதியாக மண்டபத்தைத் திறந்து வைத்தார். இந்த வைபவத்தில் லண்டனின் சகல புறங்களிலுமுள்ள உள்ளூராட்சிச்சபைகளின் நகரபிதாக்கள், சபைகளின் உறுப்பினர்கள் எனப்பலரும் பங்கெடுத்தனர்.







கலைநிகழ்வுகளுடன் நடைபெற்ற இவ்விழாவில் றெட் பிறிஜ் மேயர் தவரஞ்சன் ஜெயரஞ்சன், முன்னாள் நகரபிதாக்களான சுரேஷ் கிருஷ்ணா, நகுஷ் நரேந்திரா, திருமதி சசிகலா சுரேஷ், கணா நகீரதன் ஆகியோருடன் நகரசபை உறுப்பினர்களான பரம் நந்தா, குமார், ராஜன் சீலன், ரரிக் மொகமட், தயா இடைக்காடர், திருமதி கமலா குகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் விசேடமாக இந்திய தூதுவராலயத்தைச் சேர்ந்த பிரதித்தூதுவர் டொக்டர் லில்லி குணசேகர் அவர்களும் பங்கேற்றிருந்தார். தியான மண்டப வி ழா வில் நடன ஆசிரியை திருமதி சாந் தி தயாபரனின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**சொ. கருணைலிங்கம்...**
(செயலாளர், கனக துர்க்கை அம்மன் ஆலயம்) லண்டன்

# கிளிநொச்சி வடக்கு கல்வி வலய முன்பள்ளிகளில் மாதந்தோறும் முழுநிலா பெருவிழா நிகழ்வுகள்

அனைத்துலக மருத்துவநல அமைப்பும் (IMHOUSA), இரட்ணம் பவுண்டேசன் (Ratnam FoundationUK) அமைப்பும் வழங்கும் நிதியீட்டத்தில் கிளிநொச்சி வடக்கு வலயம், முன்பள்ளிகளுக்கான மாதிரி வலயமாக மாகாணக் கல்விப்பணிப்பாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டு பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் குறிப்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயற்படுசார் வதிவிட பயிற்சிகள், தகைமை மற்றும் புலமைசார் பயிற்சிகள், மாதிரி முன்பள்ளிகள் நிறுவுதல், சமூக பொருளாதார அபிவிருத்தி போன்ற செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இவற்றுள் கண்டாவளை, பளை கல்வி கோட்டங்கள் மற்றும் 70 முன்பள்ளிகளையும் 1369 முன்பள்ளி சிறார்களையும் உள்ளடக்கிய 8 கொத்தணிகளில் மாதாந்தம் முழுநிலா பெருவிழாக்கள் இவ்வருட ஆரம்ப முதல் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. சித்திரை மாதத்துக்கான நான்காவது பெருவிழா கடந்த 11ஆம் திகதி பிரமந்தனாறு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கிளியான் கொத்தணியைச் சேர்ந்த 9 முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், முன்பள்ளி சிறார்கள் மற்றும் பெற்றோர், விருந்தினர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

முன்பள்ளி சிறார்களின் வரவேற்பு நடனங்கள், தனி மற்றும் குழு நடனங்கள், சைகை மற்றும் போல ஆற்றுகைகள், ஆசிரியர்களின் கும்மி,கோலாட்ட மற்றும் கூத்து போன்ற நிகழ்வுகள் இவ்விழாவின் சிறப்புக்கு அணி சேர்த்த து.








கிளியான் முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி அபிராமி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக வேர்ல்ட் விஷன் அமைப்பின் கண்டாவளை பிரதேச செயற்றிட்ட முகாமையாளர் திருமதி மெக்டலின் குயின்ரஸ் அவர்களும் ஏனைய விருந்தினர்களாக அப்பாடசாலையின் அதிபர் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம்,பிரதேச செயலகம்,கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகத்தைக் சேர்ந்தோரும் வருகை தந்திருந்தனர்.

இவ்விழாவினை ஒழுங்குபடுத்தியிருந்த உதவிக்கல்விப்பணிப்பாளர் பொ.விஜயநாதன் சகலராலும் பாராட்டப்பட்டதுடன் இவ்விழாவுக்கு IMHOUSA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து சிறப்பித்திருந்தார்.

## "காணாமல் விசுவாசிப்பவனே பாக்கியவான்"

# புனித தோமையாரின் விசுவாசம்

கத்தோலிக்க திருச்சபை கடந்த ஞாயிற்றுக்கிழமையை இறைஇரக்க பெருவிழாவாகக் கொண்டாடியது.

ஞாயிறு வாசகங்கள் தோமையாருக்கும் இயேசுவுக்கும் இடையிலான நம்பிக்கை தொடர்பிலும் இயேசு உயிர்த்தார் உயிர்த்த இயேசு தன் சீடர்களுக்குக் காட்சி தந்தார் என்பதையும் பறைசாற்றுகிறது.

உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன். அவர் இங்கு இல்லை. உயிர்த்துவிட்டார் (லூக் 24:56). கழுமரத்தில் அவரை ஏற்றிக் கொன்றுபோட்டார்கள். கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிர்ப்பித்தார். அவரோடு உண்டு குடித்த நாங்களே சாட்சிகள் என்றனர் (அப். பணி 10:4042).

அந்த வகையில் கடந்த ஞாயிறு வழிபாடு மூன்று நிலைகளில் நம் வாழ்வை அமைத்துக் கொள்ள அழைப்பு விடுக்கிறது.

"மன்னிப்பின் மூலம் சமாதானம் : என் தந்தை என்னை அனுப்பியது போல நான் உங்களை அனுப்புகிறேன். நான் கொண்டு வந்த சமாதானத்தை உலகிற்குக் கொடுங்கள் என்கிறார் இயேசு.

மன்னிப்பின் மூலம்தான் சமாதானம் உண்டாகும். எனவே ஒப்புரவாகும் திருவருட்சாதனத்தை வழங்கி யாருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும்.

நாம் நமது விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதே அதன் அடிப்படை .

புனித தோமையாரின் விசுவாச வாழ்வையும், சிறந்த மனிதத் தன்மையையும் வேதாகமத்தில் நாம் காண முடியும்.

நாமும் செல்வோம். அவரோடு இறப்போம் (யோவா. 11:16) என்று இயேசுவோடு இணைகின்ற அவரது மனப்பக்குவம்.

தன் தந்தையைப் பற்றி கூறிய இயேசுவிடம், நீ எங்கு செல்கிறீர் என்பதே தெரியாது இருக்க நீர் போகும் வழியை எப்படி அறிவோம் (யோவா. 14:5). என்ற அவரது திறந்த உள்ளம்.



சீடர்கள் தாம் இயேசுவைக் கண்டோம் என்றபோது நான் அவரது தழும்பைப் பார்த்து, விலாவில் விரலை விட்டால் ஒழிய நான் நம்பமாட்டேன் (யோவா. 20:25) என்ற அவரது திறந்த மனம்.

ஆண்டவர் இயேசு காட்சி தந்தபோது தன் இதய கண் திறக்கப்பட என் ஆண்டவரே என் தேவனே என்று விசுவாச அறிக்கையிட்டமை. (யோவா. 20:28).

போன்ற அவரது விசுவாச செயற்பாடுகள் வித்தியாசமானவை.

அந்த வகையில், நம் விசுவாசம் நம்மில் இருப்பதைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். கடந்த ஞாயிறு முதல் வாசகம் இதைத்தான் காட்டுகிறது.

ஆதி கிறிஸ்தவர்கள் திருத்தூதர்களின் போதனைகளுக்குச் செவிமடுத்தார்கள். கூடிச் செபித்தார்கள். அப்பத்தைப் பிட்பதிலும் இறை வேண்டலிலும் உறுதியாக இருந்தார்கள். தங்கள் உடைமைகளை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கு ஏற்பப் பகிர்ந்தளித்தனர்.

பகிர்வதே கிறிஸ்தவ வாழ்வு இயேசு தன்னையே நமக்குப் பிட்டுக் கொடுத்தார் பகிர்ந்தளித்தார்.

தன்னையே வெறுமையாக்கி, சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குத் தன்னைப் பகிர்ந்தளித்தார். ஆதலால் வானகத் தந்தை எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அளித்து அவரை உயர்த்தினார் (பிலி. 2:79). இன்றைய திருச்சபை ஒரு சவாலாக அமைய அழைக்கப்படுகிறது. அதிகாரத்தின் நிறுவனமாக அல்ல. மாறாக பகிர்ந்தளிக்கும் திருச்சபையாக அது தன்னையே வெறுமையாக்குவதன் மூலம் தான் அதனை மேற்கொள்ள முடியும்.

உலகப் பொருட்களைப் பகிர்வது

திருவருட்சாதனங்களைப் பகிர்ந்தளிப்பது. அத்தோடு நாம் பெற்ற விசுவாசத்தைப் போதித்துப் பிறருக்குக் கொடுப்பது என்பவையே அந்த செயற்பாடுகளாக வேண்டும்.

அருட்தந்தை
**முனைவர் ம.அருள்**

## பதுளை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயராக ஜூட் நிஷாந்த சில்வா அடிகளார் நியமனம்

### 22 ஆம் திகதி ஆயர்த்துவ திருப்பொழிவு



பதுளை மறை மாவட்டத்திற்கான புதிய ஆயராக அருட்தந்தை ஜூட் நிஷாந்த டி சில்வா அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி 30 ஆம் திகதி பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் அவர்களினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பதுளை மறை மாவட்டத்தின் நான்காவது ஆயராக பொறுப்பேற்கும் அருட்தந்தை ஜூட் நிஷாந்த டி சில்வாவின் ஆயர்த்துவ திருப்பொழிவு சிறப்புத் திருப்பலி எதிர்வரும் சனிக்கிழமை 22 ஆம் திகதி பதுளை புனித மரியாள் பேராலயத்தில் காலை 9:30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் இந்த ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலியில் நாட்டின் ஏனைய மறை மாவட்ட ஆயர்கள் பலரும் பங்கேற்க வுள்ளனர்.

அருட்தந்தை ஜூட் நிஷாந்த சில்வா திரு ஜோசப் சில்வா மற்றும் திருமதி ஜி .மரியா பெர்னாண்டோ ஆகியோரின் புதல்வராவார். அவர்கள் களுத்துறை கட்டுக்குருந்த பகுதியைச் சேர்ந்தவர்கள். ஜூட் நிஷாந்த சில்வா குடும்பத்தில் ஆறாவது பிள்ளை யாவார். அவர் 1970 மே மாதம் 5ஆம் திகதி பிறந்துள்ளார்.

இவர் பதுளை மறை மாவட்டத்திற்கு நியமிக்கப்படும் நான்காவது ஆயராவார். பதுளை புனித மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தையாக அருட்தந்தை ஜூட் நிஷாந்த சில்வா அடிகளார் இதுவரை காலமும் சேவை செய்துள்ளார்.




## வத்திக்கான் தோட்டம் பொதுமக்களின் பார்வைக்கு...





வத்திக்கான் தோட்டம் பொதுமக்களின் பார்வைக்காக திறக்கப்படவுள்ளது. மே 3ஆம் திகதி முதல் 31ம் திகதி வரை பிரதி புதன்கிழமையும் திருத்தந்தையின் வழக்கமான புதன் மறைக்கல்வி உரையின் முடிவிலும் மற்றும் பிரதி சனிக்கிழமைகளிலும் வத்திக்கான் தோட்டம் பொதுமக்களுக்காக திறக்கப்பட வுள்ளது.

அன்னை மரியாளிற்கு அர்ப்பணிக்கப்பட்ட மே மாதத்தில் திருப்பயணிகள் மற்றும் பார்வையாளர்களுக்கு ஆன்மிகம் மற்றும் கலாசார சூழல்கொண்ட இயற்கையான சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வதற்காக வத்திக்கான் தோட்டம் திறக்கப்படுவதாக வத்திக்கான் அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது

வத்திக்கான் தோட்டத்திலுள்ள அன்னை மரியாளின் படங்கள், திருச்சுரூபங்கள் போன்றவற்றை மக்கள்நேரில் பார்வையிட்டு தியானிக்கவும் இயற்கை எழில் நிறைந்த பசுமையான பாதையில் ஆன்மாவின் ஆற்றலைப் புதுப்பிக்கவும் இதன் மூலம் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

துன்ப முடிச்சுக்களை அவிழ்க்கும் மாதாவின் திருச்சுரூபத்திற்கு முன் திருத்தந்தையர்கள் ஓய்வெடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடமான வத்திக்கான் தோட்டம் பொதுமக்களின் வருகைக்காக மே மாதத்தில் திறக்கப்படுவது திருத்தந்தையர்கள் அன்னை மரியாளை எவ்வாறு போற்றி வணங்கினார்கள் என்பதை மக்களுக்கு எடுத்துரைப்பதாகவும் உள்ளது.

உலகம் முழுவதிலுமிருந்து, ஏராளமான, இயற்கைச் சுவடுகளைக் கொண்ட கன்னி மரியாளின் திருச்சுரூபங்கள், பிரான்சில் உள்ள பழமையான லூர்து மாதா முதல் இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சமீபத்திய மாதா திருச்சுரூபம்வரை அனைத்து சிற்பங்கள் மற்றும் படங்களாலும் வத்திக்கான் தோட்டம் நிறைந்துள்ளது. பாத்திமா அன்னை, குவாடலூப் அன்னையின் உருவப்படத்தை அடிக்கடி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சந்தித்து வணங்கி மகிழ்வார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

6 வயதிற்கு மேற்பட்ட சிறாரைக் கொண்ட குடும்பங்கள் உடல்நலன் மற்றும் மனநலன் பாதிக்கப்பட்டவர்கள் மாற்றுத்திறனாளிகள் என அனைவருக்கும் தகுந்த வழிகாட்டுதல்கள் இத்தாலியம் மற்றும் ஆங்கில மொழியில் வழங்கப்படவுள்ளன. வத்திக்கான் தோட்டத்திற்கான முன்பதிவிற்கு education.musei@scv.va என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ள முடியும்.

**மெரினா ராஜ்**

## அமைதி, பகிர்தல் ஊடான வாழ்க்கை மாற்றம்





### அருட்பணி டிலான் ஜோசப் அடிகளாரின் மறையுரையிலிருந்து...

உயிர்ப்பின் அனுபவத்தை சீடர்கள் இரண்டு தடவைகள் அனுபவிப்பதை ஞாயிறு நற்செய்தியில் காண முடிகிறது.

வாரத்தின் முதல் நாள் இயேசு சீடர்கள் முன் தோன்றி தான் உயிர்த்தெழுந்த நற்செய்தியை அறிவிக்கின்றார்.

அந்த சந்தர்ப்பத்தில் தோமா என்ற சீடர் அங்கு இருக்கவில்லை என்பதால், அவரோ நான் இயேசுவை நேரில் கண்டால் மட்டுமே நம்புவேன் என்று சொல்கின்றார்.

அதன் பின்பு உயிர்த்தெழுந்து எட்டாம் நாளில் இயேசு சீடர்கள் மத்தியிலே மீண்டும் தோன்றுகின்றார். அப்போது தோமாவும் அங்கிருந்து இயேசுவை சந்திக்கின்றார்.

நாம் தோமாவை எப்போதும் சந்தேகத்துடன் வாழ்கின்ற சந்தேகவாதியாகவே பார்க்கின்றோம்.

எனினும் ஞாயிறு நற்செய்தி இயேசு உயிர்த்தெழுந்ததை ஏன் தோமா நம்பவில்லை என்பதற்கு விளக்கமளிப்பதுபோல் உள்ளது.

இயேசு சீடர்கள் மத்தியில் முதலாவதாக காட்சியளித்த போது 'உங்களுக்கு அமைதி உண்டாகுக' என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக நான் உங்களுக்கு தூய ஆவியை தருகின்றேன். உங்களுக்கு அமைதி உண்டாகுக என நான் கூறியதை நீங்கள் வாழ்ந்து காட்டுங்கள். அதேபோன்று கடவுள் என்னை இந்த உலகிற்கு தமது பணியினை ஆற்ற அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன். நான் போதித்ததை நீங்கள் சென்று மக்களுக்கு அறிவியுங்கள் என சீடர்களிடம் தெரிவிக்கின்றார். அவ்வாறானால் சீடர்கள் கதவுகளைத் திறந்து வெளியில் சென்று மக்களுக்கு இதனைப் போதித்திருக்க வேண்டும். இயேசு உயிர்த்தெழுந்து விட்டார். அமைதியாக வாழுங்கள் என்று அவர் போதித்துள்ளார். எனினும் சீடர்கள் அவ்வாறு செய்யவில்லை மீண்டும் அவர்கள் பூட்டப்பட்ட அறைகளிலேயே தங்கியுள்ளார்கள்.

அப்போதுதான் தோமாவும் அங்கு இருக்கும் போது இயேசு அங்கு மீண்டும் காட்சி தருகிறார்.

இயேசு உயிர்த்தெழுந்திருந்தால் சீடர்கள் பயத்துடன் அறைக்குள் ஒளிந்திருக்க மாட்டார்கள். இயேசு அவர்களை சந்தித்துக் கூறியது போல அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்திருந்தால் தோமையாருக்கு அவ்வாறான சந்தேகம் எழுந்திருக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கையை பார்ப்பவர்களுக்கு அப்போது ஒரு மாற்றம் தெரிந்திருக்கும்.

மூன்றாவதாக சீடர்கள் வெளியில் சென்று போதனைகளை ஆரம்பித்திருக்க வேண்டும் அவ்வாறும் நடந்திருக்கவில்லை.

இவை எதுவும் நடைபெறாத நிலையிலேயே தோமையாருக்கு சந்தேகம் வந்தது. இத்தகைய எந்த ஒரு மாற்றங்களையும் காணாத நிலையில் எவ்வாறு ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என கூற முடியும்? என்பதே தோமாவின் சந்தேகம்.

எமது மத்தியிலும் சில தோமாக்கள் உள்ளனர். அவர்கள் கிறிஸ்து உயிர்த்துவிட்டார் என்ற உங்கள் விசுவாசம் பொய் எனக் கூறுவர்.

அதற்குக் காரணம்.

தோமா கிறிஸ்துவின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளாததற்கான காரணம் சீடர்கள் மத்தியில் இயேசு உயிர்த்த அனுபவத்திற்கான எந்த மாற்றங்களும் காணப்படவில்லை என்பதே.அந்த வகையில் தோமாவின் சந்தேகம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

எங்கள் மத்தியிலும் நாம் உயிர்த்த இயேசுவின் அனுபவத்துடனான வாழ்க்கை மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால்

எம் மத்தியில் உள்ள தோமாக்களும் அவ்வாறு கூற மாட்டார்கள்.

எமது வாழ்க்கையைப் பார்த்து இவர்களது வாழ்க்கையில் ஏதோ ஒரு மாற்றம், புதுமையான அனுபவம் நிகழ்ந்திருக்கின்றது என்பதை அவர்கள் பார்த்திருந்தால் அவ்வாறு அவர்கள் கூற மாட்டார்கள். அவ்வாறானால் எமது வாழ்க்கையிலும் நாம் இயேசுவின் உயிர்ப்பிற்கு சாட்சியம் பகிரவில்லை என்பதே உண்மை.

மக்களின் அமைதியான வாழ்க்கை முறையும் வாழ்க்கையின் மாற்றங்களுமே கிறிஸ்துவின் உயிர்ப்பை எடுத்துக் கூற முடியும்.

நாம் ஆண்டவர் தந்த அமைதியை எமது சமூகத்திலே பகிர்ந்திருக்கின்றோமா?

பழைய ஏற்பாட்டிலே ஆண்டவரை விசுவாசித்தவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். ஒற்றுமையாக கூடி செபித்தார்கள். தமக்கு உள்ளதை பிறருடன் பகிர்ந்து கொண்டார்கள் என பார்க்கின்றோம். எமது வாழ்க்கையில் அது நிகழ்ந்துள்ளதா? ஆண்டவரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட இரக்கத்தை நாம் பிறருடன் பகிர்ந்துள்ளோமா என்பதை நாம் சிந்திப்போம்.

ஆண்டவர் கூறியது போன்று எம் மத்தியிலே அமைதி உண்டாகி வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் அது இடம்பெற்றிருக்கின்றதா என்பதை நாம் சிந்திப்போம்.

**எல்.செல்வா**

## 26 வாகனங்கள்...

வாகனங்களுக்கிடையில் இடைவெளி விடாமல் சென்றமையே, இவ்விபத்திற்குக் காரணமென நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் வாகனங்கள் சேதமடைந்தாலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் குறிப்பிடப்படுகின்றது.

## பதுளை சிறைச்சாலையிலிருந்து...

யில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.ஏனைய ஏழு பேரையும் தேடி கண்டுபிடித்து கைது செய்யும் நடவடிக்கைகளில் சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சிறு குற்றங்களில் ஈடுபடும் இளம் குற்றவாளிகளே இந்த திறந்த வெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## கார் விபத்தில் வெளிநாட்டுப்...

காரில் பயணித்த வெளிநாட்டு பெண் ஒருவர் உயிரிழந்தார். இதில், அவரது மகளும் கார் சாரதியும் படுகாயமடைந்ததாக ஹெம்மாதகம பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இருவரும் கம்பளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெளிநாட்டுப் பெண் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 68 வயது பிரகாஷ் சரிதா தேவி என்ற பெண்ணே, விபத்தில் உயிரிழந்துள்ளார்.

காரின் வேகம் கட்டுப்பாட்டையிழந்து, விட்டு விலகி பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## சீனாவுக்கு குரங்குகள்...

எண்ணிக்கையை ஒரு வருடத்துக்குள் நிரப்புமாறு கோரியுள்ளனர்.

வனவிலங்கு பணிப்பாளர் நாயகம் மற்றும் விலங்கியல் பூங்கா பணிப்பாளர் நாயகம் அடங்கிய குழுவுடன் மூன்று சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. குழுவால் எடுக்கப்பட்ட முன்மொழிவுகளிலிருந்து அமைச்சரவைக்கு யோசனை முன்வைக்கப்படும்

இருப்பினும், குழு எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்தே இம்முடிவு அமையும். திட்டத்தின் முதல் கட்டமாக சீனா உடனடியாக 500 குரங்குகளை மாத்திரமே கோரியது.

குறுகிய காலத்தில் இவ்வளவு குரங்குகளை நம்மால் பிடிக்க முடியாது. குரங்குகளைப் பிடிப்பது, பாதுகாப்பது மற்றும் எடுத்துச் செல்லும் செயல்முறைகள் சீனாவால் செய்யப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனவே, சர்வதேச முறைப்படி சிறந்த தீர்வாக இந்த முடிவை எடுத்துள்தாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் அபிவிருத்திக்கு...

சந்திப்பொன்று அண்மையில் இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தில் நடைபெற்றது. இச் சந்திப்பில், இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு சீனா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட அனைத்து நட்பு நாடுகளின் ஆலோசனை, உதவி மற்றும் ஆதரவை இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட சீனாவின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகாமையின் பிரதித் தலைவர் டெங் போசிங், இலங்கையின் மிகவும் நட்பு நாடென்ற வகையில், இலங்கைக்கு தேவையான ஆதரவை சீனா தொடர்ந்து வழங்குமென வலியுறுத்தினார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹோங், சீனாவின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், அதன் பொருளாதார மற்றும் வர்த்தக ஆலோசகர்கள் உட்பட இராஜதந்திர அதிகாரிகள் குழுவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டது.

## நுவரெலியாவில் மலர்...

பூங்கா நவீன மயப்படுத்தப்பட்டு , புதிய அரியவகையான பூக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும் இந்த மலர் கண்காட்சியில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட பங்குபற்றுநர்கள் இணைந்துள்ளனர். அரச மற்றும் தனியார் பிரிவுகளிலிருந்து பல போட்டியாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.இம்மலர் கண்காட்சிப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறுவோருக்கு பணப்பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இம்மலர் கண்காட்சியில், பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ திஸாநாயக்க , நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமான , முன்னாள் மாநகரசபை முதல்வர் மஹிந்த தொடபேகம மற்றும் நுவரெலியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் மாநகரசபை முன்னாள் உறுப்பினர்கள், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## இவ்வருடத்தின் முதலாவது...

சந்திரன், சூரியனை முழுவதுமாக மறைக்காது, அதற்கு பதிலாக, அது சூரியன் மீது ஒரு சிறிய இருண்ட வட்டு போல் தோன்றும், இது "நெருப்பு வளையம்" விளைவை உருவாக்கிறதென தெரிவித்துள்ளார்.

"பூமியைச் சுற்றியுள்ள சந்திரனின் சுற்றுப்பாதை நீள்வட்டமாக இருப்பதால், பூமியிலிருந்து சந்திரனின் தூரம் அதன் சராசரி மதிப்பீட்டிருந்து சுமார் 6% மாறுபடும்.

எனவே, சந்திரனின் வெளிப்படையான அளவு பூமியிலிருந்து அதன் தூரத்தைப் பொறுத்து மாறுபடும், மேலும் இந்த விளைவுதான் முழு மற்றும் வளைய கிரகணங்களுக்கிடையிலான மாற்றம்" என்று பேராசிரியர் ஜயரத்ன ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த கிரகணம், இங்கையில் தென்படாது என்றும் மேற்கு ஆஸ்திரேலியா, கிழக்கு திமோர் மற்றும் கிழக்கு இந்தோனேசிய தீவுகளில் உள்ள சில பகுதிகளுக்கு நன்றாக தென்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக சனத்தொகையில் 8.77 வீதமானவர்களுக்கு மட்டுமே சூரிய கிரகணம் தெரியும் எனவும், இலங்கை மற்றும் உலகின் பல பகுதிகளுக்கு இது நேரடியாகத் தென்படாது எனவும் பேராசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 20 ஆம் திகதி ஏற்படவுள்ள இந்த ஆண்டின் முதல் சூரிய கிரகணம் இலங்கை நேரப்படி, இந்து சமுத்திரத்தில் காலை 7.04 மணிக்கு ஆரம்பித்து பசிபிக் சமுத்திரத்தில் 12.29 மணிக்கு நிறைவடையும்.

கலப்பின கிரகணங்கள் மிகவும் அரிதானவை.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் 03 2013 அன்று கலப்பு சூரிய கிரகணம் ஏற்பட்டது. மற்றும் அடுத்த கலப்பின சூரிய கிரகணம் நவம்பர் 2031 இல் நிகழும்.

இக்கிரகணத்தை இலங்கையில் காண முடியாவிட்டாலும், பல இணையத்தளங்கள் மூலம் இதனை நேரடியாக அவதானிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## இறந்து மிதக்கும் மீன்களை... 02ஆம் பக்கத் தொடர்

பிரிவினர் மீன் இறந்து மிதப்பதனை அவதானித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து குறித்த ஆற்றின் நீரினையும் இறந்த மீன்களையும் எடுத்து பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எனவே பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை இந்த ஆற்றின் மீன்களை உணவாக உட்கொள்ள வேண்டாம் என சுகாதார பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எது எவ்வாறான போதிலும் சுமார் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும் ஏனைய அத்தியவசிய தேவைகளுக்காகவும் பயன்படுத்தும் நீரினை இவ்வாறு அசுத்தப்படுத்துவதை கண்டும் காணாதது போல் செயற்படுவது மிகவும் கவலையளிப்பதாக பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## ஏப்ரல் 22 ஆம் திகதி நாள்... 02ஆம் பக்கத் தொடர்

பங்கபற்றக் கூடிய 16 திறந்த போட்டிகளும் இதில் அடங்குவதோடு "புர செரிய" ஸ்டேண்டட் சைக்கிள் சைக்கிளோட்டம்,மரதநோட்டம், மெழுகுவர்த்தி ஏற்றல், பலூன் உடைத்தல், யானைக்கு கண் வைத்தல்,டொபி வரைதல்,சிறந்த சிரிப்பு, புத்தாண்டு அழகன் மற்றும அழகி தெரிவு உட்பட சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் அனைவரும் பங்குபற்றக் கூடிய போட்டிகளும் இதில் அடங்கும்.

அத்தோடு வெளிநாட்டவர்கள், தூதரகங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் சுற்றியுள்ள ஹோட்டல்களில் உள்ள நபர்களுக்கு பங்குபற்றுவதற்கான 10 திறந்த போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.முற்காலத்தில் கிராமங்களிலும் கிராமிய வீடுகளிலும் காணப்பட்ட பசுமையான பிணைப்பை வெளிக்காட்டும் வகையில் கிராமிய வீடொன்றுடன் கூடிய சூழலின் மாதிரியும் இங்கு காட்சிப்படுத்தப்படும். பலகாரம், ஆடைஅணிகலன்கள், சிங்கள பண்டிகை சம்பிரதாயங்கள் உள்ளடங்கியதாக அமைக்கப்படும் கிராமிய வீட்டில் றப்பான் இசைத்தல்,கிராமிய இசை, கிராமிய விளையாட்டுக்கள் உள்ளிட்ட பல அம்சங்கள் காட்சிப்படுத்தப்படும். சுற்றும் ஊஞ்சல்,மூங்கிள் வெடி,கடை வீதி,மருத்துவ இல்லம் என்பனவும் பண்டிகை நிகழ்வை அலங்கரிக்க உள்ளன.

இசை நிகழ்ச்சி இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகிறது. சஹன் ரன்வல உள்ளிட்ட குழுவினரினால் மேடையேற்றப்படும் புத்தாண்டு இசைக் கச்சேரியும் இங்கு இடம்பெற இருப்பதோடு அதனைத் தொடர்ந்து நாட்டின் பிரபலமான இசைக்குழுவான மீட்டெண்டி இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி ஆரம்பமாகும்.ரூகாந்த குணதிலக,சனுக விக்ரமசிங்க,விண்டி குணதிலக்க, தஷ்னி பெரேரா, துல்மினி பெரேரா, ஹிஜாஸ் டலீஷ், அசன்யா பிரேமதாஸ உள்ளிட்ட பிரபல பாடகர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

## 23 சுற்றுலா...

பட்டியலில் தயாரிக்கப்பட்டுள்ளது. SLTPB 2022 இன் Visiting Blogger திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு Juliana Broste இலங்கைக்கு விஜயம் செய்தமையே இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தமைக்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

நுவரெலியாவுக்கு வருவதன் மூலம் குட்டி இங்கிலாந்தின் அதிசயத்தை அனுபவிக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்பவர் பெறக்கூடிய மிக அழகான அனுபவங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நீங்கள் யானைகள் சரணாலயங்களில் சவாரி செல்லலாம், இந்தியப் பெருங்கடலிலுள்ள திமிங்கலங்கள் மற்றும் சதுப்பு நிலத்தில் உள்ள பறவைகள், பல்லிகள், ஜெல்லி மீன்கள் மற்றும் குரங்குகளை பார்வையிடலாம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சுற்றுலா மையங்களில் யால தேசிய பூங்கா, அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகியவை அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷின் கடனை....

கடனின் முதலாவது தவணையை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திலும் இரண்டாவது தவணையை செப்டம்பர் மாதத்திலும் மீள செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டின் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் இடம் பெற்ற உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கும் பங்களாதேஷ் மத்திய வங்கியின் ஆளுநர் அப்துல் ரவூப் தலுக்தருக்கும் இடையில் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தைக்கு இணங்கவே இந்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் கடனை மீள வழங்குவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்பட மாட்டாது என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பங்களாதேஷ் மத்திய வங்கி ஆளுநரிடம் தெரிவித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## வெளிநாட்டு சுற்றுலாப்...

பயணிகளை நாட்டுக்கு அழைப்பதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த புதிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ள தாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உலக வர்த்தக மையத்தில் அமைந்துள்ள ப்ளொக்சென் மத்திய நிலையத்தை நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கோல்டன் விசாவைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளிடம் விசா ஒன்றுக்காக 60 டொலர்கள் அறைவிடப்பட்டு வருவதாகவும் அந்த வகையில் கடந்த காலங்களில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளிடம் ஒன் எரைவல் விசா இலவசமாக வழங்கப்பட்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த 60 டொலர் காரணமாக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு விருப்பம் தெரிவிப்பதில்லை என்றும் அதன் மூலம் ஆயிரக்கணக்கில் டொலர்களை செலவு செய்யும் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவது தவிர்க்கப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையானது வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நிலையில்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்று நாட்டின் பொருளாதாரத்தை நிலையானதாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் சுற்றுலாத்துறை மற்றும் கல்வித்துறையை இணைத்துக் கொண்டு இவ்வாறான புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பது காலத்திற்கு பொருத்தமானது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த காலங்களில் வீதியில் இறங்கி போராட்டங்களை மேற்கொண்டவர்களின் எதிர்பார்ப்பை தற்போது அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வினாத்தாள்களை திருத்த... 02ஆம் பக்கத் தொடர்

சில அரசியல் கட்சிகள் பொய்களை கூறி மக்களிடையே வெறுப்பையும் கோபத்தையும் பரப்பி வருகின்றன. தங்களுக்கு வாக்களிக்கும் மக்களுக்கு சலுகைகளை விரும்பாதவர்கள் ஆட்சிக்கு வந்து நாட்டைக் கட்டியெழுப்புவார்கள் என்று கனவிலும் நினைக்க வேண்டாம்.

## பண்டிகைக் கால QR... 02ஆம் பக்கத் தொடர்

வண்டிக்கான 5 லீற்றர் எரிபொருள் 8 லீற்றராகவும் மோட்டார் சைக்கிளுக்கான 4 லீற்றர் எரிபொருள் 7 லீற்றராகவும் பஸ் வண்டிகளுக்கான 40 லீற்றர் எரிபொருள் 60 லீற்றராகவும் ஏனைய வாகனங்களுக்கான எரிபொருளும் கணிசமானளவு அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அவதானமாக செயற்படுமாறு... 02ஆம் பக்கத் தொடர்

மாவட்டங்களிலும் அதிகளவு உஷ்ணம் நிலவியதை உணர முடிந்துள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உடலில் உணரும் அளவுக்கு மிக அதிகமாக இந்த உஷ்ணம் காணப்படுவதாகவும் மக்கள் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்காலங்களில் அதிகளவு நீரை பருகுவதும் அவசியமென்று மருத்துவத் துறையினர் அறிவுறுத்தல்களை வழங்குகின்றனர்.

அதே வேளை, கிழக்கு, சப்ரகமுவ, மத்திய மாகாணங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பிற்பகலில் மழை வீழ்ச்சி ஏற்படலாம் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## புனித ஹஜ் யாத்திரைக்காக...

கடவுச்சீட்டுக்களை ஒப்படைத்து முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு திணைக்களமும் ஹஜ் குழுவும் கேட்டுக் கொள்கின்றன.

தெரிவு செய்யப்பட்டுள்ள ஹஜ் முகவர் நிலையங்களின் பெயர்ப்பட்டியல் விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் திணைக்கள முகநூலிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்படும் என்பதனையும் திணைக்களம் தெரிவிக்கின்றது.

மேற்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள முகவர் நிலையத்தைத் தவிர்ந்த வேறு எந்த முகவர் நிலையங்களினூடாகவும் தாங்கள் எந்தவித கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## தொழில்நுட்பக் கோளாறு...

விமான நிலையத்தை வந்தடைந்தது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கடந்த (15) அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் விமான நிலையத்துக்குச் சென்ற ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் UL 605 என்ற விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.இதனால்,இவ்விமானம்

நேற்றுக் காலை 07.40 க்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. விமானத்தில் 05 சிறுவர்கள், 17 பணியாளர்கள் உட்பட 218 பயணிகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் 06 பொறியியலாளர் குழுவொன்று கடந்த (15) அவுஸ்திரேலியா சென்று இந்த விமானத்தை சீர்செய்து உரிய திருத்தங்களை மேற்கொண்ட பின்னர், விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

## 48 மணி நேரத்தில்...

பணிப்பாளர் நாயகம் எல்.வீ.எஸ். வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த 48 மணி நேர காலப்பகுதியில் நெடுஞ்சாலைகளில் 02 இலட்சத்து 56 ஆயிரத்து 225 வாகனங்கள் போக்குவரத்து செய்துள்ளதாகவும் எவ்வாறெனினும் இந்த பண்டிகைக் காலங்களில் குறிப்பிடத்தக்க பாரதூரமான விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழ், சிங்கள புத்தாண்டு காலங்களில் தமது சொந்த ஊர்களுக்குச் செல்வோர் மற்றும் ஊர்களிலிருந்து திரும்புவோருக்கான விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெற்றதுடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை ஆகியவற்றின் மூலமே மேற்படி வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## '800' திரைப் படத்தின் ...

'800' திரைப்படத்தின் First Look நேற்று வெளியிடப்பட்டது.

முத்தையா முரளிதரனின் 51 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்றுக் காலை 08 மணிக்கும் இதன் முதற்பார்வை வெளியிடப்பட்டது.

இத் திரைப்படம் இவ்வருடம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் வெளியாகவுள்ளது.

சர்வதேச டெஸ்ட் போட்டிகளில், அதிகூடிய விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனை இன்னும் முரளிதரனிடமே உள்ளது.

அவர் தனது டெஸ்ட் வாழ்க்கையில் 800 விக்கெட்டுகளை பெற்றுள்ளார்.

அதனை கௌரவிக்கும் விதமாக அவரது, வாழ்க்கை வரலாற்றை பற்றிய திரைப்படம் தயாரிக்கப்பட்டு '800' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்தில், முத்தையா முரளிதரன் கதா பாத்திரத்தில், ஒஸ்கார் விருது வென்ற ஸ்லம்டோக் மில்லியனர் படத்தில் நடித்த, மாதுர் மிட்டல் நடித்துள்ளார். கதாநாயகியாக மஹிமா நம்பியார் நடித்துள்ளார். எம்.எஸ். சிறிபாதி இயக்கும் இந்தத் திரைப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைக்கிறார்.

முன்னதாக முதன்மை கதாப்பாத்திரத்தில் நடிப்பதற்கு விஜய் சேதுபதி ஒப்பந்தம் செய்யப்படார். எனினும், அதன் பின்னர் எழுந்த விமர்சனங்களையடுத்து, அவர் அதிலிருந்து விலகிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 179 Kg ஹெரோயினுடன்...

அடிப்படையாகக் கொண்டு கடற்பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் இலங்கைக்கு தெற்கே அம்பாந்தோட்டை குடா ராவணா பிரதேசத்திலிருந்து 132 கடல்மைல் தூரத்தில் மேற்கொண்டுள்ள விசேட நடவடிக்கையின் போதே இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் பயணித்த மேற்படி படகிலிருந்து 3,593 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள 179 கிலோ மற்றும் 654 கிராம் எடையுடைய போதைப்பொருளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுடன் கைப்பற்றியுள்ளனர்.

அந்த போதைப்பொருள் மற்றும் சந்தேச நபர்கள் அறுவரையும் நேற்று அதிகாலை காலி துறைமுகத்துக்கு கொண்டுவந்ததுடன் போதைப்பொருளை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவும் பங்கேற்றிருந்தார்.

கடற்பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான கப்பலை ஈடுபடுத்தி இலங்கைக்கு மேற்கே அம்பாந்தோட்டை கடற்பரப்பில் 244 கிலோ மீற்றர் தூரத்தில் ஆழ்கடல் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் சந்தேகத்திற்கிடமானவர்கள் ஆழ்கடலில் பயணித்துக் கொண்டிருந்த ஆழ்கடல் மீன்பிடி படகு அதன்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் படகில் சூட்சுமமாக மறைத்து வைத்து 160 பொதிகளாக போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் 6 உள்நாட்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த சந்தேக நபர்கள் அறுவரும் 25 – 32 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர்கள் நாகுலுகமுவ, குடாவெல்ல, தெதொல்பிட்டிய மற்றும் திருகோணமலையை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக கடற்படைகள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் அறுவரையும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருளுடன் கடற்படையானது இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் 4,908 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய போதைப் பொருட்களை கைப்பற்றியுள்ளனர். கடற்றொழில் என்ற போர்வையில் இத்தகைய போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை கைது செய்வதில் கடற்படையினர் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Stock market opens on a quiet note following the Sinhala and Tamil New Year holidays...

**Daily Market Watch**
17th April 2023

### Market Commentary

The stock market opened on a quiet note following the Sinhala and Tamil New Year holidays as some stock market participants still appeared to be away. Although turnover remained low at LKR 1,292.2 Mn, however popular stocks such as Expolanka Holdings rose by 6.39% during the trading session and accounted for 28.8% of the day's turnover. With most investors expected to return over the next few days, we expect more funds to move into the stock market at the current historically low valuations with an increase in both local and foreign investor participation expected.


### Market Performance

| | 17.04.2023 | 12.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,405.9 | 9,415.3 | -0.10 |
| S&P SL 20 Index | 2,767.9 | 2,754.2 | 0.50 |
| Turnover (LKR mn) | 1,292.2 | 947.5 | 36.4 |
| Foreign Purchases (LKR mn) | 220.2 | 40.4 | 444.7 |
| Foreign Sales (LKR mn) | 145.8 | 56.8 | 156.8 |
| Market Cap (LKR bn) | 4,008.5 | 3,995.1 | 0.3 |
| Market Cap (US$ bn) | 12.5 | 12.5 | 0.3 |
| Traded Companies | 250 | 243 | 2.9 |
| Market PER (x) | 5.2 | 5.1 | 0.4 |
| Price to Book (x) | 1.0 | 1.0 | 0.0 |
| Dividend Yield (%) | 3.9 | 4.0 | -0.3 |

### Contributors to ASPI




### Market Benchmarks




### Corporate News

CASH DIVIDENDS

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Talawakelle Tea Estates PLC (TPLN) - LKR 17.35. XD date – 20.04.2023.

First Capital Holdings PLC (CFVF) - LKR 2.25. XD date – 19.04.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.


Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.


Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023

### Turnover Breakdown




### Relative Strength Index (RSI)




### Largest Trades




### Top Gainers and Loosers




### Key Rates

| | 17.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.09% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.64% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# கிழக்கின் குரல்



## கிழக்கில் உறுதியான தலைமைத்துவத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட வேண்டும்

### காரைதீவில் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

(காரைதீவு குறூப் நிருபர்)



கிழக்கு மாகாணத்தில் உறுதியான தலைமைத்துவத்தை ஏற்படுத்த எமது கட்சி முயற்சி எடுத்து வருகிறது. எனவே அனைவரும் ஒன்றுபட வேண்டும் என, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் தலைவர் த.தவக்குமார் தலைமையில் சனிக்கிழமை மாலை விபுலானந்தா மைதானத்தில் இடம்பெற்ற கலாசார விளையாட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் உரையாற்றுகையில்,கிழக்கில் அம்பாறை மாவட்டம் தனித்துவமானது. அங்கு தமிழ் மக்கள் இன்னோரன்ன சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

அம்பாறை மாவட்டத்திற்கு என்று தனித்துவமான அரசியலை முன்கொண்டுசெல்லவேண்டும்.பிரதேச சபை என்றாலும் சரி மாகாண சபை என்றாலும் வெவ்வேறு தீர்மானம் வேண்டும். பாராளுமன்றம் என்றால் மற்றுமொரு விதமான தீர்மானம் எடுக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தல் என்றால் இன்னும் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

காரைதீவு கலாசாரம் பண்பாட்டுக்கு பேர் போன ஊர். உலகறிந்த மாமனிதர் சுவாமி விபுலானந்தர் பிறந்த புண்ணிய பூமி. வடக்கு கிழக்கிலே சமூக மாற்றத்தை அன்று ஏற்படுத்திய அந்த மகான் பிறந்த காரைதீவு மண் மகத்துவம் மிக்கது. இங்கு உள்ளக விளையாட்டரங்கு நிறைவுற முப்பது மில்லியன் ரூபா தேவை என்று தலைவர் சொன்னார்.

இன்றைய நெருக்கடியான நிலையில் இது சற்று சிரமமானது என்றாலும் இரண்டு மூன்று மாதங்களிலே இதற்கான கூரை அமைக்கும் வேலையை ஆரம்பிக்க வேண்டும். நீங்களும் அதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

1960 ஆம் ஆண்டுக்கு பின்னர் மட்டக்களப்பிலிருந்து பிரிந்து அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்ற பொழுது காரைதீவு தம்பிலுவில் திருக்கோயில் ஆலையடி வேம்பு என்று பல தனித்துவமான தமிழ் கிராமங்கள் போராட்டத்தில் அதிக பங்களிப்பை செய்தன. அதன் காரணமாக பல பின்னடைவுகளை சந்தித்தது.

எப்படி இருந்தாலும் கிழக்கின் ஓர் அங்கமே அம்பாறை மாவட்டம். எனவே அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியங்கள் பொருளாதார அபிவிருத்தி, கல்வி விருத்தி போன்றவற்றில் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இங்கு மீட்பர்கள் என்று பலரும் வருவார்கள். இங்கு சுமந்திரனோ, சம்பந்தன் ஐயாவோ வந்து கிழக்கை மீட்க முடியாது. முன்னாள் தளபதி இங்கு வந்து வீர வசனங்களை பேசி உசிப்பேற்றி விட்டு போய்விட்டார். இன்றும் தமிழ் மக்கள் நிர்க்கதியாக இருக்கின்றார்கள். எனவே உறுதியான தரமானதாக தலைமைத்துவங்களை கிழக்கிலே ஏற்படுத்த வேண்டும் என்றார்.

## காத்தான்குடியில் இலவச ஆடையகம் திறந்து வைப்பு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிஸ்மி இளைஞர் கழகம் நான்காவது வருடமாக பெருநாள் இலவச ஆடையகம் ஒன்றை ஞாயிற்றுக்கிழமை (16) திறந்து வைத்துள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டு அவர்கள் பெருநாள் தினத்தில் மற்றவர்களைப் போல புதிய ஆடைகளை அணிய வேண்டும் என்பதற்காக இந்த வேலை திட்டத்தினை காத்தான்குடி பிஸ்மி இளைஞர் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

பிஸ்மி நிறுவனத்தின் ஸ்தாபகர் அஷ்ஷெய்க் எம்.பி. எம் பிர்தௌஸ் நழீமியின் ஆலோசனை, வழிகாட்டல் என்பவற்றுடன் இதன் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம் நுஸ்ரி நழீமி, பிஸ்மி கல்வி நிறுவனம் பிஸ்மி இளைஞர் கழகம் என்பவற்றினுடைய விரிவுரையாளர்கள் அதன் அங்கத்தவர்களது முயற்சியின் பயனாக இந்த இலவச ஆடையகம் நடாத்தப்பட்டுகிறது.

இத் திட்டத்தின் கீழ் 150 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 600 பேருக்கு மேல் பயனடைந்துள்ளனர். இந்த முயற்சியின் ஊடாக மிகவும் வறிய குடும்பங்களை சேர்ந்த 150க்கு மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாக பயனடையவுள்ளனர்.

## சட்டவிரோத மணல் அகழ்வை ஒழிக்க சுற்றாடல் துறை அமைச்சு நடவடிக்கை

### அமைச்சர் நசீர் அகமட்





(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

எதிர்காலத்தில் மணல் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குகையில் மணல் மாபியாக்களை ஒழிக்க சுற்றாடல் துறை அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் நசீர் அகமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் நடைபெற்ற புவி சரிதவியல் அளவைகள் சுரங்கங்கள் பணியகத்தின் செயல்பாடுகளை நேர்த்தியாக அமுல்படுத்தும் பொருட்டு மாவட்டத்தில் மாதிரி அபிவிருத்தி திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது பற்றியும் ஆராயும் விசேட கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், எதிர்காலத்தில் பிரதேச மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் மணல் அகழ்வு அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மணல் மாபியாக்களை ஒழிக்க பொது மக்களின் தகவல் அவசியமாகின்றது. எனவே அவ்வப் பிரதேச மக்கள் தகவல்களை வழங்கி இந்த மணல் மாபியாக்களை ஒழிக்க உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

பிரதேச செயலாளர்கள், இந்த மணல் மாபியாக்களை ஒழித்துக் கட்டுவதற்கு தம்மாலான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் புவி சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் தலைவர் ஆர்.சந்ஜீபன், பணிப்பாளர் நாயகன் எம். எம்.ஜே.பி அஜித் பிரேம, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுப்புன் எஸ். பத்திரகே மற்றும் மாவட்டத்தில் உள்ள திணைக்களத்தின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், சுற்றாடல் மத்திய அதிகார சபை மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் இங்கு பிரசன்னமாய் இருந்தனர்.

## வக்பு சொத்துக்கள் தொடர்பாக சட்டத்தில் திருத்தங்கள் வேண்டும்

### சாய்ந்தமருதில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்

(கல்முனை விசேட நிருபர்)



வக்பு சொத்துக்கள் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மெற்றோ பொலிட்டன் கல்லூரி ஒழுங்கு செய்திருந்த வருடாந்த இப்தார் வைபவம், மர்ஹூம் ஹஸ்ரத் யூ.எல்.எம்.காஸிம் மௌலவி தொடர்பான நினைவேந்தல் மற்றும் விஷேட துஆப் பிராத்தனை நிகழ்வுகள் சிராஸ் மீராசாஹிப் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (16) சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,சாய்ந்தமருது பிரதேசத்தின் மூத்த உலமாவாகத் திகழ்ந்த சன்மார்க்க அறிஞர் யூ.எல்.எம்.காஸிம் மௌலவி அண்மையில் காலமான செய்தி எம் எல்லோருக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி, அரவணைக்கின்ற சிறந்த பண்பாளராக அவர் காணப்பட்டார்.

அன்னாரை நினைவு கூர்கின்ற இச்சந்தர்ப்பத்தில் அன்னார் மார்க்கக் கல்வி கற்ற மஹரகம கபூரியா அரபுக் கல்லூரியின் வக்பு சொத்துக்கள் இன்று சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டிருப்பது குறித்து கவலையோடு பிரஸ்தாபித்து, பேச வேண்டியிருக்கிறது. இது ஒரு சமூகப் பிரச்சினையாக கருதப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினையாகும்.

இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் மத்தியில் ஏராளமான வசதி படைத்தவர்கள், பரோபகாரிகள் தம்முடைய மரண ஈடேற்றத்திற்காக மனமுவந்து வக்பு சொத்தாக விட்டுச் சென்றிருக்கின்ற பல சொத்துக்களை சரியான பரிபாலனம் இல்லாமல், சீரழிந்து போக, தவறாக பயன்படுத்தப்படுகின்ற நிகழ்வுகள் ஏராளமாக நடந்து கொண்டிருக்கின்றன.

அண்மைக்காலமாக பேசப்படுகின்ற இந்த கபூரியா அரபுக் கல்லூரியின் வக்பு சொத்துக்கள் மர்ஹூம் எம்.கே.எச். அப்துல் கபூர் எனப்படுகின்ற கொழும்பின் பெரும் கோடீஸ்வர வர்த்தகரினால் அன்பளிப்பு செய்யப்பட்டவையாகும்.

ஆனால் இந்த வக்பு சொத்துக்கள் இன்று மர்ஹூம் அப்துல் கபூர் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் இடையில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டு, நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் வக்பு செய்தவரின் நோக்கத்திற்கு மாறான நிலைப்பாடுகளை எடுப்பதைத் தவிர்த்து, இதனை சுமூகமாக தீர்ப்பதற்குரிய சில சட்டத்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கூடிய அவதானம் செலுத்தி, ஆலோசித்து வருகின்றோம் என்று ரவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டார்.

## வெண்ணிற ஈ தாக்கத்தால் 5000 தென்னைகள் பாதிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வெண்ணிற ஈ தாக்கம் காரணமாக சுமார் ஐயாயிரம் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் .

கந்தளாய் பேராறு, பேராற்று வெளி வட்டுகச்சி, வான்எல, அக்போபுர அக்போகம, முள்ளிப்பொத்தானை மற்றும் தம்பலகாமம் போன்ற பகுதிகளில் இந்நோய்த் தாக்கம் வேகமாக பரவி வருவதாக தெரிவிக்கின்றனர் .

இதனால் பல தென்னந் தோட்டங்கள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பல்வேறு வகையான கிருமி நாசினிகள் தெளித்தும் இதுவரைக்கும் இந் நோயை கட்டுப்படுத்த முடியவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே விவசாய அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி இந் நோயைக் கட்டுப்படுத்த வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## தென்கிழக்கு பல்கலையில் உயர்மட்ட கலந்துரையாடல்



(ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கும், சவுதி அரேபியா கிங்பஹ்த் பெற்றோலிய அன்ட் மினல் பல்கலைக்கழகத்திற்குமிடையிலான உயர் மட்டக் கலந்துரையாடல் திங்கட்கிழமை (17) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் அழைப்பின் பேரில் சவுதி அரேபியா கிங்பஹ்த் பெற்றோலிய அன்ட் மினல் பல்கலைக்கழக கலாநிதி சாதிக் சயிட் முகம்மட் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்து பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்களுடன் தென்கிழக்கு பல்கலைக்கழக கல்வி மற்றும் பௌதீக அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக் கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனுடன் இணைந்ததாக இக் கலந்துரையாடல் நடைபெற்றதாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.





மருதமுனை பாக்கியத்துஸ் ஸாலிஹாத் ஜும்ஆ பள்ளிவாசல் பரிபாலன சபையின் ஏற்பாட்டில் ரமழான் கால 21 நாள் கற்கை நெறியினை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், மாணவர் மன்றமும் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.எச்.பஸ்லுல் பாஜ் தலைமையில் நடைபெற்றது. சகல தடைதாண்டல்களிலும் முதலிடம் பெற்ற றஸ்மி மூஸா அஹ்னப், அஸார் சைனப் ஸஹானி ஆகியோருக்கான பரிசில்களை மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரி பிரதிப் பணிப்பாளர் ஆர். நுவீஸ் மக்கி, சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூஸா உள்ளிட்ட அதிதிகளால் மாணவர்கள் கௌரவிக்கப்படுவதனை படங்களில் காணலாம். (படம்: பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

## அதிகரித்த சம்பளத்தை காலம் தாழ்த்தாது வழங்க வேண்டும்

### தொழிற்சங்க தலைவர் கபீர்

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் ஊடாக ஓரளவு தீர்க்கப்பட்டு வருகின்றது. ஆனால், அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை பல ஆண்டுகளாக அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்படாமல் காணப்படுகிறது. இதனால் ஏழ்மையான குடும்பத்தில் வசிக்கும் அரச ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அன்றாடம் பொருளாதார ரீதியாக பல்வேறு விதமான இன்னல்களை சந்தித்து வருகின்றனர். மேலும் இவ்வருட சிங்கள, தமிழ் புத்தாண்டு மற்றும் பெருநாள் கொண்டாட்டங்கள் அரச ஊழியர்களைப் பொறுத்தவரை எட்டாக்கனியாக மாறியுள்ளது.

நாட்டின் தற்போதைய விலை நிலவரத்தில், குறைந்த வருமானம் பெறும் அரச ஊழியர்கள் அவர்களது வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு கூட செல்ல முடியாமல் திணறி வருகின்றனர். அரச ஊழியர்களுக்கு 20000 ரூபா சம்பளத்தை உயர்த்தப் போவதாக அண்மையில் அமைச்சர் ஒருவர் கூறியிருந்தார். இந்தச் செய்தி அரச ஊழியர்களுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்



அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி சிவகுருநாத பீடம் சமாதி கோவிலிலும், மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் மேற்படி தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

## எல்லை மீள் நிர்ணய அறிக்கையின் குறைபாடுகளைத் தெரியப்படுத்துங்கள்

### சமூகமட்ட அமைப்புகளிடம் சிறிதரன் எம்.பி கோரிக்கை

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணய வரைபு அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதையும், அது தொடர்பில் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்க முடிவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும் பெறப்படாமலேயே இவ் எல்லை மீள் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிருவாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற்கொள்ளப்படாமை மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும் நிருவாக ஸ்திரத்தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில், அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்கள் தங்களின் எழுத்து மூல பரிந்துரைகளை, எல்லை மீள் நிர்ணயக் குழுவின் மாவட்டத் தலைவரான அரசாங்க அதிபருக்கு முகவரியிட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பிரதியிட்டு எதிர்வரும் 2023.04.25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைப்பதன் மூலம், உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் என்றார்.

## டெங்கு நோயினால் பெண் சிப்பாய் உயிரிழப்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த கொழும்பைச் சேர்ந்த எம்.கே. செவ்வந்தி எனும் பெண் சிப்பாய் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளார்.

கடந்த 05ஆம் திகதி காய்ச்சல் காரணமாக பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், மருத்துவ பரிசோதனையில் டெங்கு காய்ச்சல் உறுதியானது.

அதனை அடுத்து 07ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## மதுப்பாவனையாளர்களின் தொல்லை அதிகரிப்பு







கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் மது பிரியர்களின் தொல்லை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டி காட்டுகின்றன.

இவர்களால் வலிப்பறிகள், A.35 பிரதான வீதிகளில் இரவு வேளைகளில் மக்கள் தமது அவசர தேவை கருதி வெளியில் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அண்மையில் தர்மபுரம் மத்திய கல்லூரிக்கு சொந்தமான விளையாட்டு திடலில் பாஸ்கெட் போல் விளையாடும் கம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி சேதமாக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் நாளாந்தம் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் நிழல் குடை ஒன்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள மாபில்கள் (டையில்) பிடுங்கி எறியப்பட்டுள்ளன. அத்துடன் கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி அலுவலகத்திற்கு சொந்தமான ஆசிரியர்கள் விடுதிகள் பல வருடகாலமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. இந்த கட்டடங்களும் மது பிரியர்களின் பாவனையிலுள்ளது என இப்பகுதி பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## குமுதினி படகின் திருத்தப்பணிகளை பார்வையிட்ட சிறிதரன் எம்.பி



பரந்தன் குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் குமுதினி படகினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சென்று பார்வையிட்டுள்ளார்.

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக மாவிலித்துறையில் தரித்திருந்ததுடன் திருத்தப்பணிகளுக்காக வல்வெட்டித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு நீண்ட காலமாக திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை படகு என்பன நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் குமுதினி படகு பழுதடைந்ததையடுத்து வடதாரகை படகு மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந் நிலையில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் குமுதினி படகின் திருத்தப்பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நெடுந்தீவைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் வரதன், நெடுந்தீவைச் சேர்ந்த கட்சியின் செயற்பாட்டாளர்கள் சென்று பார்வையிட்டு அதன் நிலமைகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முல்லைதீவு கிழவன்குளம் பகுதியில்

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் பலி

பரந்தன் குறூப் நிருபர்

முல்லைதீவு கிழவன் குளம் பகுதியில் பாம்பு கடிக்கு இலக்காகிய ஐந்து பிள்ளைகளின் தந்தையான மாற்றுத்திறனாளி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்துக்கு உட்பட்ட கிழவன்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு அடித்து குற்றுயிராய் கிடந்த பாம்பினை கையினால் தூக்கியதில் பாம்பு கடிக்கு இலக்காகிய நபர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் கிழவன் குளத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் (வயது 47)என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட நான்கு ஆடுகள் நெல்லியடியில் மீட்பு

கரவெட்டி தினகரன் நிருபர்



நெல்லியடி பொலிஸாரால் இறைச்சிக்காக வெட்டுவதற்கு கொண்டு சென்ற நான்கு ஆடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே நேற்று முன்தினம் ஞாயிறு பிற்பகல் 4:00 மணியளவில் நான்கு ஆடுகளும் துன்னாலை குடவத்தை பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இதே வேளை குறித்த ஆடுகள் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் நெல்லியடி பொலிசாருக்கு கிடைக்கவில்லை என்று உரியவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸாரால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



கிளிநொச்சி பூனகரி சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்த கடற்கரையோரப் பகுதிகள் படையினரால் தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 52 ஆவது படைப்பிரிவின் 523 ஆவது காலாட் பிரிகேடின் 11 ஆவது களப் பொறியியல் படையினரால் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகிலுள்ள கடற்கரைப் பகுதியை தூய்மைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (படம்: பரந்தன் குறூப் நிருபர்)

## அன்னை பூபதிக்கு சாவகச்சேரியில் உணர்வுபூர்வமான அஞ்சலி



சாவகச்சேரி விசேட நிருபர்

தியாகத்தாய் அன்னை பூபதியின் நினைவு தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கும் அன்னை பூபதியின் ஊர்தி பவனிக்கு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நகரில் உணர்வுபூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேற்படி அஞ்சலி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்,சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர்களான நடனதேவன், நிதிகேசன் மற்றும் விஜயேந்திரன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் பொதுமக்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

மேற்படி ஊர்தி ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் ஆலய முன்றலில் ஆரம்பித்து இன்று செவ்வாய்க்கிழமை அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்த மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலயத்தை சென்றடையவுள்ளது.

அன்னை பூபதி இந்திய வல்லாதிக்க அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுத்து 1988ஆம் ஆண்டு 31 தினங்கள் உண்ணாவிரதம் இருந்து தன்னுயிரை துறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு பஸ்நிலையம் திறந்து வைக்கப்பட்டும் பயன்படுத்தப்படாத நிலையில்

பரந்தன் குறூப் நிருபர்

முல்லைத்தீவு நகரத்துக்கான பஸ் நிலையம் கடந்து 2020 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட போதும் இது வரை பயன்படுத்தப்படாத நிலையில் கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகிறது.

முல்லைதீவு நகரத்துக்கான புதிய பஸ் நிலையமானது நகர விருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பஸ் நிலையமானது அதன் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவுறுத்தப்படாத நிலையில் ஆரம்பகட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்ட கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08ஆம் திகதி பொது மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் தற்போது கால்நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுகின்றது. குறித்த பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட கடைத்தொகுதிகளும் இதுவரை திறந்து வைக்கப்படாமலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கைவிசேடம் வழங்கும் நிகழ்வு

பரந்தன் குறூப் நிருபர்



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கைவிசேடம் வழங்கும் புண்ணிய நிகழ்வு மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.


பிறந்துள்ள சோபகிருது தமிழ், சிங்கள புத்தாண்டினை சிறப்பிக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கைவிசேடம் வழங்கும் புண்ணிய நிகழ்வு மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்க தலைவர் திருமதி லி.கஜாலினியின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு பிறந்திருக்கின்ற புதுவருடம் அனைவரது எதிர்பார்ப்புக்களும் நிறைவேறும் வகையில் சுபிட்சமான வருடமாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதுடன் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் கைவிசேடத்தினை வழங்கி வைத்தார்.

## 'வி.என்.மதிஅழகன் சொல்லும் செய்திகள்'

### கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களுக்கு நூல்கள் வழங்கப்படவுள்ளன

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என். மதிஅழகனால் எழுதப்பட்ட 'வி.என் மதிஅழகன் சொல்லும் செய்திகள்' எனும் நூலின் பிரதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.




க.பொ. த உயர்தரத்தில் ஊடகக் கல்வியை ஒரு பாடமாக தெரிவு செய்து கற்கும் மாணவர்களுக்கே நூற் பிரதிகள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மிக விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அனுசரணையினை கனடா சி.ரி.ஆர் 24 எனும் தமிழ் வானொலிச் சேவை வழங்கி உள்ளது. மாணவர்கள் தேவையுணர்ந்து நூற்பிரதிகளை கையளிப்பதற்கான ஒழுங்குகளை பிரபல எழுத்தாளர் தபேந்திரன் வேதநாயகம் முன்வந்து செய்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக சி.ரி.ஆர் 24 வானொலி சேவையின் அனுசரணையில் வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கும் ஏக காலத்தில் நூற்பிரதிகளை கிடைக்கச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக வி.என்.மதிஅழகன் தினகரனுக்குத் தெரிவித்தார்.

'வி.என்.மதிஅழகன் சொல்லும் செய்திகள்' நூலை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஏற்கனவே உசாத்துணை நூலாக ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்



## எவோட்ஸ்- 2023 அறிவிப்பாளர் போட்டி

புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்தும் எவோட்ஸ்2023 கலை, கலாசாரப் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியாக அறிவிப்பாளர் போட்டி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்போட்டி நேரடிப் போட்டியாக நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ள விரும்புவோருக்கான நிபந்தனைகள் வருமாறு:

1) போட்டியாளர் 18 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2) போட்டி நடைபெறும் தினம் முன்கூட்டி அறிவிக்கப்படும். அத்தினத்தில் தவறாது நேரடியாகப் பங்கேற்கவேண்டும்.

3) போட்டியில் பங்கேற்பதற்குரிய விடயதானங்கள் அன்றைய தினமே வழங்கப்படும்.

4) துறைசார்ந்த மூவர் நடுவர்களாக கலந்து கொள்வர்.

5) அறிவிப்பாளர் போட்டியின் முடிவுகள் அன்று அறிவிக்கப்படும்.

6) அத்துடன் எவோட்ஸ்2023க்கான கவிதை மற்றும் சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசும் சான்றிதழும் அன்று வழங்கப்படும்.

7) அறிவிப்பாளர் போட்டியில் நேரடியாக கலந்து கொள்வோருக்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது. வெற்றிபெற்றவர்களுக்கு மட்டும் பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்

8) விண்ணப்பங்கள் 20.05.23 வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாம் பரிசு 10.000 ரூபா சான்றிதழ்

இரண்டாம் பரிசு – 7.500 ரூபா சான்றிதழ்

மூன்றாம் பரிசு – 5.000 ரூபா சான்றிதழ்

மேலதிகத் தொடர்புகளுக்கும் விண்ணப்பத்திற்கும் Puthiyaalaikalaivaddam1980@gmail.com மற்றும் whatsapp மூலம் 075 4880172

அலைபேசி தொடர்புக்கு 0762002701, 0776274099, 0777412604, 0777111905




வணக்கத்திற்குரிய சமந்தபத்ர தேரர் அண்மையில் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது இந்தியாவிற்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி வெங்கடேஸ்வரனை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தபோது...

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள்;

# உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவளித்தேயாக வேண்டும்

### கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஜனாதிபதி வலியுறுத்து



பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு, உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவளித்தேயாக வேண்டும் என்றும் இதை எதிர்க்கும் கருத்துக்கள் தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான சட்டவரைவு மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை , உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் (15) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, "உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் அதற்குப் பொறுப்புக் கூறுவது தொடர்பிலும், அரசினுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும் அந்த ஆணைக் குழு மிகவும் அவசியம். இலங்கை இறைமையுள்ள நாடு. எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கு ஆதரவளித்தே தீரவேண்டும்.

அதைவிடுத்து சர்வதேசம்தான் தீர்வைத்தரும் என்று காத்திருப்பவர்கள் குறித்தோ, ஆணைக்குழுவை எதிர்ப்பது தொடர்பிலோ நான் கருத்துக் கூறவும் விரும்பவுமில்லை, அது பற்றி அலட்டிக்கொள்ளவும் விரும்பவுமில்லை. நாட்டின் அதியுயர் சபையில் சட்டவரைவைத் தயாரித்து ஒப்படைப்போம். அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எங்களின் விருப்பம்" எனத் தெரிவித்துள்ளார்.

## சமுர்த்தி சௌபாக்யா புத்தாண்டு விழா

திறப்பனை தினகரன் நிருபர்

சமுர்த்தி சௌபாக்யா புத்தாண்டு விழா அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜி. சேனாரத்ன தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இப் புத்தாண்டு கண்காட்சியில் சுமார் 40 தொழில் முனைவோர் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு பண்டிகைக் காலத்திற்கு தேவையான அலங்கார செடிகள், ஆயத்த ஆடைகள், கைவினைப் பொருட்கள், சமையலறை பாத்திரங்கள், அரிசி, மசாலா பொருட்கள், முட்டை, உணவு, இனிப்புப் பண்டங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும் என மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் இதில் கலந்து கொண்டு தெரிவித்தார்.

சிறிய மற்றும் சுயதொழில் செய்யும் சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கும், சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தில் நுகர்வோருக்கு தேவையான பொருட்களை மலிவு விலையில் கொள்வனவு செய்வதற்கும் இந்த சமுர்த்தி சௌபாக்ய புத்தாண்டு கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## வீதி விபத்தில் இரு பெண்கள் ஸ்தலத்தில் பலி

### பொலன்னறுவையில் சம்பவம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலன்னறுவையில் இடம் பெற்ற வீதி விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலன்னறுவை ஓனேகட வீதி வலேகட பகுதியில் கடந்த சனிக்கிழமை (15) குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகமாக வந்த கென்டர் வாகனம் ட்ரக்டர் ஒன்றுடன் மோதியதில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்துள்ளவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 46 மற்றும் 47 வயதுடைய சகோதரிகளாவர். விபத்தில் இரண்டு சிறுவர்கள் உட்பட எட்டு பேர் காயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெகுதாவெவ பகுதியில் பாதுகாப்பற்ற நிலையிலிருந்த கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந் (14) இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவனே உயிரிழந்துள்ளார். வீட்டுக்கு அருகில் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பற்ற நிலையிலிருந்த கிணற்றில் தண்ணீர் நிறைந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## இலங்கை குரங்குகள் சீனாவுக்கு ஏற்றுமதி முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார்

### விவசாய அமைப்புகள் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் குரங்குகளை அகற்றுவதற்கு விவசாய அமைச்சு மேற்கொள்ளும் எத்தகைய நடவடிக்கைகளுக்கும் தாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என பெரும்பாலான விவசாய அமைப்புகள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் தெரிவித்துள்ளன.

முதற்கட்டமாக ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கப் போவதாக தெரிவித்துள்ள அவர்கள், சுற்றாடல் அமைப்புகள் மற்றும் பல்வேறு தரப்பினர் முன்வைத்து வரும் விமர்சனங்களுக்கு அப்பால் விவசாய அமைப்புகள் தமது முழுமையான ஒத்துழைப்பை அதற்காக வழங்கும் என்றும் அந்த அமைப்புக்கள் விவசாய அமைச்சரிடம் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பெருந்தொகையான குரங்குகள் காணப்படும் நிலையில் அவற்றை சீனாவிலுள்ள விலங்குகள் பூங்காக்களுக்கு பெற்றுக் கொடுக்க தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் விவசாய பயிர்ச்செய்கைகளுக்கு பெருமளவு பாதிப்புகளை ஏற்படுத்தும் விலங்குகளில் குரங்குகள் முதலிடத்தில் உள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள விவசாய அமைச்சர், முதற்கட்டமாக 100,000 குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


இலங்கையிலுள்ள குரங்குகளை சீன விலங்குகள் பூங்காக்களுக்கு பெற்றுத் தருமாறு சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகள் விவசாய அமைச்சிடம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பான விசேட பேச்சுவார்த்தையொன்று விவசாய அமைச்சில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் இடம் பெற்றுள்ளது. அந்த பேச்சுவார்த்தையில் விவசாய அமைச்சு தேசிய வனவிலங்கு பூங்காக்கள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

அதற்கிணங்க எமது நாட்டின் குரங்குகளை வெளிநாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்ட நிலைமைகள் தொடர்பில் விடயங்களை ஆராய்வதற்காக அமைச்சரவையின் அனுமதியுடன் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கி சிறுவன் ஒருவர் ஸ்தலத்தில் பலி

### மேலும் இரு சிறுவர்கள் படுகாயம்



ருவன்வெல்ல பகுதியில் மின்னல் தாக்கியதில் 12 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இரண்டு சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ருவன்வெல்ல மாப்பிட்டிகம பிரதேசத்தில் களனி ஆற்றில் குளித்துவிட்டு வீட்டிற்கு நடந்து சென்றபோதே இந்த அனர்த்தத்தை சந்தித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், மின்னல் தாக்கி ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.



கொழும்பு எதுல் கோட்டையில் புது வருடத்தை முன்னிட்டு சனிக்கிழமை (15) மாலை நடைபெற்ற அழகு ராணி போட்டியில் முதலிடம் பெற்ற சிறுமி ஒருவருக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் பரிசுகள் வழங்குவதையும் அருகில் திரைப்பட நடிகையான வஸ்தலா வியலகொடயும் விழா ஏற்பாட்டாளர்களையும் படத்தில் காணலாம்.

## புதுவருட தினத்தில் வாகன விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

சிங்கள, தமிழ் புதுவருட தினத்தில் மிகிந்தல பொலிஸ் பிரிவில் இடம் பெற்ற வாகன விபத்தில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் கோட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி மொகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

இச்சம்பவம் கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் மிகிந்தல முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள பாதையொன்றில் இடம்பெற்றுள்ளது. மூன்று இளைஞர்கள் குளத்திற்கு சென்று நீராடி விட்டு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு 23 வயதுடைய இளைஞர் மரணமடைந்துள்ளதுடன் 17 வயது மற்றும் 21 வயதுடைய இரு இளைஞர்கள் பலத்த காயங்களுக்குள்ளாகி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன ஏற்பாட்டில்; கெச்சிமலை தர்கா முற்றவெளியில் இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு






### சர்வமத தலைவர்களும் பங்கேற்பு

பேருவளை விசேட நிருபர்

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நல்லிணக்க இப்தார் நிகழ்வொன்று (16) மாலை வரலாற்றுப் பிரசித்திபெற்ற கெச்சிமலை தர்கா முற்றவெளியில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி சம்மேளனத்தின் தலைவர் எம்.எச்.எம். உவைன் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பௌத்த சமயப் பாடசாலை மற்றும் அஹதிய்யா பாடசாலை மாணவர்கள், இந்து, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய மதங்களை பின்பற்றும் அதிகளவானோர் பங்குபற்றினர்.

பேருவளை பொலிஸ் பிரிவின் சிவில் பாதுகாப்புக் கமிட்டியின் சிபாரிசுக்கமைய இந்த நல்லிணக்க இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. சங்கைக்குரிய அஷ் ஷேய்க் ஸக்கி அஹமட் பின் அஷ்ஷெய்க் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி துஆப் பிராத்தனை நடாத்தினார். பேருவளை மங்கள பிரிவன விகாரையின் அதிபதியும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் பின்னவல சங்க சுமன தேரோ, பேருவளை பிரதேச செயலக நல்லிணக்க கமிட்டியின் முக்கியஸ்தர் மைத்திரி மூர்த்தி தேரோ, பேருவளை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சந்தன தென்னகோன், திகாரி தன்வீர் எகடமியின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் மௌலவி நாஸிக் பாரூக், கத்தோலிக்க மக்கள் சார்பில் லேனாட் குரே, பேருவளை பிரதேச செயலாளர் ரன்ஜன் பெரேரா, வர்த்தக சங்க இணைத்தலைவர் இக்பால் ஷம்சுத்தீன் உட்பட பலரும் நிகழ்வில் சிங்கள முஸ்லிம் இன உறவை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் பற்றியும் நல்லிணக்கம் தொடர்பாகவும் உரை நிகழ்த்தினர்.

# மலையக கல்வி எழுச்சிக்காகவும் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் பங்காற்ற அனைவரும் முன்வருதல் வேண்டும்



**கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எஸ். பரமேஸ்வரன் அவர்கள் தான் வாழும் சூழலில் தன் சமூகத்தின் மேலெழுச்சிக்காக திசைமுகப்படுத்துவதில் எப்பொழுதும் தியாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் ஒருவர். அவர் வகிக்கும் வகிபங்கு அலாதியானது. அவர் கண்டியில் செல்வாக்கு மிக்க அமைப்பாகச் செயற்படும் தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் என்பது மட்டும் அல்ல கண்டி இந்து இளைஞர் மன்றத்தின் பொருளாளர் பதவியில் இருந்து கொண்டு கண்டியில் வாழும் தமிழ் மாணவர்களின் இந்து சமய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிகோலி வரும் ஒருவர். தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு விழாவில் சிறந்த சமூக சேவையாளராக பாராட்டப்பட்ட இவர் தினகரனுக்கு வழங்கிய செவ்வி....**

**தினகரன் 91 ஆவது ஆண்டு விழாவில் சிறந்த சமூக சேவையாளராக பாராட்டப்பட்ட கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எஸ். பரமேஸ்வரன்......**



**இக்பால் அலி**

### ? ஆரம்ப வாழ்க்கை தொடர்பில்?

நான் தெல்தெனிய உடிஸ்பத்துவ என்ற பிரதேசத்தில் பிறந்தேன். பாட்டன் பெயர் பொறவியாப் பிள்ளை. அப்பா செல்லத்துரை. அம்மா தொட்டிச்சி. எங்கள் குடும்பத்தில் அம்மா அப்பா உட்பட மூன்று பேர். நாங்கள் குடும்ப சகிதம் பசுமலை தோட்டத்தில் வாழ்ந்து வந்தோம். அப்பா தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அப்பா பெறும் ஊதியத்தின் மூலம் குடும்பத்தை நடத்திச் செல்ல முடியாத சூழல் இருந்தது. அதன் காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து.1976 களுக்குப் பின்பு வவுனியாவுக்கு சொந்தக்கார குடும்பத்தை நாடிச் சென்றோம். அங்கேயும் ஒரு வசதியான சூழல் அப்பாவுக்கு அமையவில்லை. சாப்பாட்டுக் வழியில்லாத ஒரு இக்கட்டான சூழல் ஏற்பட்டது. 1985 வரையிலும் அங்கு வாழ்ந்தோம்.இந்த எங்களுடைய கஷ்டமான கால கட்டத்தில் தாய்மாமா எங்கள் குடும்பத்தை கரைசேர்க்க கைகொடுத்து உதவினார். அவர் கல்வி தொடக்கம், திருமணம், தொழிற் முயற்சி அனைத்து





விடயங்களிலும் முழு அளவிலான ஆதரவையும் பங்களிப்பையும் உதவியையும் வழங்கினார்.

### ? கற்ற கல்வி தொடர்பில்,..

நான் ஆரம்பக் கல்வியை வவுனியா சைவப்பிரகாசம் மகா வித்தியாலத்தில் கற்றேன். அங்கு ஏழாம் ஆண்டு வரையிலும் கற்றேன். அதன் பின்பு மாமா பி. பாலசுப்பிரமணியம் கண்டிக்கு அழைத்து வந்து படிப்பித்தார். அசோகா வித்தியாலத்தில் க. பொ. த சாதாரண தரம் வரையிலும் கற்றேன். 1983 களில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக தொடர்ந்து படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மாமா பாலசுப்பிரமணியம் அவர்களுடைய கடையிலேயே வைத்துக் கொண்டார், மாமா தொழிலைக் கற்றுக் கொடுத்து அதற்கான வழியினைக் காட்டினார்.

மாமா என்னை படிக்க வைத்தது, தொழிலுக்கான வழியைக் காட்டியது மட்டுமல்ல 1999 களில் திருமணம் செய்து கொடுத்ததும் மாமாதான். துணைவியார் பலகொல்லயைச் சேர்ந்தவர். மகன் கிசாந்த் அவுஸ்திரேலியாவில் பொறியியல் துறையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார். மகள் ரமீதா மருத்துவப் பிரிவில் தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலுகின்றார். எங்கள் குடும்பத்தில் அக்காவும் தங்கையும் நானும் ஒரு



நல்ல உயர் நிலைக்கு வரக் காரணமாக இருந்தவர் என்னுடைய தாய் மாமாவே. அவரை எங்களால் மறக்க முடியாது இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அவருக்கு நன்றி கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைக்கின்றேன்.

நான் 2010 ஆம் ஆண்டு வரையிலும் மாமாவுடன் இருந்து வியாபாரத்தை கற்றுக் கொண்டேன். இன்று நான் வியாபாரத்துறையில் உயர்ந்து நிற்பதற்கான காரணம் என்னுடைய மாமாதான். மின்னியல் தொழில் நுட்ப பொறியியலோடு தொடர்புபட்ட வியாபாரம் இது. இன்று வரையிலும் 13 வருட காலமாக செய்து கண்டியில் எல்லோரும் மதிக்கப்படும் ஒரு வர்த்தகப் பிரமுகராக விளங்குகின்றேன் என்றால் அதற்குப் பின்புலமாக இருந்தவர் தாய்மாமா அவர்களே.

### ? நீங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு ஆரம்பத்தில் தூண்டுதலாக இருந்தவர்கள் யார் என்று கூற முடியுமா?

பொதுவாக நான் எனது மாமாவிடம் கற்ற விடயங்களையே என்னுடைய வாழ்க்கையிலும் சரி பொது விடயங்களிலும் சரி அவருடைய முன்மாதிரியான முறைகளைப் பின்பற்றி வருகின்றேன். சிறு வயதில் மாமாவின் கடையில் இருந்தமையால் மாமா அதிகளவு சமூகப் பணிகளில் ஈடுபாடுடையவராய் இருந்தார். அவரிடம் நல்ல முன்மாதிரியான விடயங்களை மனதில் எடுத்துக்



கொண்டேன். அவர் கண்டி இந்து இளைஞர் மன்றத்தின் முன்னாள் தலைவர். அவருடைய காலத்திலேயே இந்து இளைஞர் மன்றத்திற்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அவர் இந்து இளைஞர் சங்கத்தின் மூலம் கண்டி தமிழ் சமூகத்திற்கு அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ளார். யாராக இருந்தாலும் சரி அவரிடம் உதவி கேட்டு வந்தால் இல்லை என்று சொல்லாமல மனமுவந்து உதவி வழங்குபவர். வலது கையால் கொடுப்பது இடது கைக்குத் தெரியாமல் பல உதவிகள் செய்வார். அவர் அவ்வாறு பலருக்கு செய்யும் உதவியினை நேரிலே அவதானித்திருக்கின்றேன். அவர் தன் வாழ்க்கையை இந்து சமய ஆன்மிக அற ஒழுக்க மேம்பாட்டுக்காக தன்னை அர்ப்பணித்த வரலாறு உள்ளது. அவர் தற்போது அமைதியாக இருந்தாலும் கண்டி இந்து இளைஞர் மன்றத்தை தூக்கி நிமிர்த்து வைத்து விட்டு ஒதுங்கி நின்றவரல்ல. தான் நம்பும் இலட்சியத்திற்காக தன்னை அர்ப்பணித்து இயக்கியவர். தொழில் வாழ்க்கையும் பொது வாழ்க்கையும் ஒன்று தான். பொது வாழ்க்கை வேறு. தொழில் வாழ்க்கை வேறு என்று இருக்கக் கூடாது. நமக்காக வாழ்வதோடு பிறருக்காகவும் வாழ வேண்டும் என்பதைத் தான் வாழ்க்கையாகத் தெரிந்து கொண்டவர். வியாபாரத் துறையில் ஈடுபடுவதைப் போன்றுதான் பொது விடயங்களிலும் நம்பிக்கையோடு செயற்பட்டு வந்தேன்.

### ? சமூகப் பணிகளில் உயர் பதவிகளை வகித்துக் கொண்டு செயலாற்றிய காலம் தொடர்பில் சில வரிகள்,...

சிவில், சமூக அமைப்புக்களில் இணைந்து செயற்பட்ட போதிலும் பின்பு பிரபல்யமான சிவில் அமைப்புக்களுடன் இணைந்து சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினேன். அந்த வகையில் முதலில் 2012 ஆம் ஆண்டில் கண்டி இந்து இளைஞர் மன்றத்தில் இணைந்து கொண்டேன். அதே போல்



கண்டி தமிழ் வர்த்தக சங்கத்திலும் இணைந்து கொண்டேன். இச்சங்கங்களில் இணைந்து நான் திறன்பட இயங்குவதை அவதானித்து 2020 களில் இந்து இளைஞர் மன்றத்தில் பொருளாளர் பதவியினையும் 2020 களில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் பதவியினையும் வழங்கினார்கள். இன்று கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயளலாளராக இருக்கின்றேன். இதன் மூலம் சமூகத்திற்கு நல்ல பயனுள்ள சமூகப் பணிகளை ஆற்றி வருதையிட்டு நான் மிகவும் ஆத்ம திருப்தியடைகின்றேன்.

### ? இதன் மூலம் நீங்கள் அடைந்த உயர் பெறுபேறுகள் யாவை?

2014 அகில இலங்கை சமாதான நீதவான். 2021 இல் சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் என்னுடைய சமூகப் பணிக்காக தேசகீர்த்தி பட்டம் வழங்கி கௌரவித்தார்கள். 2023 ஆம் ஆண்டிலும் கண்டி ஒக்ரே ஹோட்டலில் தேசகீர்த்தி தேசமான்ய பட்டம். 2023 ஆம் ஆண்டில் தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சமூக சேவையாளர் விருது வழங்கி கௌரவித்தார்கள். இப்படி பல குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

### ? கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் உங்களது சமூகப் பணிகள் பற்றி கூறுவீர்களா?



கண்டி தமிழ் வர்த்தக சங்கம் மலையகத்தில் எண்ணற்ற பணிகளை ஒரு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றன. கொரோனா காலத்தில் எங்களது சங்கம் மேற்கொண்ட பணியினை மலையகத்தில் வாழும் தோட்ட மக்கள் ஒரு





போதும் மறக்க மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். மறைந்த எங்கள் சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன் தலைமையில் கொரோனா காலத்தில் நாடு முடக்கப்பட்டதன் காரணமாக பல்வேறு ரீதியிலான வேலைத் திட்டங்களை மேற்கொண்டோம். கொரோனா தொற்றினால் நாடு முடக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து துயரத்தில் வாழ்ந்த குடும்பங்களுக்கு பெரியளவிலான உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தோம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தோம். முகக்கவசங்கள் வழங்கி வைத்தோம்.

குறிப்பாக கொரோனாவினால் முடக்கப்பட்ட பிரதேசங்களை தேடிப் பார்த்து இன, மொழி, சமயம் வேறுபாடுகளின்றி தேவையான உதவிகளைச் செய்தோம். அப்பொழுது சுகாதார அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சியை சந்தித்து மருத்துவ உதவிக்கென சுகாதார அமைச்சுக்கு பெருந்தொகையிலான நிதி உதவியினை வழங்கி வைத்தோம்.

அவை மட்டுமல்ல தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் சாதிய்யா பௌஸர் என்பவர் மலையகம் சார்ந்த இரு நூல்களை எழுதியிருந்தார். அந்த நூல்களின் வெளியீட்டு விழாவை கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் முஸ்லிம் வர்த்தக சங்கமும் இணைந்து வெளியிட்டது. இந்நூல் வெளியீட்டு விழா தொடர்பில் இது வரையிலும் இலங்கை வரலாற்றில் இப்படியான நூல் வெளியீட்டு விழா இடம்பெறவில்லை என்ற பல கருத்துகளோடு ஊடகங்கள் வாயிலாகவும் கருத்து தெரிவித்திருந்தனர். அத்தோடு நூலாசிரியர் சாதியாவுக்கு பேராசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்றதை பாராட்டும் வகையில் அந்நிகழ்வு அமைந்துள்ளது.

நாங்கள் கண்டியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் வர்த்தக சங்கங்கள் இணைந்து பல சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றோம். தீபாவளி பண்டிகை, புது வருடப் புத்தாண்டு விழா, தைப்பொங்கல் விழா



போன்ற விழாக்களை ஏனைய வர்த்தக சமூகங்களோடு சேர்ந்து கொண்டாடுவோம். சமூகங்களுக்கிடையே ஆரோக்கியமான நல்லதொரு சகவாழ்வை ஏற்படுத்துவதில் நாங்கள் முன்மாதிரியான பல விடயங்களை கண்டி நகரில் பல்லின மக்களுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றோம். பொதுவாக கண்டி வைத்தியசாலையில் புற்று நோய்ப் பிரிவில் பாரியளவிலான கட்டடம் நிர்மாணிப்பதில் கண்டி தமிழ் வர்த்தக சங்கம் பங்களிப்பை செய்து வருகின்றது. அதே போன்று சிங்கள வர்த்தக சங்கமும், முஸ்லிம் வர்த்தகமும் இதற்கான நிதி உதவியைச் செய்து வருகின்றன என்று கூறலாம்.



சிறு தொழில் வியாபார முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் கண்டியில் கல்வியின் பால் மாணவர்களை ஈர்க்கும் புலமைப் பரிசில் நிதி உதவிகள், கற்றல் உபகரணங்கள் வழங்குவதோடு பாடசாலைகளுக்கு தேவையான கட்டட வளங்களை நிர்மாணித்துக் கொடுத்தல் போன்ற விடயங்களில் எமது சங்கம் முழுமையான பங்களிப்பை மேற் கொண்டு வருகின்றது. கண்டி இந்து சீனியர் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி, கெங்கல்லைப் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி போன்றவை கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஒத்துழைப்புடனேயே முன்னெடுக்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பத்தில் எங்கள் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகனின் மரணம் ஈடு செய்ய முடியாதது. அவருடன் நான் செயலாளராகவும் அன்பு நண்பன் சால்ஸ் பொருளாளராகவும் ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் அவரோடு சேர்ந்து இயங்கி வந்தோம். இக்கால கட்டத்தில் அவரது மரணம் எங்களுடைய சங்கத்திற்கு பெரும் பேரிழப்பாகும். சமூக நலன்களுக்காக வேண்டி மிகுந்த சுறுசுறுப்புடன் இயங்கும் ஒருவர். அவரது தலைமையின் கீழ் கண்டி தமிழ் வர்த்தக சங்கம் புதுப் பொழிவுடன் செயற்பட்டது என்று கூறலாம்.

### ? நீங்கள் இறுதியாகக் கூற விரும்புவது என்ன?

நாங்கள் வியாபாரத்தில் எந்தளவுக்கு அதிக வேலைப்பளு மிக்கவர்களாக இருந்த போதிலும் பொது விடயங்களிலும் கவனத்தை அதிகரிப்பது குறிப்பாக வறுமையால் கல்வியைப் பெற முடியாத மாணவச் செல்வங்களுக்கு கணிசமானளவு உதவியைச் செய்வது, நேரத்தை அர்ப்பணிப்பது எமது சமூகத்தின் மேம்பாட்டிற்கு பெரும் ஊக்குவிப்பாக அமையும்.

சமூகத்தின் அடிப்படைத் தேவைகள், வாழ்வாதார மேம்பாடுகள் யாவற்றிற்கும் மேலாக இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் ஒத்துழைப்பு வழங்கும் நிறுவனமாக எங்கள் தமிழ் வர்த்தக சங்கம் மக்கள் மத்தியில் அன்பையும், ஆதரவையும் அரவணைப்பையும் ஆசியையும் பெற்று வந்துள்ளன. இது தொடர இறைவன் நல்லாசி புரிய வேண்டும்.

எமது மலையகத்தில் எமது தொப்புள் கொடி உறவுகள் பல்வேறு ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் உணர்ந்து ஏனைய அமைப்புக்களும் அரசியல்வாதிகளும் சேர்ந்து அவர்களுடைய மேலான கல்வி எழுச்சிக்காகவும் பொருளாதார மேம்பாட்டுக்காக பங்காற்ற முன் வருதல் வேண்டும் என்று இறுதியாகக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

# கிண்ணையடி மில்லர் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த சித்திரை விளையாட்டு விழா

**மட்டக்களப்பு, கிண்ணையடி மில்லர் விளையாட்டு கழகத்தின் வருடாந்த சித்திரைப் புத்தாண்டு கலை கலாசார விளையாட்டு விழா கழகத் தலைவர் புண்ணியமூர்த்தி தலைமையில் கிண்ணையடி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.**

இந்நிகழ்வின் அதிதிகள் கிண்ணையடி மில்லர் விளையாட்டு கழக உறுப்பினர்களினால் வரவேற்கப்பட்டதையடுத்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதம அதிதியாக கிண்ணையடியைச் சேர்ந்தவரும், மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகருமான ந.பிரபாகரன் பங்கேற்றார். மற்றொரு அதிதியாக கோ.பாமதீசன் (மனிதாபிமான செயற்பாட்டு முகாமையாளர், சர்வதேச SAVE THE CHILDREN அமைப்பு, ருமேனியா) பங்கேற்றார்.









சிறைச்சாலை அத்தியட்சகர் பிரபாகரன் தேசிய கொடியை ஏற்றி விளையாட்டு விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேசத்தில் பழைமையான விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான மில்லர் விளையாட்டு கழகத்தின் வருடாந்த சித்திரைப் புத்தாண்டு கலை கலாசார விளையாட்டு விழாவின் போது பாரம்பரியத்தை பறைசாற்றும் நிகழ்வுகளாக வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சமர், தடை தாண்டல் மற்றும் சூப்பியில் பால் குடித்தல் உட்பட இன்னும் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அதிதிகள் உரையாற்றுகையில் "உலக நாடுகள் பலவற்றில் சித்திரைப் புத்தாண்டு கலாசார விழா நடைபெறுவதாகவும், வெவ்வேறு பெயர்களில் இவ்விழா அழைக்கப்படுவதாகவும், சித்திரை மாதம் என்றாலே கொண்டாட்டம் நிறைந்த மாதம்" என்றும் குறிப்பிட்டனர்.

இக்கழகம் பல வருட பழைமையான கழகம் என்றும் முன்பு கலைவாணி விளையாட்டுக் கழகம் எனும் பெயரில் இருந்ததாகவும், பின்பு 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மில்லர் விளையாட்டுக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்றும் அதே பெயரில் இயங்குவது பெருமையாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்கங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மு. அகிலேஸ்வரன், விளையாட்டு உத்தியோகத்தர் க.சங்கீதா மற்றும் ஆலய பிரதமகுரு, கிண்ணையடி ஆலயங்களின் தலைவர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

முருகுப்பிள்ளை கோகிலதாசன்


## தங்க ஆபரணங்கள் அடகு ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பொலன்னறுவை பிராந்திய பிரதான அலுவலகத்துக்குரிய பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **2021.12.31ஆந் திகதி வரை** அடகு வைக்கப்பட்டுள்ளதும் **2023.05.19ஆந் திகதி வரை** அடகு மீட்டுக்கொள்ளப்படாத அடகுப் பொருட்கள் கீழ்வரும் திகதிகளிலும் நிலையங்களிலும் நடாத்துவதற்குத் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஏல விற்பனையானது மறு அறிவித்தல் இன்றி வங்கியின் தற்றுணிவின் பிரகாரம் இரத்துச் செய்தல் அல்லது பிற்போடுதல், ஒன்றிணைத்து நடாத்துதல் அல்லது இத்தகைய நடவடிக்கையொன்றை மேற்கொள்ளும் உரிமை வங்கி சார்ந்ததாகும்.

மு.ப 9.00 மணிக்கு ஏல விற்பனை ஆரம்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம்.

| ஏல விற்பனைக்கு உத்தேசித்த திகதி | 2023.05.20/21 | 2023.05.20/21 |
|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் வளாகம் | பொலன்னறுவை பிரதான கிளை | தெகிஅத்தகண்டிய கிளை |
| தங்க ஆபரணங்களுக்குரிய கிளைகள் | பொலன்னறுவை, ஹிங்குரக்கொடை, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரம், பக்கமூன, தம்பால | அரலகன்வில, வெலிகந்தை, தெகிஅத்தகண்டிய |
| தங்க ஆபரணங்களுக்குரிய சேவை நிலையங்கள் | கதுறுவெல, பொலன்னறுவை வைத்தியசாலை வளாகம், தியசென்புர, லங்காபுர, ஐயந்திபுர, தியபெதும | மன்னம்பிட்டி, செவனபிட்டிய, சிறிபுர, சந்துன்புர |

**ஒப்பம்**
**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய பிரதான அலுவலகம்,**
**புதிய நகரம், பொலன்னறுவை**
**தொ.பே இல.** 027-2223900/2224404/2225760/2226626/2226625

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk


# பேரழிவு ஆயுதங்கள் இல்லாத உலகை உருவாக்கும் கனவு

**இன்று, உலகம் பாதுகாப்பு விடயத்தில் முன்னொரு போதுமில்லாத சவால்களையும் ஆபத்துகளையும் எதிர்கொள்கிறது. இதன் அறிகுறியாக உலகின் பல பகுதிகளிலும் பதற்றங்களும் ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. இந்நடவடிக்கைகள் சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் முன்னொரு போதுமில்லாத அபாயத்திற்கு உள்ளாக்கியுள்ளன. இது மத்திய கிழக்கு நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகவே உள்ளது.**

இந்த அச்சுறுத்தல்களுக்கு மேலதிகமாக, அணு ஆயுதங்கள் உட்பட சியோனிச ஆட்சியின் ஆயுதக் களஞ்சியங்களின் வளர்ச்சி சந்தேகத்திற்கு இடமின்றி உலகிற்கும் குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 152 இற்கு 5 என்ற வாக்குகளின் அடிப்படையில், சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதமான அணு ஆயுதங்களை அகற்றுமாறு இஸ்ரேலை வலியுறுத்துவதற்கு வாக்களித்தது. இருப்பினும், இஸ்ரேல் சில மேற்கத்திய நாடுகளின் ஆதரவைப் பெறுகிறது. இத்தகைய சட்டவிரோத மற்றும் நியாயமற்ற ஆதரவானது உலக சமூகத்தினதும் சர்வதேச மன்றங்களினதும் கவலைகளை அதிகரிக்கச் செய்துள்ளது.



மத்திய கிழக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லாத ஒரு மண்டலத்தை உருவாக்குவதற்கான கடமைகளை சர்வதேச சமூகம் நிறைவேற்ற வேண்டும். இஸ்ரேல் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இணைவதை உறுதி செய்ய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதற்கிடையில், துரதிர்ஷ்டவசமாக, இஸ்ரேலும் அதன் ஆதரவாளர்களும் ஈரானின் அமைதியான அணுசக்தித் திட்டத்தை அச்சுறுத்தலாக நோக்குகின்றனர். இது சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் அதிகக் கண்காணிப்பில் உள்ளது. ஆனால் அவர்கள் சியோனிச ஆட்சியின் பரந்த ஆயுதக் களஞ்சியத்தின் அச்சுறுத்தல்களைப் பற்றி பேசுவதில்லை.

அணுஆயுதங்கள் பிராந்தியத்திற்கும் உலகிற்கும் அச்சுறுத்தாக உள்ளன. இருந்தும் சில நாடுகளுக்கு எதிரான ஆதாரமற்றதும் தவறான கூற்றுக்களையும் குற்றச்சாட்டுகளையும் மீண்டும் மீண்டும் முன்வைக்கும் ஒரு மன்றமாக பாதுகாப்பு கவுன்சில் மாறியுள்ளது.

இத்தகைய ஆதாரமற்ற கூற்றுக்கள், மேற்கத்திய நாடுகளின் வஞ்சக அணுகுமுறையின் வெளிப்பாடாகும். அதனால் யதார்த்தத்தை உண்மைக்கு புறம்பாக சித்தரிப்பதோடு தங்கள் கடமைகளை அந்நாடுகள் தவிர்த்துக் கொள்கின்றன.

ஆனால் இஸ்ரேலின் குற்றங்கள் மற்றும் அதன் ஆயுதக் கிடங்குகளின் வளர்ச்சி குறித்த அரசாங்கங்களின் பாசாங்குத்தனம் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல.

ஆக்கிரமிப்பு ஆட்சியும் அதன் ஆதரவாளர்களும் மத்திய கிழக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லாத ஒரு மண்டலம் உருவாவதைத் தடுக்கிறார்கள். ஆனால் ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆட்சியை அணுசக்தி பரவல் தடை ஒப்பந்தத்தில் சேர கட்டாயப்படுத்த வேண்டும். அதன் அணுசக்தி வசதிகளை சர்வதேசத்தின் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

ஈரானின் அமைதியான அணுசக்தி திட்டம் குறித்த இஸ்ரேலின் குற்றச்சாட்டுகள் முற்றிலும் அபத்தமானவை, பொருத்தமற்றவை, ஆதாரமற்றவை. ஆனால் இஸ்ரேல் கொண்டிருக்கும் அணு ஆயுதங்கள் பிராந்தியத்திற்கும் அதற்கு அப்பாலும் ஏற்படுத்தும் ஆபத்தை மூடிமறைப்பதே அதன் நோக்கமாக உள்ளது. இந்த அச்சுறுத்தல் நீக்கப்பட வேண்டும். இஸ்ரேல் அணு ஆயுதங்களைக் கைவிடவும், அணுசக்தி பரவல் தடை ஒப்பந்தத்தில் சேரவும், அதன் அனைத்து அணுசக்தி நடவடிக்கைகள் மற்றும் வசதிகளையும் சர்வதேச அணுசக்தி அமைப்பின் விரிவான மேற்பார்வையின் கீழ் வைக்க கட்டாயப்படுத்த வேண்டும். இதன் நிமித்தம் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அணு ஆயுதங்கள் இல்லாத ஒரு மண்டலத்தை மத்திய கிழக்கில் உருவாக்கும் யோசனையை ஈரான் இஸ்லாமிய குடியரசே முதலில் முன்மொழிந்தது. பேரழிவு ஆயுதங்கள் இல்லாத உலகத்தின் இலக்கை மேம்படுத்தவே ஈரான் எப்போதும் பணியாற்றுகிறது.

அமெரிக்காவும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளும் சியோனிச ஆட்சியை அணு ஆயுதங்களுடன் ஆதரிப்பதற்கு, குறிப்பிடப்பட்ட யோசனையை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு முயற்சியையும் முறியடிப்பதற்கும் குற்றம் சாட்டுகின்றன. தவிர, சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் பாதுகாப்புகளுக்கு வெளியே இஸ்ரேலின் அணுவாயுதங்களும் பேரழிவுத் திட்டங்களும் மத்திய கிழக்கில் அத்தகைய யோசனையை நிறைவேற்றுவதற்கு முக்கிய தடையாக உள்ளன.

முஹம்மத் ரெஸ்வின் கரீம்


## அக்குரணை பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்வி விலைகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | விடயம் | ஆகக் குறைந்த கேள்வி கியுப் | மிளளிக்கப் படாத கட்டணம் | மீளளிக்கப் படும் கட்டணம் | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | அக்குரணை பிங்கா ஆற்றில் மணல் அகழ்வு செயற்றிட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சான்றளிக்கப்பட்ட மணல் மொத்தமாக வழங்கல் | 7,000.00 | 3000.00 | 20,000.00 | 150,000.00 |
| 02 | பிங்கா ஆற்றில் மணல் அகழ்வுக்கான இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்<br>140 எக்ஸ்கவேட்டர் (Long arm) 01<br>60 எக்ஸ்கவேட்டர் 01<br>30 எக்ஸ்கவேட்டர் 01<br>கியூப் 01 லொறிகள் 02 | | 5,000.00 | 3000.00 | 200,000.00 |

01. சேவை வழங்கல் அல்லது மணல் கொள்வனவுகளிற்காக 2023.12.31 வரையான 06 மாத கால உடன்பாட்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.
02. இது தொடர்பான மேலதிக விபரங்களை 066-2244387 இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்
03. பின்வரும் முகவரியில் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி அலுவலக நேரங்களில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. 2023.04.18 முதல் 2023.05.10 அன்று மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கான பிணை வைப்பொன்று அக்குரணை பிரதேச சபையின் பெயரில் 2024.01.31 வரை செல்லுபடியாகும் வண்ணம் இலங்கை மத்திய வங்கி அனுமதிக்கும் அரச வங்கியொன்றிலிருந்து அல்லது காசாக வைப்புச் செய்வதாயின் மேற்படி தொகையை இச் சபையின் சிறாப்பரிடம் வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. உரியவாறு பூரணப்படுத்தி முத்திரையிடப்பட்ட கேள்விப்படிவங்கள் நகல் பிரதியுடன் தலைவர், பெறுகைக்குழு, அக்குரணை பிரதேச சபை, அலவதுகொட' என்ற முகவரிக்கு 2023.05.09 அன்று பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் கொண்டுவந்து அக்குரணை பிரதேச சபையின் செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை அவ்வேளையில் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவரின் முன்னிலையில் திறக்கப்படும்.
07. இக் கேள்வி கோரல் ஒப்பந்தத்தை வழங்கல் பகுதியொன்றை வழங்கல் அல்லது இரத்துச் செய்தல் மேற்கொள்ளும் இறுதித்தீர்மானம் அக்குரணை பிரதேச சபையின் பெறுகைச் சபைக்கு உரித்தாகும்.

2023.04.18ம் திகதி
**தொ. பே. இல. 066 2244387**
**தொலைநகல் இல. 066 2056913**

**டீ. ஜீ. எம். பி. ரனசிங்ஹ,**
**தலைவர் பெறுகைக் குழு,**
**அக்குரணை பிரதேச சபை,**
**அலவதுகொட.**


# அட்டாளைச்சேனை பிரன்ட்ஸ் விளையாட்டு கழகத்தின் இப்தார், அலுவலக திறப்புவிழா

அட்டாளைச்சேனை பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வும் அலுவலக திறப்பு விழாவும் அண்மையில் கழகத்தின் தலைவர் பி.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களான எம்.எச்.எம் அஸ்வத் மற்றும் ஏ. இம்றுபாஸ்கான் ஆகியோருடன் அட்டாளைச்சேனை 1ஆம் பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் எஸ்.எச் முர்ஸித் மற்றும் கழகத்தின் ஆலோசகர்களான ஏ.சி. ரிசாத், கே.ஏ.ஹமீட், கழகத்தின்உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



அத்துடன் கழகத்தின் புதிதாக இணைந்த வீரருக்கு தற்போதைய அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.இம்றுபாஸ்கான் கழகத்தின் சீருடையை வழங்கி கௌரவித்தார்.





அதனைத் தொடர்ந்து அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம். அஸ்வத் அவர்களுக்கான கௌரவத்தினை பிரன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரர் எம். அஸ்லம் மற்றும் கழகத்தின் செயலாளர் எம்.எம். றிஸ்வான் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

பிரன்ஸ் விளையாட்டுக் கழகம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கடினபந்து விளையாட்டுக் கழகங்களுள் முன்னணியில் திகழ்வதுடன், அம்பாறை மாவட்ட கடின பந்து சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்குவதுடன் மென்பந்து விளையாட்டுத் துறையிலும் காலூன்றி காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)**

# விவசாயிகளின் உழவு இயந்திர கட்டணங்களில் மாற்றம்

## நாச்சியாதீவு அல் அக்ஸா விவசாய கழகம் நடவடிக்கை

**திறப்பனை தினகரன் நிருபர்**

நாச்சியாதீவு அல் அக்ஸா விவசாயக் கழகம் இம்முறை நாச்சியாதீவு பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி காணி உழவு பன்படுத்தும் உழவு இயந்திர கட்டணங்களில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாக விவசாய கழக செயலாளர் எம்.ஐ.எம். ஜவ்பர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தனியாருக்கு சொந்தமான உழவு இயந்திரங்கள் ஊடாகவே இப் பிரதேச விவசாயிகள் தமது வயல் நிலங்களை அதிக விலை கொடுத்து விவசாயம் மேற்கொண்டு வந்தனர். இவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 25 ஆயிரம் வீதம் விவசாயிகளிடம் பணம் அறவிட்டு வந்த நிலையில், இம்முறை சங்கம் எடுத்த துரித முயற்சியால் வரும் சிறு போகத்தில் கூட்டுறவு அடிப்படையில் குறைந்த விலையில் காணிகளை உழுது பன்படுத்தி கொடுக்க முன் வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் கீழ் ஏக்கரொன்றுக்கு உழவு பன்படுத்தல் வேலைகளுக்காக உழவு இயந்திர கூலியாக ரூபா 17 ஆயிரம் வீதம் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாகவும், விவசாயிகளிடமிருந்து எரி பொருளுக்கான பணத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டு மிகுதிப் பணத்தை அறுவடை முடிந்ததும் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாகவும், இதற்கு விவசாயிகளின் பூரண ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.





அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் இப்தார் நிகழ்வும், மார்க்க சொற்பொழிவும்" வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் (15) நடைபெற்றது. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலந்துகொண்ட முக்கியஸ்தர்களைப் படங்களில் காணலாம்.(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)



அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணியினர் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு,அண்மையில் அக்கரைப்பற்று மெங்கோ கார்டனில் நடைபெற்றது. அமைப்பின் முன்னாள் தலைவர் உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஹாபிழ் அப்துல்லாஹ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அட்டாளைச்சேனை விஷேட நிருபர்)

## இலங்கை-இந்திய வர்த்தக... (04ஆம் பக்கத் தொடர்)

இந்தியாவுடன் இந்திய ரூபா மூலம் வர்த்தகப் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ள முன்வந்திருக்கும் 18 நாடுகளில் உள்ள வங்கிகள் இத்தகைய சிறப்புக் கணக்கை இந்திய வங்கிகளில் தொடங்கி உள்ளன. இதற்கான அனுமதியை கடந்த மார்ச் மாதம் இந்திய ரிசர்வ் வங்கி வழங்கியிருந்தது.

இதையடுத்து ஃபிஜி, ஜெர்மனி, கயானா, இஸ்ரேல், கென்யா, மொரீஷியஸ், மியன்மார், நியூசிலாந்து, ஓமன், ரஷ்யா, செஷல்ஸ், போஸ்வானா, இலங்கை, தான்சானியா, உகாண்டா, பிரிட்டன், சிங்கப்பூர், மலேசியா ஆகிய 18 நாடுகளில் உள்ள வங்கிகள் சிறப்பு கணக்குகளைத் திறந்துள்ளன.

வர்த்தக வளர்ச்சியையும் அனைத்துலக வர்த்தக சமூகத்தின் நலன்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்திய ரூபாவில் பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக இந்திய ரிசேர்வ் வங்கி கூறுகிறது.

நீண்ட காலமாகவே அமெரிக்க டொலருக்குதான் அனைத்துலகச் சந்தையில் மதிப்பு இருந்து வருகிறது. ஆனால் டொலரைப் பயன்படுத்தும்போது பண்டமாற்றுக்கான செலவுகள் அதிகரிக்கும்.

நேரடியாக இந்திய ரூபாயில் வர்த்தக நடவடிக்கைளை மேற்கொள்ளும்போது பல்வேறு செலவினங்கள் இருக்காது என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

நாணய மதிப்பு என்பது எப்போதுமே ஏற்ற இறக்கமாகத்தான் இருக்கும். தற்போது அமெரிக்க நாணயமான டொலர், நிலைத்தன்மையற்ற நிலையில் உள்ளது. எனவே டொலரை முன்வைத்து வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு பாதகமான நிலைமைதான் ஏற்பட்டு வருகின்றது.

தற்போது இந்திய ரூபா பலப்பட்டு வருகிறது. அத்துடன் இந்திய ரூபா மீதான நம்பகத்தன்மையும் அதிகரித்து வருகிறது. ரஷ்யா, மலேசியா உள்ளிட்ட பல நாடுகள் இவ்விடயத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.

இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக அளவு அதிகரிக்கும்போது வர்த்தகர்கள் பயனடைவது இயல்பு. எனவே இலங்கை_ இந்தியப் பணப் பரிவர்த்தனை எளிதாகும்போது வர்த்தகம் வளர்ச்சி காணும் என்பது நம்பிக்கையாகும்.

ஆகவே இந்திய ரூபாவைக் கொண்டு வர்த்தகம் மேற்கொள்ள இந்திய அரசு முன்வந்திருப்பதன் மூலம் இலங்கை மற்றும் இந்திய வர்த்தகர்கள் பலனடைவார்கள் என்றே வர்த்தக சமூகத்தினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக அனைத்துலகச் சந்தையில் நீடித்து வரும் அமெரிக்க டொலரின் ஆதிக்கத்தை குறைப்பதற்கும், இலங்கை மற்றும் இந்திய பொருளாதார பரிவர்த்தனையை அதிகரிப்பதற்கும் தற்போது வழிதிறக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேரடியாக இந்திய ரூபாவில் வர்த்தகம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டால் இரு தரப்பிலும் உள்ள வர்த்தகர்களுக்கும் இந்தப் புதிய ஏற்பாடு பலனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், மட்டக்களப்பு.**

கிழக்கு மாகாணம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்திற்கு கொள்வனவு செய்யப்படவுள்ள வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்காக, மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் பெறுகைக்குழு முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

| இல. | குறிப்பீட்டிலக்கம் | தேவையான அம்சங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BT/RDHS/FH/PO/PSSP/MEQ/01 | BP Apparatus - Android | 50 | 1,000.00 |
| | | BP Apparatus – Hand held | 100 | |
| | | Bathroom Scale | 17 | |
| | | Hanging Weighing Scale | 22 | |
| | | Infant Weighing Scale – Analog | 14 | |
| | | Infant Weighing Scale – Digital | 04 | |
| | | Height Measuring Board | 24 | |
| | | Length Measuring Board | 06 | |
| | | Multipara Monitor | 07 | |
| | | CTG Machine | 02 | |
| | | Autoclave | 05 | |
| | | Spinal Board | 02 | |
| | | ECG Machine | 04 | |
| | | Defibrillator | 02 | |
| | | Infant Warmer | 02 | |
| 02 | BT/RDHS/FH/PO/PSSP/HFUR/02 | Examination Bed | 06 | 1,000.00 |
| | | Folding Screen | 06 | |
| | | Patients Trolley | 07 | |
| | | Medicine Trolley | 17 | |
| | | Emergency Trolley | 02 | |
| | | Bed Side Locker | 15 | |
| | | Dispensing Chair | 06 | |
| 03 | BT/RDHS/FH/PO/PSSP/ELE/03 | Laptop i7 | 01 | 1,000.00 |
| | | Laptop i5 | 12 | |
| | | Desktop Computer | 40 | |
| | | Colour Printer - Inkjet | 01 | |
| | | Colour Printer - Laser | 01 | |
| | | Laser Printer | 30 | |
| | | Laminating Machine | 09 | |
| | | Barcode Reader | 15 | |
| | | Barcode Printer | 10 | |
| | | Computer Scanner | 10 | |
| | | Photocopy Machine | 07 | |
| | | Refrigerator | 04 | |
| | | Air Conditioner 12000BTU | 04 | |
| | | Air Conditioner 24000BTU | 21 | |
| | | Air Conditioner 18000BTU | 03 | |
| | | Multimedia Projector | 06 | |
| | | Fax Machine | 06 | |
| | | UPS | 20 | |
| | | Voice Recorder | 01 | |
| 04 | BT/RDHS/FH/PO/PSSP/FUR/04 | Office Table | 67 | 1,000.00 |
| | | Computer Table | 11 | |
| | | Executive Table | 02 | |
| | | Revolving Chair | 70 | |
| | | Executive Chair | 06 | |
| | | Visitors Chair | 120 | |
| | | Plastic Chair with Arm | 150 | |
| | | 4 in 1 Chair | 22 | |
| | | Steel Cupboard | 38 | |
| | | Glass Cupboard | 33 | |
| | | Conference Hall Chair | 120 | |
| | | Lobby Chair | 06 | |

**விலைமனு நிபந்தனைகள் :**

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோர் 2023.04.17ஆம் திகதியிலிருந்து 2023.05.08ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் இவ்வலுவலகத்தின் கணக்கிடல் கிளையிலிருந்து விலைமனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

- மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்று.
- மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மட்டக்களப்பு சுப்பர் தரக் கிளை இல. 012 இலங்கை வங்கி 0002699216 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்தம் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை 2023.05.09ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம், மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முடிவுறுத்தப்படும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரண்டு தனித்தனியான உறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என உள்ளிட்டு முத்திரைக் குறியிடப்பட்டு உறைகளின் இடது பக்க மேல் மூலையில் “குறிப்பீட்டிலக்கம்” குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. விலைமனுப் பெறுமதியின் 2% விலைமனுப்பிணைத் தொகையாக அனைத்து விலைமனுக்களுடன் இணைக்கப்படல் வேண்டும். முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு விலைமனுப்பிணைத் தொகை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
4. 065-2222997 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**மருத்துவர் ஜீ. சுகுனன்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு.**
2023-04-17.



**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம் - கல்முனை**

**மருத்துவ உபகரணம், கணினிகள், மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், CCTV முறைமை மறறும் உள்ளூர் பிரதேச வலையமைத்தலின் விஸ்தரிப்பு ஆகியவற்றிற்கான பெறுகை**

ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டம் **(PSSP)** மற்றும் ஆரம்ப சுகாதார திட்டம் 2023 ஆகியவற்றின் பணி ஒதுக்கீட்டின் கீழ் அட்டவணையில் தனியாக குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களின் ஏக மற்றும் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற முகவர்களின் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.


| S.No. | Name of Equipment | UNITS | BID SECURITY (Rs.) |
|---|---|---|---|
| P1 | **Package Number 01 & Title:** Procurement of Medical Equipment | | |
| | **Contract No.:** EP/KAL/RDHS/PHC/MoH/P1/MEQ/2023 | | |
| 1. | Supply of Phototherapy unit –LED (double surface) | 2 | 17,000.00 |
| P2 | **Package Number 02 & Title:** Procurement of Computers, laptops and other IT equipment | | |
| | **Contract No.:** EP/KAL/RDHS/PSSP/P2/IT. Equi/2023 | | |
| 2. | High – end desktop Computer | 3 | 1% of total bid value without VAT |
| 3. | Desktop Computer | 6 | |
| 4. | Laptop Computer | 19 | |
| 5. | Laser Printer | 6 | |
| 6. | Barcode Reader | 19 | |
| 7. | Sticker Printer | 6 | |
| 8. | Thermal Printer | 3 | |
| 9. | All-in-one Computer | 25 | |
| 10. | Fast desktop document scanner | 2 | |
| 11. | External hard drives | 2 | |
| 12. | A3 colour Laser Multifunctional Printer | 1 | |
| 13. | Tablet | 1 | |
| 14. | UPS | 35 | |
| P3 | **Package Number 03 & Title:** Procurement of supply and installation of CCTV Camera Monitoring system | | |
| | **Contract No.: EP/KAL/RDHS/PSSP/CCTV/2023** | | |
| 15. | Supply and installation of CCTV Camera Monitoring system to Primary Medical Care institutions, Divisional Hospitals, Regional special campaign | | 60,000.00 |
| P4 | **Package Number 04 & Title:** Improvement of Digital Health activities at Base Hospitals | | |
| | **Contract No.: EP/KAL/RDHS/PSSP/Health/2023** | | |
| 16 | Expansion of local area networking at Base Hospital Pothuvil, Nintavur & Thirukkovil | | 37,500.00 |

- விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் மூலம் நடாத்தப்படும்.
- 2023.04.19 ஆம் திகதியிலிருந்து 2023.05.15 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் பி.ப. 3 மணி வரையும் கல்முனை, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக நிதியிடல் அலகில் ரொக்கப் பணத்தில ஒவ்வொரு பொதிக்கும் 1,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
- மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 60 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 2023.05.16 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் தலைவர், சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக பிராந்திய குழுத் தலைவரை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் / பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
- பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும். மேலும், சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரானவர் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன் விலைமனுக்களை தயாரித்தல் அல்லது அவற்றை ஒப்படைத்தல் தொடர்பாக வளமுள்ள விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கும் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரானவர் எவ்வித பொறுப்பையும் ஏற்கமாட்டார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம்,**
**பொலிஸ் நிலைய வீதி, கல்முனை.**


இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# சிறு விளம்பரம்







107
டொயோட்டா கார்கள்
விற்பனைக்கு

WP GG-1564 Toyota Carina 1997, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 295 8 . 022844

WP K K - 2768 Toyota A x i o, 2007, car அதி யு யர் விலை க்கு. வெ லி ப ல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 022836

113
சுசூகி கார்கள்
விற்பனைக்கு

300-7008 Suzuki Cultas, 1995, car அதி யுயர் விலைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 022841


117
வேன்கள்
விற்பனைக்கு


SP PH-1764 Nissan Caravan, 2010, van அதியுயர் விலை க்கு. வெலிப ல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 022840

WP GM-1935 Toyota Hiace, 1995, van அதியுய ர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 022839

52-6384 Mitsubishi Delica, 1987, van அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 022838


119
பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

WP PY-8910 DFSK Mini truck, 2014, அதியுயர் வி லைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 022843


122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

WP AAN-2170 Bajaj, 2013, CP AAJ-6417 Bajaj, 2013, WP AAD-6339 B a jaj, 2 012, CP YB- 8 020 B aj aj, 2010, three wh eel அதியுய ர் வி லைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1121081 0 . 022842

Repeat Your ad For Better Offers

## ஆதன சொத்துரிமையைப் பிரகடனப்படுத்தல்

2016.05.12 அன்று காலஞ்சென்ற **சமரநாயக்க ராஜபக்ஷ முதலிகே தொன் உபேந்திர பிரியகாந்த** என்பவரினால் பிரசித்த நொத்தாரிசு **ஐ.என். ரணதுங்க** அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 7841 நன்கொடை உறுதியின் மூலம் பெறப்படும் அநுகூலங்களை அனுபவித்த மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோரளை பல்லேபத்துவ, மஹரகம நகர சபை எல்லையினுள் மஹரகம பிரதேச செயலகப்பிரிவில் ருக்மலே மேற்கு கிராம அலுவலரின் பிரிவிலுள்ள சம்புத்தி அலுபோகஹவத்த காணி அதிகாரம் பெற்ற நில அளவையாளர் **பி.ஏ.எஸ்.டீ. பெரேரா** என்பவரினால் தொகுக்கப்பட்ட இலக்கம் 5452 மற்றும் 2015.08.03 வரைபடத்தின் 'லொட் B' எனப்படும் பதினைந்து பேர்ச் (ஏ.0றூ.0பேர்ச் 15) மற்றும் 'லொட் C' எனப்படும் பதினைந்து பேர்ச் (ஏ.0 றூ.0 பே.15) காணித்துண்டுகள் அவரின் மனைவியான விஜேசிங்ஹ ஏக்கநாயக்க லாலனி மற்றும் இரண்டு பிள்ளைகளான பஸன் இந்துல ராஜபக்ஷ சமரநாயக்க மற்றும் கிவிதி ஹங்ஸனீ ராஜபக்ஷ சமரநாயக்க ஆகியோரினால் பிரசித்த நொத்தாரிசு ஆர்.டீ. பந்துல ஆகிய என் முன்னிலையில் ஒற்றுமையாகப் பங்கீடு செய்து ஒவ்வொருவரினதும் விருப்பத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு எண்ணியுள்ளபடியால் மேற்படி இறந்தவரிடமிருந்து நபரொருவருக்கு அல்லது நிறுவன மொன்றிற்கு அல்லது நிதி நிறுவனமொன்றிற்கு கிடைக்கச் செய்ய வேண்டிய எனினும் அவரின் இறப்பின் காரணமாக இன்றுவரை பெற்றுக் கொள்ள முடியாதுபோன எந்தவொரு உரிமை/காப்புரிமை/இழப்பு/இழப்பீடு/ கடன் தொகையொன்றை காலஞ்சென்றவருக்கு உரித்தான இவ் ஆதனத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு எண்ணியிருப்பின் உங்கள் உரிமைகளை சட்டபூர்வ அதிகாரம் பெற்ற சட்டத்தரணி ஒருவர் மூலம் 2023.04.25 இற்கு முன்னர் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான ரணேபுர தேவகே பந்துல. இல. 71/D முதலாம் மாடி, ஹைலெவல் பிளாஸா, தெல்கந்த, நுகேகொடை என்ற முகவரிக்கு எழுத்துருவில் பதிவுத்தபாலில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.




## சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் இன்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்யும் மோசடி வியாபாரத்தினால் உழைத்த பணத்தைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள 100 இலட்சம் ரூபா நிலையான வைப்பை வலுவிழக்கச் செய்து நீடிப்பதை அமுலாக்குதல் தொடர்பில்

தனுஷ்க தனஹேன வத்த, மிதிகம அஹங்கம முகவரியில் வசிக்கும் பசிந்து சந்தருவன் தெட்டகொட என்பவர் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் இன்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்யும் மோசடி வியாபாரத்தினால் உழைத்த பணத்தைப் பயன்படுத்தி வெலிகம DFCC வங்கிக் கிளையில் 103000248936 எனும் கணக்கிலக்கத்தின் கீழ் 100 இலட்சம் ரூபாவுக்கான நிலையான வைப்பொன்றை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிலையான வைப்பு சட்ட விரோத சொத்து விசாரணைப் பிரிவில் திட்டமிடப்பட்ட குற்றமொன்றினால் உழைக்கும் சொத்து விசாரணைப் பிரிவினால் 2011இன் 40ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 5ஆம் இலக்க நிதி மோசடியைத் தடுக்கும் சட்டத்தின் 7ஆம் மற்றும் 8ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மாத்தறை மேல் நீதிமன்றத்தில் SPL 02/2022 இன் கீழ் யாராவது ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு ஒப்படைத்தல் அல்லது வேறு செயற்பாடுகளை தடுப்பதற்காக 2022-04-27ஆம் திகதி வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளையை 2022-05-04ஆம் திகதி முதல் 2022-08-04ஆம் திகதி வரையும், 2022-08-04ஆம் திகதி முதல் 2022-11-03ஆம் திகதி வரையும், 2022-11-03ஆம் திகதி முதல் 2023-02-03ஆம் திகதி வரையும், 2023-02-03ஆம் திகதி முதல் 2023-05-03ஆம் திகதி வரையும் நீடித்து அமுலாக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கணக்கு தொடர்பில் உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு இது பிரசுரிக்கப்படுகின்றது.

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### சிறைச்சாலைகள் திணைக்களம் - இலங்கை

**சிரேஷ்ட அலுவலர்களுக்கான கறுப்பு நிற தோல் சப்பாத்துக்கள், ஜெயிலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், பெண் ஜெயிலாளர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், சிறைச்சாலை காவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், பெண் காவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், விளையாட்டிற்கான சப்பாத்துக்கள் மற்றும் சப்பாத்து பொலிஷ் டின்கள் ஆகியவற்றின் வழங்கல் - 2023**

01. 2023 ஆம் ஆண்டிற்காக சிரேஷ்ட அலுவலர்களுக்கான கறுப்பு நிற தோல் சப்பாத்துக்கள், ஜெயிலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், பெண் ஜெயிலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், சிறைச்சாலை காவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், பெண் காவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்துக்கள், விளையாட்டிற்கான சப்பாத்துக்கள் மற்றும் சப்பாத்து பொலிஷ் டின்கள் ஆகியவற்றை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் 2023.05.09 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் பெற்றுக் கொள்ளப்படும்.

| | விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| A | சிரேஷ்ட அலுவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்து சோடிகள் | 53 |
| B | ஜெயிலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்து சோடிகள் | 520 |
| C | பெண் ஜெயிலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்து சோடிகள் | 24 |
| D | சிறைச்சாலை காவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்து சோடிகள் | 4557 |
| E | பெண் காவலர்களுக்கான கறுப்பு தோல் சப்பாத்து சோடிகள் | 497 |
| F | விளையாட்டிற்கான சப்பாத்து சோடிகள் | 6305 |
| G | சப்பாத்து பொலிஷ் டின்கள் (36 கிராம்) | 22788 |

02. 2023.05.08 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-09, பேஸ்லயின் வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள சிறைச்சாலை தலைமையலுவக வழங்கல் மற்றும் சேவைகள் பிரிவு, வழங்கலுக்கான சிறைச்சாலைகள் ஆணையாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் அளவுக் குறிப்புக்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத கட்டணமான 12,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். இந்த பெறுகையானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரலுக்கு இசைவாக முனனெடுத்துச் செல்லப்படும்.

03. விலைமனுதாரர்கள் அவர்களின் கம்பனி தலைப்புக் கடிதத்தில் விளக்கக் கடிதத்துடன் விலைமனுக்கோரல் ஆவணங்களைக் கோரலாம்.

04. விலைமனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

05. விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாமென்பதுடன் மேலதிக தகவலை சிறைச்சாலை தலைமையலுவலக வழங்கல் மற்றும் சேவைகள் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

06. விலைமனு ஆவணத்தில் கூறப்பட்டவாறு விலைமனுதாரர்கள் தர பரீட்சை கட்டணங்களை சிறைச்சாலை தலைமையலுவலக சிறாப்பரிடம் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் விலைமனுவை சமர்ப்பிக்கும் போது தேவைப்படுத்தப்படும் மாதிரிகளின் முறையாக முத்திரையிடப்பட்ட எண்ணிக்கையுடன் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. 2023.04.26 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு சிறைச்சாலைகள் தலைமையலுவலக கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

08. 2023.05.09 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனு ஆவணங்கள், ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் மாதிரிகள் ஆகியன பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சிறைச்சாலைகள் தலைமையலுவகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது வழங்கல்கள் மற்றும் சேவைகள் கிளையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகளை அடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Black Leather shoes for Senior Officers, Black Leather Shoes for Jailors. Black Leather Shoes for female Jailors, Black Leather Shoes for Prison Guards, Black Leather Shoes for female Guards, Sports Shoes & Shoe Polish Tins – 2023" என குறிப்பிடப்படல் வேண்டும்.

09. 2023.05.09 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே சிறைச்சாலைகள் தலைமையலுவலக கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் (செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கடிதமானது தேஅஅ இலக்கத்துடன் வழங்கப்படல் வேண்டும்). திறக்கப்பட்ட பின்னர், பூர்த்தி செய்யப்படாத, தெளிவற்ற மற்றும் மாதிரிகளற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

10. மேலதிக தகவலுக்காக தயவு செய்து 0114677148/ 011-4677178/0114677516 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக சிறைச்சாலைகள் தலைமையலுவக வழங்கல் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்,**
**தலைவர்,**
**சிறைச்சாலைகள் திணைக்கள பெறுகைக்குழு,**
**சிறைச்சாலைகள் தலைமையலுவலகம்,**
**இல.: 150, பேஸ்லையின் வீதி,**
**கொழும்பு-09.**
2023.04.18




Repeat Your Ad For Better Offers

## அபிவிருத்தி லொத்தர் சபை

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**(1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)**

அபிவிருத்தி லொத்தர் சபையில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

**பதவியின் பெயர்** : உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)
**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 01
**சம்பள வகுதி** : MM 1-1-2016
**சம்பள அளவு** : ரூபா 53,175 - 10 X 1,375 - 15 X 1,910 - 95,575 (முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரிய சம்பள நிலையில் அமர்த்தப்படுவர்)

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல் (பின்வரும் 1 அல்லது 2)**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.
**அத்துடன்**
அந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய துறை தொடர்பில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் ஐந்து (05) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(2) மூன்றாம்நிலை அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) மூன்றாம் நிலைக்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல் (பின்வரும் 1 அல்லது 2 தகைமைகள்)**

(1) மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பணியாட் தொகுதியினர்.

(2) கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதியில் இந்தப் பதவிக்குரிய விடயத்துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### 02. உதவிப் பொது முகாமையாளர் (விற்பனை) பதவிக்கு ஆட்சேர்த்தல்

**பதவியின் பெயர்** : உதவிப் பொது முகாமையாளர் (விற்பனை)
**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 02
**சம்பள வகுதி** : MM 1-1-2016
**சம்பள அளவு** : ரூபா 53,175 - 10 X 1,375 - 15 X 1,910 - 95,575 (முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரிய சம்பள நிலையில் அமர்த்தப்படுவர்)

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல் (பின்வரும் 1 அல்லது 2)**

(1) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வர்த்தகம் / முகாமைத்துவம் அல்லது அதற்குச் சமமான துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
**அத்துடன்**
அந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபுடைய துறை தொடர்பில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் ஐந்து (05) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(2) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வர்த்தகம் / முகாமைத்துவம் அல்லது அதற்குச் சமமான துறையொன்றிற்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனமொன்றில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான விடயத்துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
(உதா: பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனம் - CIM. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் - SLIM)

**உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல் (பின்வரும் 1 அல்லது 2 தகைமைகள்)**

(1) மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பணியாட் தொகுதியினர்.

(2) கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதியில் இந்தப் பதவிக்குரிய விடயத்துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### 03. தரக் கட்டுபாட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

**பதவியின் பெயர்** : தரக் கட்டுப்பாடு உதவியாளர்
**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 01
**சம்பள வகுதி** : MA 3-2016
**சம்பள அளவு** : ரூபா 32,200 -10 X 445 -11 X 660 - 10 X 730 - 5 X 750 - 54,960 (முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம்)

**தகைமைகள்:**

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல் சார்ந்த விஞ்ஞானமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் இயைபுடைய துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவம்

### 04. தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

**பதவியின் பெயர்** : தகவல் தொழில்நுட்ப உதவியாளர்
**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 02
**சம்பள வகுதி** : MA 3-2016
**சம்பள அளவு** : ரூபா 32,200 -10 X 445 -11 X 660 - 10 X 730 - 5 X 750 - 54,960 (முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம்)

**தகைமைகள்:**

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் இயைபுடைய துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவம்.

### 05. விற்பனை மேம்பாட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

**பதவியின் பெயர்** : தகவல் தொழில்நுட்ப உதவியாளர்
**வெற்றிடங்களின் எண்ணிக்கை** : 02
**சம்பள வகுதி** : MA 3-2016
**சம்பள அளவு** : ரூபா 32,200 -10 X 445 -11 X 660 - 10 X 730 - 5 X 750 - 54,960 (முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம்)

**தகைமைகள்:**

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வியாபாரம் / வர்த்தகம் / முகாமைத்துவம் / பொருளியல் போன்ற துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் இயைபுடைய துறையில் ஒரு (01) வருட கால சேவை அனுபவம்.

### 06. பொது நிபந்தனைகள்:

I. வயது : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

II. நியமனத்தின் தன்மை : நிரந்தரம் /ஒப்பந்தம்
ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துவத்துடன்

III. ஏனையவை : சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும். பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் ரீதியிலான தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும். சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

IV. ஆட்சேர்க்கும் முறை : நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை அல்லது பிரசித்த விளம்பரமொன்றைப் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் அந்தந்த பதவிகளுக்கு உரித்தான வகையில் எழுத்துமூலப் பரீட்சை அல்லது / மற்றும் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்க்கப்படும்.

V. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2023-05-10

அனைத்துக் கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களில் சான்றுபடுத்திய பிரதிகள் சகிதம் விண்ணப்பதாரரினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2023-05-10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அல்லாவிடில் விண்ணப்பப் படிவத்தை அபிவிருத்தி லொத்தர் சபையின் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். (அமைச்சுகள் / திணைக்களங்கள் / ஏனைய அரச நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

**தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**

# மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

## மக்கள் வங்கி களுத்துறை பிராந்திய தலைமைக் காரியாலயம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி களுத்துறை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் கிளைகள்/சேவை மையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஒவ்வொரு கிளையின் முன்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள தேதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள தேதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| இல. | மக்கள் வங்கியின் கிளை மற்றும் சேவை மையத்தின் பெயர் | கீழே காட்டப் பட்டுள்ள தேதி வரை மீட்டெடுக்கப் படாத/புதுப்பிக்கப் படாத நகைகள் | ஏல விற்பனை செய்யப்படும் இடம் மற்றும் தேதி |
|---|---|---|---|
| 01 | **கிளைகள்**<br>அளுத்கம, பேருவல, மக்கோனா, களுத்துறை, வாத்துவ, பாணந்துறை, பாணந்துறை நகரம்<br>**சேவை மையங்கள்**<br>களுத்துறை வடக்கு, மத்திய சந்தி (Central Junction), போம்புவல, கட்டுக்குருந்த, நாகொட, தர்கா நகரம், மொரந்துடுவ, மோதரவில, கெசல்வத்த எழுவில | 12.05.2023 | 13.05.2023/14.05.2023 களுத்துறை கிளை |
| 02 | **கிளைகள்**<br>ஹொரண, புலத்சிங்கல, இங்கிரிய, பண்டாரகம், அளுத்கம, நேபொட, பதுரேலிய, பெலவத்த<br>**சேவை மையங்கள்**<br>மில்லனிய, மொறகஹஹேன, கோணபொல, பொக்குனுவிட்ட, ஹந்தபங்கொட, அளுபோமுல்ல, அஹலவத்த, தொடங்கொட, மீகஹதென்ன | 19.05.2023 | 20.05.2023/21.05.2023 ஹொரண கிளை |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - களுத்துறை**
**தொலைபேசி இல. 038-2232438/2241596/4283182**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

# வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

## வீடுகள்/கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பதவியணியினருக்காக தங்குமிட வசதிகளை வழங்கும்பொருட்டு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் / கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருப்பது அவசியமானதாகும்.

01. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருத்தல் வேண்டும். பலாலி / காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை / உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் மிகவும் பொருத்தமானதாகும்) இணைக்கப்பட்டுள்ள குளியலறைகள் அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளவாடங்கள், வீட்டு உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள் மற்றும் சமையலறை உபகரணங்களுடன் இருத்தல் வேண்டும்.
04. போதியளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்
06. அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகளையும் உரிமையாளரே மேற்கொள்ள வேண்டும்.
07. வீட்டின் வெளிப்புறத்தை சுத்தம் செய்வது உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்காக பொருத்தமான அணுகுமுறையொன்றினை ஏற்படுத்தி பராமரிக்கப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டிடங்கள் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்குப் பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்குறித்த காலவெல்லையை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வீடுகள் / கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் (வீட்டின்/கட்டிடத்தின்) | 9 | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2 | வீட்டின் /கட்டிடத்தின் முகவரி | 10 | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3 | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11 | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4 | பிரதேச செயலகப் பிரிவு | 12 | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5 | கிராமசேவகர் பிரிவு | 13 | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6 | யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14 | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7 | மாடிகளின் எண்ணிக்கை | 15 | தற்போதைய அனைத்துவித வீட்டுத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் முழு விபரம் (உண்டு / இல்லை) |
| 8 | வீட்டின் உள் பரப்பளவு (சதுரடி) | 16 | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின் / கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை. (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)
06. எதிர்பார்க்கப்படும் முற்பணத்தொகை (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் 'வாடகை அடிப்படையில் வீடுகள் / கட்டிடங்களைப் பெறுவதற்கான முன்மொழிவுகள்' என குறிப்பிட்டு, தவிசாளர், பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, கட்டுநாயக்கவிற்கு 2023.05.09 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக 112263550/ 011-2263552 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **26/04/2023**

இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **27/04/2023**

இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **28/04/2023**

இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.

திகதி : **29/04/2023**

இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

# பெறுகை அறிவித்தல்

## பன்வில பிரதேச சபை

பன்வில பிரதேச சபைக்குச் சொந்தமான ஹுனுகங்க சுற்றுலா விடுமுறை இல்லம், அதன் பல்வகைப் பொருட்கள் மற்றும் காட்சி கூடம் என்பவற்றை அனுமதித்த கட்டணங்களை அறவிட்டு உடன்படிக்கைக்கு உட்பட்ட தினம் முதல் 03 வருட கால எல்லை வரை நடத்திச் செல்வதற்காக தகைமையான விண்ணப்பதாரிகளிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்த கேள்வி பிணைத்தொகை மற்றும் ரூ. 3,500.00 விண்ணப்பப்படிவக் கட்டணத்தை காசாளரிடம் செலுத்தி தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவம் மூலம் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்பு வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் குறித்த இடத்தை பரீட்சிக்கலாம்.
3. கேள்விப்பத்திரங்கள் விநியோகித்தல் மற்றும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2023.04.18 முதல் 2023.05.02 நண்பகல் 12.00 வரை மற்றும் கேள்விகள் திறத்தல் 2023.05.03 பி.ப. 2.00 இற்கு பன்வில பிரதேச சபை தலைமையகத்தில் நடைபெறும்.
4. பொறியிடப்பட்ட கேள்விகள் "செயலாளர், பன்வில பிரதேச சபை, பன்வில" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
5. கேள்விகள் 02 பிரதிகளாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஹுலு கங்க சுற்றுலா, இல்லம்" மற்றும் மூலப் பிரதி.·. நகல் பிரதி என குறிப்பிடுதல் வேண்டும்.

**பெறுகை நிபந்தனைகள்**

1. தகைமையுள்ள குத்தகை கொள்வனவாளராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்படின் அது பற்றி அறிவித்து, 14 நாட்களுக்குள் உடன் படிக்கைக்கு உட்படுவதுடன் ஒப்பந்த காலம் 03 வருடங்களாகும்.
2. தகைமையுள்ள குத்தகைதாரராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்படின், நீங்கள் தகைமையுள்ள குத்தகைதாரராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக உங்களுக்கு எழுத்து மூலம், ஆவணமொன்று கிடைத்து 14 நாட்களுக்கு முன்பு உங்களால் ஒப்பந்த தொகையில் மாதாந்தம் 5 தவணைகள் (5/36) இற்கு சமமான செயற்பாட்டு பாதுகாப்பொன்று, காசாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும்.
3. தகைமையுள்ள குத்தகைதாரராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்படின் உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்த தொகையில் 1/36, மாதாந்தக் கட்டணமாக எதிர்வரும் மாதத்தில் 10ஆம் திகதிக்கு முன்னர் பன்வில பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்துவதற்கு தவறின் அந்த 30 நாட்களுடன் சம்பந்தப்பட்ட தொகை மற்றும் 10% தண்டர் தொகையை செயற்பாட்டு பிணைமுறியாக கழிக்கப்படும். மேலும் எதிர்வரும் 90 நாள் காலத்திற்குள் உறுதி இரத்தாவதுடன், அதன்பிறகு மீண்டும் கேள்விகோரல் அல்லது கேள்விச் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் பிரகாரம் அடுத்த தகைமையானவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
4. குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
5. கேள்வி விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்காதவர்களின் மற்றும் விண்ணப்பித்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறித்த தினத்திற்கு முன்பு குறித்த கட்டணங்களை செலுத்தி உடன்படிக்கைக்கு உட்படாத கேள்விதாரர்களின் கேள்விப் பிணை வைப்பு சபை உரியதாக்கப்படும்.
6. விண்ணப்பதாரி அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் நபருக்கு - கேள்வி திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.
7. படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது தவறுகள் இடம்பெறின் தனிக் கோட்டினால் வெட்டி திருத்தி குறுகிய ஒப்பத்தை இடுங்கள் - (டிபெக்ஸ் செய்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்)
8. ஹுலுகங்க நீர் வீழ்ச்சியை பார்வையிடும் கூடத்திற்காக அனுமதிப் பத்திர கட்டணம், பன்வில பிரதேச சபையினால் அவ்வப்போது (வருடாந்தம்) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டணத்திற்கு உட்பட்டு அறவிடுவதற்கு தகைமையான குத்தகைக் கொள்வனவாளர் இணங்குதல் வேண்டும்.
9. கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆவதுடன், கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை கேள்விச்சபைக்கு உரியது.

| தொடர் இலக்கம் | விபரம் | குறைந்தபட்ச கேள்வி | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு |
|---|---|---|---|
| 1 | ஹுலுகங்க சுற்றுலாவிடுமுறை இம்ஸ் (தளபாடங்களுடன்) மற்றும் காட்சி கூடத்துடன் - குத்தகைக்கு விடல் | ரூ. 2,340,000.00 (65000 x 36) | 5,000.00 |

**தொடர்புகள்:-**
**தொ.பே.இல. :- 081-2472028**

**செயலாளர்,**
**பன்வில பிரதேச சபை,**
**பன்வில.**

# கல்பிட்டி பிரதேச சபை

## 2024 வரவு செலவுத் திட்டத்திற்காக அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

2024ஆம் ஆண்டில் கல்பிட்டி பிரதேச சபையில் எதிர்வரும் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் 2024 வரவு செலவு திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக பொதுமக்கள் மற்றும் சனசமூக அமைப்புகளிலிருந்து அபிவிருத்தி விடயங்கள் பற்றிய திட்டங்கள் ஏற்கப்படும்.

கல்பிட்டி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உங்களது பெறுமதியான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை 2023 ஜுன் 30ம் திகதிக்கு முன்னர் கல்பிட்டி பிரதேச சபை தலைமையகத்திற்கு வழங்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

கல்பிட்டி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மிகவும் பெறுமதியாகக் கருதுகிறேன்.

**முகவரி - பிரதான வீதி, கல்பிட்டி.**
**மின்னஞ்சல் - kalpitiyaps@gmail.com**
**பெக்ஸ் - 0322260683**
**தொலைபேசி இலக்கம் - 032226074/ 0322260275**

**மங்கள ராமநாயக்க**
**செயலாளர்,**
**கல்பிட்டி பிரதேச சபை**
2023.04.11

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.01.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 25.04.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

## தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

## ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதி இராஜகிரிய
25.04.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

# பிரதேச அபிவிருத்தி வங்கி

## வெலிகம மற்றும் மிரிஸ்ஸ கிளைகள்

2008, 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 40 ஆவது பிரிவின் மூலம் அமுலில் உள்ள 1990, 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்டுள்ள கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ்,

**பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளையில் (மேற்கு) வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் வெலிகம பிரதேச சபை அதிகாரப் பரவலில் மிரிஸ்ஸ தெற்கு II இலக்கம் 406 ஏ கிராம அலுவலர் பிரிவில், மிரிஸ்ஸ வெஹேரகல்ல வீதியில் "முல்லே அரம்பவத்த உஸ்வத்த" எனும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட அவரது பொறுப்பில் இருக்கும் முபி/மார/ 65 எனும் வரைபடத்தில் காட்டப்படும் துண்டு இல: 03 தொடர்பில் மாத்தறை அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர் பீ.எச்.பீ. நிஹால் சில்வா அவர்களினால் மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்ட 2013.03.16 ஆம் திகதிய 055/13 ஆம் இலக்க வரைபடத்தில் சித்தரிக்கப்படும் துண்டு இலக்கம் 03 என காட்டப்பட்டுள்ள இருபது தசம் ஒன்று (ஏக் : 00 றூட் : 00 பர்: 20.1) பரப்பளவு காணி, அதன் மீது உள்ள மரங்கள், பழவகை மற்றும் அதன் மீது அமைந்துள்ள சகல கட்டிடங்களும் உள்ளடங்கலாக,

மேலும் மேற்குறிப்பிட்டுள்ள முபி/மார/65 ஆம் இலக்க வரைபடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள இலக்கம் 37 மற்றும் சகல பாதை உரிமைகளுடன் மிரிஸ்ஸ வெஹேரகல்ல வீதி இலக்கம் 02 இல் வசிக்கும்

01. சுதசிங்ஹகே ரொசலின் நோனா
02. கல்பொக்க ஹேவகே மஹிந்தசிரி (தேசிய அடையாள அட்டை இலக்கம் : 710201358v) பிணைப்பாளர்களாக, பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டுள்ள கடன் வசதிகளுக்காக 3797 ஆம் இலக்க கடன் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் மிரிஸ்ஸ கிளைக்கும் 4367 ஆம் இலக்க ஈட்டுப்பத்திரத்தின் கீழ் வெலிகம கிளைக்கும் பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்

2023 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி மு.ப.11.00 மணிமுதல் ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு 2019.06.14 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.08.30 ஆம் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்கு பிரவேசித்தல்**

வெலிகம பஸ் தரிப்பிடத்திலிருந்து மாத்தறை நோக்கி 03 கி.மீ. அளவில் முன் சென்றவுடன் மிரிஸ்ஸ வைத்தியசாலையின் வலது பக்கத்தில் கடற்கரை பக்கத்திற்கு உள்ள விகாரை வீதியில் சுமார் 200 மீட்டர் அளவில் முன்னோக்கி சென்றவுடன் வெஹேரகல்ல வீதியின் வலது பக்கத்தில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை**

விலை தீர்மானிக்கப்பட்டதும் வெற்றிகரமான கொள்வனவாளர் உடனடியாக பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையில் 25%
2. உள்ளூராட்சி கட்டணங்கள் 1%
3. ஏலவிற்பனைதாரரின் தரகுப் பணம் விற்பனை விலையில் 2.5%
4. உரிய அரசாங்க கட்டணங்கள்
5. சகல விளம்பர செலவுகள்.
6. எழுது வினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம்.
7. 5000/= ரூபா விற்பனை நிபந்தனைகளை உறுதிப்படுத்தும் நொத்தாரிசு கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தி தீர்க்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ளவாறு 30 நாட்களுக்குள் மீதித் தொகை செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையின் 25% ஐ திருப்பி செலுத்தாமல் இருப்பதற்கும் மீண்டும் அவ் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் வங்கிக்குரியது.

மேலதிக விபரங்களுக்கும், உரிமை, காணி உறுதி மற்றும் உரிய ஆவணங்களை மாத்தறை சுற்றுவட்டப் பாதை, இலக்கம் 25பீ எனும் முகவரியில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் தென் மாகாண அலுவலகத்தில், பிரதேச பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கங்கள் : 041-2226208/041-2226209**

**என்.எச்.பி.பி.ஆரியரத்ன,**
**அங்கீகரிக்கப்பட்ட ஏலவிற்பனையாளர்,**
**மதிப்பீட்டாளர், நீதிமன்ற ஆணையாளர்.**
**தொலைபேசி இல : 071-1885677/077-3281956**

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுவூட்டும் செயற்றிட்டம் – 2023

## நிதியிடல் – உலக வங்கி

01. 1ஆம் அட்டவணையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| தொ. இல. | அடையாள இலக்கம் | விபரங்கள் | தேவையான விலைமனு தாரரின் தரம் | விலை மனுப் பிணை முறி (ரூபா) | பொறியிய லாளரின் மதிப்பீடு | நிறைவு செய்வ தற்கான நாட்காட்டி நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | BT/RDHS/MC/ PSSP/01/2023 | கூட்ட மண்டபம் மற்றும் மார்பு சிகிச்சையகக் கட்டிடத்தை புதுப்பித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் | C9, C8 மற்றும் C7 | 40,000.00 | 3.477 | 60 |
| 2 | BT/RDHS/MC/ PSSP/02/2023 | RDHS அலுவலகத்தில் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் மற்றும் வாடிக்கையாளர் தரிப்பிட வசதிகளை மேம்படுத்துதல் | C9, C8 மற்றும் C7 | 45,000.00 | 3.912 | 60 |
| 3 | BT/RDHS/MC/ PSSP/03/2023 | ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வார்ட்டை (மனநல வார்ட்) மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் | C9, C8 மற்றும் C7 | 27,000.00 | 2.608 | 45 |
| 4 | BT/RDHS/MC/ PSSP/04/2023 | பட்டிப்பளை MOH அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் | C9, C8 மற்றும் C7 | 25,000.00 | 2.434 | 45 |
| 5 | BT/RDHS/MC/ PSSP/05/2023 | வவுனதீவு அலுவலகத்தின் திரிபோஷ களஞ்சியசாலையை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகளுடன் கூட்ட மண்டபத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் | C9, C8 மற்றும் C7 | 40,000.00 | 3.912 | 60 |
| 6 | BT/RDHS/MC/ PSSP/06/2023 | கரடியனாறு மாவட்ட வைத்தியசாலையிலுள்ள தாதியர் உத்தியோகத்தர்களின் விடுதி அறைகள் மற்றும் வைத்தியசாலையை மேம்படுத்துதல் மற்றும் புனர்வாழ்வு அலகுக்கு இடமளிக்கும் வகையில் வார்ட்டை புதுப்பித்தல் | C9, C8 மற்றும் C7 | 33,000.00 | 3.216 | 60 |
| 7 | BT/RDHS/MC/ PSSP/07/2023 | நாவலடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் செயற்பாடுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | C9, C8 மற்றும் C7 | 27,000.00 | 2.607 | 45 |
| 8 | BT/RDHS/MC/ PSSP/08/2023 | செட்டிப்பாளையம் மாவட்ட வைத்திய சாலையின் மது மற்றும் போதை வஸ்து புனருத்தான பிராந்திய நிலையத்திற்கான புதுப்பித்தல் மற்றும் மேம்பாடுகள் | C9, C8 மற்றும் C7 | 40,000.00 | 3.912 | 60 |
| 9 | BT/RDHS/MC/ PSSP/09/2023 | காத்தான்குடி, ஆதார வைத்தியசாலையின் உடற்கூறியல் மற்றும் புனர்வாழ்வு பிரிவிற்கு இடமளிக்கும் வகையில் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல். | C8, C7 மற்றும் C6 | 85,000.00 | 8.407 | 90 |
| 10 | BT/RDHS/MC/ PSSP/10/2023 | ஓட்டமாவடி MOH அலுவலகத்தின் MOH கட்டிடத்தை புதுப்பித்தல் மற்றும் MOH அலுவலக அறையை விஸ்தரித்தல் | C9, C8 மற்றும் C7 | 30,000.00 | 2.949 | 60 |
| 11 | BT/RDHS/MC/ PSSP/11/2023 | பழுகாமம் மாவட்ட வைத்தியசாலையில் நிர்வாகப் பிரிவுடனான மருந்து களஞ்சியசாலை, பற்சிகிச்சைப் பிரிவு, நோயாளர் காத்திருக்கும் பிரதேசத்திற்கு இடமளிக்கும் வகையில் வார்ட் மற்றும் OPD கட்டிடத்தைப் புதுப்பித்தல் மற்றும் விஸ்தரித்தல் | C8, C7 மற்றும் C6 | 80,000.00 | 7.385 | 90 |
| 12 | BT/RDHS/MC/ PSSP/12/2023 | ரிதீதென்ன PMCU பிரிவின் மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | C9, C8 மற்றும் C7 | 30,000.00 | 2.602 | 45 |
| 13 | BT/RDHS/MC/ PSSP/13/2023 | மாவடிவேம்பு மற்றும் மகழவட்டுவான் மாவட்ட வைத்தியசாலையில் பாதுகாப்பு கூடாரத்தை நிர்மாணித்தல் | C9, C8 மற்றும் C7 | 30,000.00 | 2.602 | 45 |
| 14 | BT/RDHS/MC/ PSSP/14/2023 | மகிழவட்டுவான் பிரிவின் பொது மற்றும் ஊழியர் மலசல கூடத்தை நிர்மாணித்தல் சகிதம் PMCU பிரிவை புதுப்பித்தல் | C9 மற்றும் C8 | 14,000.00 | 1.384 | 30 |
| 15 | BT/RDHS/MC/ PSSP/15/2023 | மாவடிவேம்பு மாவட்ட வைத்தியசாலையில் கட்டிடத்தின் பூர்த்தியாக்கும் வேலை மற்றும் பற்சிகிச்சைப் பிரிவை புதுப்பித்தல் | C9, C8 மற்றும் C7 | 43,000.00 | 4.254 | 60 |
| 16 | BT/RDHS/MC/ PSSP/16/2023 | வெள்ளாவெளி, MOH அலுவலகத்திலுள்ள கூட்ட மண்டபத்தை மேம்படுத்துதல் | C9, C8 மற்றும் C7 | 22,000.00 | 2.166 | 45 |
| 17 | BT/RDHS/MC/ PSSP/17/2023 | மண்டூர் மாவட்ட வைத்தியசாலையிலுள்ள மகப்பேறு வார்ட், பெண்கள் வார்ட், சமையலறை மற்றும் வெளி நோயாளர் பிரிவைப் புதுப்பித்தல் | C9, C8 மற்றும் C7 | 42,000.00 | 4.167 | 60 |

**அட்டவணை - 1**

02. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும். 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் ICTAD (தற்போதைய CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் பின்வரும் மூலப் பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
   - அ. விலைமனுதாரர்கள் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து விலைக்கோரல் தொகையின் 30% கடன்வசதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - ஆ. விலைமனுதாரர்கள் கடந்த மூன்று வருடங்களில் விலைக்கோரல் தொகையின் 70% இற்குக் குறையாத இதனையொத்த தன்மையுடைய குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - இ. ஆகக்குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் நிகர கடன் வசதிகள் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளும் எந்தவொரு முற்பணமும் தவிர்த்து கேள்வியிடக்கூடிய தொகை 30% இற்குக் குறைவாக இருத்தல் கூடாது. இது வங்கியிலிருந்து விலைமனுக்கள் திறக்கப்படுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் பெற்றுக்கொண்ட நேரடியாக வேலை கொள்வோருக்கு முகவரியிடப்பட்ட ஆவணச் சாட்சியாகவிருத்தல் வேண்டும்.
   - ஈ. பணியாட்தொகுதியில் NDT (சிவில்) அல்லது இதற்கு நிகரான தகைமையுடன் 3 வருட கால அனுபவம் அல்லது NCT சகிதம் 5 வருட கால அனுபவம் கொண்ட தொழில்நுட்ப அதிகாரியொருவர் உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.
   - உ. விலைமனுதாரர் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் விலைக்கோரல் தொகைக்கு இதற்கு நிகரான கட்டிடத்தை நிர்மாணிப்பதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் CIDA பதிவுப் புத்தகத்தில் சான்றிதழுடன் கூடிய வேலை வழங்குநரிடமிருந்து / ஒப்புதல் அறிக்கையை ஆதார ஆவணமாக இணைத்தல் வேண்டும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் மேற்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2023-04-17ஆம் திகதி முதல் 2023-05-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
07. விலைமனுக்கள் 2023-05-09ஆம் திகதி விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
08. சகல விலைமனுக்களுடனும் 2023-09-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட 1ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இலங்கை ரூபா தொகைக்கு மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப் பிணை முறியானது விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்திலும் மற்றும் ''நிபந்தனையற்ற கோரிக்கை'' பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
09. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு என முகவரியிட்டு நகல் பிரதியுடன் மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
10. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி என்பதுடன் அதன் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
12. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-05-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
13. ஒவ்வொரு விலைமனுதாரரும் தங்களது தற்போதைய பணிச் சுமையை விலைமனு ஆவணத்தின் உள்ள தகுதித் தகவல் படிவம் 2 இல் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும்.
14. சுகாதார சேவைகள் திணைக்களத்தில் (கி.மா) திருப்தியற்ற செயற்திறனைச் செய்த அல்லது தவறான தகவல்களைச் சமர்ப்பித்த விலைமனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டின்போது நிராகரிக்கப்படுவர்.
15. பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். ஏதாவது ஒன்று அல்லது அனைத்து விலைமனுக்களையும் தனது சொந்த முடிவின் பிரகாரம் நிராகரிக்க பிராந்திய பெறுகைக் குழு அதிகாரம் அளிக்கின்றது.

**மருத்துவர் ஜீ. சுகுனன்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மட்டக்களப்பு.**
**2023-04-17**

WATERS EDGE

# விலைக்கோரல் அறிவித்தல்

ஹோட்டலுக்கு சலவையக சேவையை வழங்குவதற்கு வளமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை பத்தரமுல்ல, வோட்டர் எட்ஜ் நிறுவனம் அழைக்கின்றது.

## விலைக்கோரல் பெயர்: சலவையக சேவை வழங்குதல் / விலைக்கோரல் இல. WE/PUR/LS/2023/13

மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்துவதன் பேரில் 2023 ஏப்ரல் 17ஆம் திகதி முதல் 2023 மே 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையில் வோட்டர் எட்ஜ் நிறுவனத்தின் கொள்வனவுப் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, வோட்டர் எட்ஜ் லிமிடெட், இல. 316, எத்துள் கோட்டே வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு முகவரியிட்டு 2023 மே 09ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் நேரில் ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விலைக்கோரல் பெயர்'' குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் 2023 மே 09ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தயவு செய்து இணைக்கவும். விலைக்கோரல் ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள சகல விபரங்களையும் விலைமனுதாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வோட்டர் எட்ஜ் லிமிடட்,**
**316, எத்துள் கோட்டே வீதி,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

*மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தொடர்புகொள்ளவும்:*

**முகாமையாளர் - பெறுகைகள்**
**தொலைபேசி: 0112863863/0112887050 (நீடிப்பு 2103)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - களுத்துறை

## அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - 2023/2024

மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரித்தான களுத்துறை மாவட்ட வைத்தியசாலைகளில் 2023/2024ஆம் வருடங்களில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக அது தொடர்பில் அனுபவம் மற்றும் தகைமை வாய்ந்த ஆர்வமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து களுத்துறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி | விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் |
|---|---|
| அழுக்குத் துணிகளை சலவை செய்தல் | RDHSK/FD/T/02/2022 |

| | | | |
|---|---|---|---|
| 01 | சேவை எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி | 2023-07-01 - 2024-06-30 | |
| 02 | விலைமனு ஆவணக் கட்டணம் | வைத்தியசாலையின் பெயர் | கட்டண அளவு |
| | | பாணந்துறை ஆதார வைத்தியசாலை | 2000.00 |
| | | ஹொரண ஆதார வைத்தியசாலை | 3500.00 |
| | | கேத்துமதி மகளிர் வைத்தியசாலை | 2000.00 |
| | | மத்துகம மாவட்ட வைத்தியசாலை | 200.00 |
| | | பிம்புர மாவட்ட வைத்தியசாலை | 200.00 |
| | | பண்டாரகம மாவட்ட வைத்தியசாலை | 200.00 |
| | | இங்கிரிய மாவட்ட வைத்தியசாலை | 200.00 |
| 03 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2023-04-18ஆம் திகதி முதல் 2023-05-09ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.<br>• வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ்<br>• நிதி இயலுமை (பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சொத்துச் சான்றிதழ் / வருமான வரி விபரங்கள்)<br>• அழுக்குத் துணிகளைக் கழுவுதல் தொடர்பில் முன் சேவை அனுபவத்தை உறுதி செய்யக்கூடிய ஆவணங்கள்<br>• மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம் | |
| 04. | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி | 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து<br>• விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அவர்களின் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டவர் கலந்து கொள்ளலாம். | |
| 05. | விலைமனுப் பிணை முறி | விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும் 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2023-08-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் பெற்று விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது குறித்த விலைமனுப் பிணையை ரொக்கப் பணமாக இந்த அலுவலகத்திற்குச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். | |
| 06. | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டிய விதம் | ''மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 29, 4வது மாடி, கச்சேரி கட்டிடத்தொகுதி, களுத்துறை'' எனும் முகவரிக்கு 2023-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கும் வகையில் அனுப்பலாம் அல்லது களுத்துறை மாவட்ட செயலகக் கட்டிடத்தில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். | |
| 07. | விலைமனுக்களை கடித உறைகளில் உள்ளிடுதல் மற்றும் முத்திரை பொறித்தல் | விலைமனுக்களை பிழையின்றி பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு, வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைப் பொறித்தல் வேண்டும் என்பதுடன் அனைத்து உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வைத்தியசாலையின் பெயர் மற்றும் ''அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் 2023/2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். | |

- ➢ விலைமனுக்களை 2023-04-18ஆம் திகதி முதல் 2023-05-09ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- ➢ விலைக்கோரல்களைக் கையளித்தல் அல்லது இரத்துச் செய்யும் இறுதித் தீர்மானத்தை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
- ➢ மேலதிக விபரங்களை வருகை தந்து அல்லது 034-2222367 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம்,**
**த.பெ. 29, 4வது மாடி, கச்சேரி கட்டிடத்தொகுதி,**
**களுத்துறை.**

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 ஏப்ரல் 18 செவ்வாய்க்கிழமை

# இலங்கையின் சிறப்பாட்டத்திற்கு முன் அயர்லாந்துக்கு 'பலோ ஓன்' நெருக்கடி

இலங்கை அணியின் சிறப்பாட்டத்தின் மூலம் பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் சவாலை சந்தித்திருக்கும் அயர்லாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸை பலோ ஓன் செய்யும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

காலியில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட் இழப்புக்கு 591 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது முதல் இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டது.

தொடர்ந்து இரண்டாவது நாளான நேற்று (17) தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த அயர்லாந்து அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

குறிப்பாக இடது கை சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரியவின் பந்துக்கு முகம்கொடுக்க முடியாமல் தடுமாறியது.

இதன்படி இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவின்போது அயர்லாந்து அணி 45 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களையே பெற்றிருந்தது. பிரபாத் ஜனசூரிய 5 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு விஷ்வ பெர்னாண்டோ 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அயர்லாந்து அணி இலங்கையை விடவும் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் மாத்திரம் கைவசம் இருக்க 474 ஓட்டங்களால் பின் தங்கி இருக்கும் சூழலில் அந்த அணி இரண்டாவது இன்னிங்ஸுக்கு தொடர்ந்து துடுப்பெடுத்தாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி சார்பில் தினேஷ் சந்திமால் மற்றும் சதீர சமரவிக்ரமவும் சதம் பெற்றனர். இதில் 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் டெஸ்ட் அணிக்குத் திரும்பிய சதீர சமரவிக்ரம தனது கன்னி சதத்தை பூர்த்தி செய்தார்.

கடைசி வரை அட்டமிழக்காது இருந்த அவர் 114 பந்துகளுக்கு 104 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை அணியில் விக்கெட் காப்பாளர் ஒருவர் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் சதம் பெறுவது ஏழு ஆண்டுகளில் இது முதல் முறையாக



இருந்தது. கடைசியாக 2016ஆம் ஆண்டு குசல் பெரேரா சதம் பெற்றிருந்தார்.

இதன்போது சமரவிக்ரம, தினேஷ் சந்திமாலுடன் இணைந்து ஏழாவது விக்கெட்டுக்காக 183 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். தனது 14ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்த சந்திமாலும் ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களை பெற்றார்.

ஏற்கனவே அணித்தலைவர் திமுத் கருணாரத்ன (179) மற்றும் குசல் மெண்டிஸ் (140) இருவரும் சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அயர்லாந்து அணி இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடுவது இது முதல் முறை என்பதோடு அந்த அணி 2017 ஆம் ஆண்டு டெஸ்ட் வரம் பெற்றது தொடக்கம் இதுவரை எந்த டெஸ்ட் போட்டியிலும் வெற்றியீட்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த அணி இதுவரை ஆடிய நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்துள்ளது.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

## சவூதியில் செல்வந்த டி20



இந்திய பிரீமியர் லீக்கை விஞ்சும் வகையில் உலகின் மிக செல்வந்த டி20 தொடரை நடத்த சவூதி அரேபியா திட்டமிடுவதாக செய்தி வெளியாகியுள்ளது.

தற்போது அதுகுறித்து சவூதி அரேபியா, ஐ.பி.எல் அணி உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல் போன்று தமது நாட்டிலும் ஒரு பெரும் கிரிக்கெட் தொடரை நடத்தி கவனத்தை ஈர்க்க சவூதி அரேபியா கடந்த ஓர் ஆண்டாக பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, இந்திய வீரர்களை மற்ற நாட்டு உள்ளூர் டி20 தொடர்களில் விளையாட அனுமதிப்பதில்லை. சவூதி அரேபியாவில் கிரிக்கெட் போட்டி நடந்தால் இந்திய வீரர்கள் அதில் இருக்க வேண்டும் என்பது அதன் திட்டம்.

ஆசியக் கிரிக்கெட் கிண்ணம், ஐ.பி.எல் போட்டியின் சில ஆட்டங்களையும் ஏற்று நடத்த சவூதி அரேபியா திட்டம் தீட்டிவருவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே கால்பந்து, போர்முலா 1 கார் பந்தயம் போன்ற விளையாட்டுகளில் தடம் பதித்துள்ள சவூதி அரேபியா தற்போது கிரிக்கெட் பக்கம் பார்வையைத் திருப்பியுள்ளது.

## ஏப்ரல் 24இல் இலங்கை கரப்பந்து அணி தெரிவு




இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணிக்கான வீரர்கள் தெரிவு வரும் ஏப்ரல் 24ஆம் திகதி காலி, தடெல்ல உள்ளக கரப்பந்தாட்ட அரங்கில் இடம்பெறும் என்று இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

நான்காவது ஆசிய ஆடவர் கரப்பந்தாட்ட சவால் கிண்ண போட்டித்தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை சைனிஸ் தாய்ப்பே தலைநகர் தாய்ப்பேயில் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடரில் இலங்கை அணியும் பங்கேற்கவுள்ளது.

தேசிய அணியில் இணைய விரும்பும் வீரர்கள் இம்மாதம் 24ஆம் திகதி காலி, தடெல்ல உள்ளக கரப்பந்தாட்ட அரங்கிற்கு காலை 8 மணிக்கு வர வேண்டும் என்றும் தெரிவுகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்றும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த தெரிவுகள் தொடர்பில் மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்வதற்கு 0112 669 344 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பை ஏற்படுத்தலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோணக்கலை பிரீமியர் லீக்: ரேந்தபல ஆர்.சி.சி சம்பியன்


**லுணுகல நிருபர்**



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கோணக்கலை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ரேந்தபல ஆர்.சி.சி அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. பாசறை கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) நிறைவடைந்த இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கோணக்கலை மேற்பிரிவு இளங்கதிர் அணியையே ஆர்.சி.சி அணி வீழ்த்தியது. 20 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் மூன்றாம் இடத்தை கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய அணி வென்றது.

போட்டித் தொடரின் சிறந்த வீரராக ஜஸ்டீன் தெரிவானார். போட்டித் தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக அருள் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக சஞ்சீவன் ஆகியோரும் சிக்ஸர் ஹிட்மேனாக பாலமுருகனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## உலகின் மிகப்பெரிய ரொக்கெட் சோதனை



இதுவரை கட்டப்பட்ட மிக சக்தி வாய்ந்த ரொக்கெட் தனது முதல் பயணத்திற்காக விண்வெளிக்கு ஏவப்படவுள்ளது.

ஸ்டார்ஷிப் என்ற இந்த ரொக்கெட் அமெரிக்காவின் பெரும் செல்வந்தர் இலொன் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது. 120 மீற்றர் (400 அடி) உயரம் கொண்ட இந்த ரொக்கெட் வரலாற்றில் இதுவரை உருவாக்கப்பட்ட ரொக்கெட்டுகளை விடவும் இருமடங்கு பெரிதாகும்.

சோதனை முயற்சியாக இந்த ரொக்கெட் இலங்கை நேரப்படி இன்று (18) டெக்சாஸில் உள்ள போகா சிகாவில் இருந்து ஆளின்றி பயணிக்கவுள்ளது. வானின் மேல் மட்டத்தில் கிழக்கு நோக்கி அனுப்பப்படும் இந்த ரொக்கெட் கிட்டத்தட்ட உலகை ஒரு முறை சுற்றவுள்ளது.

ஸ்டார்ஷிப் சோதனை ஒன்றரை மணி நேரம் நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிறந்தநாள் விழாவில் நால்வர் சுட்டுக்கொலை



அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் 16ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

டாடேவில்லே என்ற சிறு நகரில் கடந்த சனிக்கிழமை பிந்திய இரவில் இடம்பெற்ற கொண்டாட்டத்தின்போதே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு எப்படி, எதற்காக நடந்தது என்பதற்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை.

அமெரிக்காவில் இந்த ஆண்டு மட்டும் 163 பெரிய அளவிலான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

# சர்வதேச செய்திகள்

## சூடான் இராணுவ தரப்புகள் 3ஆவது நாளாகவும் மோதல்

### உயிரிழப்பு 100ஆக உயர்வு

சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைக்கு இடையிலான மோதல் மூன்றாவது நாளாக நீடித்து வருவதோடு அது நாடெங்கும் பரவியுள்ளது.

இந்த மோதல்களில் சுமார் 100 பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவர்களின் ஒன்றியம் தெரிவித்ததோடு 1,100 பேர் வரை காயமடைந்திருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. தலைநகர் கார்டூமில் உள்ள முக்கிய தளங்களை கைப்பற்றியதாக இரு தரப்பும் உரிமை கோருகின்றன.

தலைநகரில் உள்ள பொது மக்கள் வெடிப்புகள் மற்றும் துப்பாக்கிச் சூடுகளில் சிக்கியுள்ளனர்.

காயமடைந்தவர்களை வெளியேற்றுவதற்கு அனுமதிக்கும் வகையில் கடந்த ஞாயிறு காலை தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. கார்டூமில் உள்ள மருத்துவமனைகளின் நிலைமை மோசமடைந்திருப்பதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.



நாட்டின் இராணுவத் தலைவர்கள் இடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியே தற்போதைய மோதலுக்கு காரணமாகியுள்ளது. ஆட்சியை சிவில் நிர்வாகத்திற்கு கையளிப்பது குறித்து இரு தரப்புக்கும் இடையே முரண்பாடு வெடித்துள்ளது. சூடானில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ஒமர் அல் பஷீரை பதவி கவிழ்த்த 2019 இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னர் அந்நாட்டை இராணுவ ஜெனரல்களே ஆட்சி புரிந்து வருகின்றனர்.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் சண்டையை உடன் நிறுத்துமாறு இரு தரப்புகளையும் கேட்டுக் கொண்டுள்ளன. இரு தரப்பு தலைவர்களையும் தொடர்பு கொண்டு மோதலை முடிவுக்குக் கொண்டு வருமாறு ஐ.நா பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சீன அமைச்சர் புட்டினுடன் பேச்சு



சீன பாதுகாப்பு அமைச்சர் லீ ஷாங்பூ மொஸ்கோவில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பில் இரு நாடுகளின் இராணுவ ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய லீ ஷாங்பூ, இரு இடதுசாரி கொள்கையுடைய நாடுகளுக்கும் வலுவான நட்பு இருப்பதாக தெரிவித்தார்.

சீன–ரஷ்ய நட்பில் எந்தவித எல்லையும் இல்லை என்று சீனா தெரிவித்துள்ளது. இந்த சந்திப்பின்போது ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கய் சோய்குவும் உடன் இருந்தார்.

கடந்த மாதம் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மொஸ்கோவில் புட்டினை சந்தித்துப் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## விருது நிகழ்ச்சியில் பங்கேற்ற 11 பேர் வெப்பம் தாக்கி பலி

இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலத்தில் விருது நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற 11 பேர் வெப்பம் தாக்கி உயிரிழந்திருப்பதோடு மேலும் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரச அனுசரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) நடந்த இந்த விழா கடும் சூரிய வெப்பத்திற்கு மத்தியில் திறந்த வெளியில் பல மணி நேரம் இடம்பெற்றுள்ளது.

ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இந்த நிகழ்வு முக்கிய சமூக ஆர்வலர் ஒருவருக்கான பாராட்டு நிகழ்வாகவும் இருந்தது. நிகழ்ச்சியில் பங்கேற்ற பலரும் நீரிழப்பினாலும் வெப்பம் தொடர்பான ஏனைய நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வர்த்தக மையமாக உள்ள மும்பை நகருக்கு நெருக்கமான நவி மும்பையில் இந்த நிகழ்வு இடம்பெறும்போது அங்கு, வெப்பநிலை 38 பாகை செல்சியஸ் இருந்துள்ளது. இந்தியாவின் மிக வெப்பமான மாதங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்தக் காலப்பிரிவில் உச்ச வெப்பநிலை உள்ள காலை 11 தொடக்கம் மாலை 4 மணி வரையான காலத்தில் சூரிய வெப்பத்தில் இருந்து விலகி இருக்கும்படி மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

எனினும் நேரடியாக சூரிய ஒளி படும் வகையில் ஆயிரக்கணக்கானவர்கள் திறந்த வெளியில் இருப்பது இந்த நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படத்தில் தெரிகிறது.

மாண்டோருக்கு 6,000 டொலர் இழப்பீடு கொடுக்கப்படும் என்று மஹாராஷ்டிரா மாநில அதிகாரிகள் தெரிவித்தனர்.



## பூட்டான் அபிவிருத்தி: உதவிகள் அதிகரிப்பு

பூட்டானின் 13ஆவது ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்திற்கான ஒத்துழைப்பை அதிகரிக்கத் தீர்மானித்துள்ள இந்தியா, அயல்நாடு என்ற வகையில் மேலதிகக் கடன் வசதியை அளிக்கவும் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்புக்களை மேம்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவையும் பூட்டானையும் இணைக்கும் முதலாவது ரயில் இணைப்புத் திட்டமாக விளங்கும் உத்தேச கோக்ராஜர்–ஜெலெபு ரயில் இணைப்பு திட்டத்தைத் துரிதப்படுத்தவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.